ஒரு மர்மம் கேளுங்கள்!
கோபு: ஏண்டா சுந்து! இன்னிக்கு வாத்தியார் ஏண்டா சிடுமூஞ்சியா இருக்கார்?
சுந்து: பொடி டப்பி மறந்து போயிடுத்து. வாத்தியாருக்கு மூஞ்சியிலே எள்ளும் கொள்ளும் வெடிக்கறது.
(மறு நாள்)
கோபு: இன்னிக்கு நம்ப வாத்தியாரோட ஜோரைப் பார்த்தயா?
சுந்து: எல்லாம் அந்த N. V. ஷண்முகம் பொடியின் மகிமை தான்.
N.V. ஷண்முகம் கம்பெனியார்
NVS
த. பெ. 555. வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

படம் 12

காட்சி 2

பேசும் படம்

★ அக்டோபர் 1953 ★

1. 'பேசும் படம்' பேசுகிறது ... 4
2. நான் டைரக்டரானேன் — சுப்பு ... 5
3. சந்திரா — மூவர்ணப் படம் ... 17
4. நாராயண ராவ் — ஜி. வரலக்ஷ்மி மூவர்ணப் படம் ... 20
5. எஸ். வி. ரங்கா ராவ்—வாழ்க்கைச் சித்திரம் ... 21
6. சத்யன் — இம்மாத நக்ஷத்திரம் ... 29
7. ஆசை மகன் — திரைக்கதை, வசனம் ... 30
8. ஸ்டுடியோ விஜயம் ... 37
9. மனிதனும் மிருகமும் — படக் காட்சிகள் ... 53
10. கேள்வி பதில் ... 61
11. நான் ரஸித்த காட்சி ... 66
12. தபால் பெட்டி ... 72
13. மு. கருணாநிதி — வசனகர்த்தா ... 74
14. வீர சுந்தரி — படக்காட்சிகள் ... 77
15. ரத்ன தீபம் — விமர்சனம் ... 85
16. செய்திச் சுருள் ... 87

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 188, Royapettah High Road, Madras - 14. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath. Sole Agents for Ceylon: Mohan & Co., Ltd., 66, First Cross Street, Colombo. Sole Agent for Malaya: P. Sivaguru, 27, Scott Road, Kuala Lumpur and 8, China Street, Penang.

Editorial & Publication Offices:

188, Royapettah High Road, Madras - 14

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

'பேசும் படம்' பேசுகிறது

நல்ல படங்கள்

சென்ற ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதிக்குப் பிறகு சேர்ந்தாற்போல சில நல்ல படங்கள் வெளியாகி யிருக்கின்றன. தொழில் துறையிலே முன்னேற்றம் ஏற்படும் என்றும், படங்களின் தார்மீகத் தரம் பெருமளவு உயர்ந்து விட்டது என்றும், குறைந்த செலவிலும் நல்ல படங்களைத் தயாரிக்க முடியும் என்றும் மேற்படி படங்கள் நிரூபித்து விட்டன.

ஆகஸ்ட் 15-ம் தேதி வெளியான ஜெமினியின் ஒளவையார் ஒரு தமிழ்த் திரை இலக்கியமாக அமைந்து எல்லோராலும் பாராட்டப் படுவது தென்னிந்திய சினிமா உலகுக்கு ஒரு சுப சகுனம் என்றே கொள்ள வேண்டும்.

அடுத்து வெளியிடப்பட்ட வினோதாவின் சமூக நாவலான தேவதாஸ் ஒரு வெற்றிப் படம் என்று கூறவேண்டும். அதிகமான சம்பவங்களின்றியும் ஆழமான கருத்துக்களடங்கிய தேவதாஸ் சமூக சீர்திருத்தத்துக்கான ஒரு கேந்திர கருத்தைக் கொண்டிருக்கிறது. ஹிந்தி தேவதாஸின் தரத்தைத் தமிழ்ப் படம் எட்டாததற்கு அன்னிய மொழியாளர் அதைப் படமாக்கியதுதான் காரணம். அதே போல 'தேவதாஸ்' படத்தின் தற்போதைய சிறப்புக்கு அதன் ஆசிரியரான சரத் சந்திர சட்டர்ஜிதான் பாராட்டப்பட வேண்டியவர். ஆனால் அக்கதையைப் படமாக்கத் தேர்ந்தெடுத்த பெருமைக்கு வினோதா பிக்சர்ஸார் உரிமை பெறுகிறார்கள்.

மூன்றாவதாக வெளிவந்த மிக நல்ல படம் தேவகி போஸின் ரத்ன தீபம் ஆகும். உணர்ச்சிப் பெருக்கும், உள்ளப் போராட்டமும் நிறைந்த ரத்ன தீபம், நமது தாய் நாட்டின் பண்பாட்டுக்கும் மனோ பரிபக்குவத்துக்கும் சிறந்த எடுத்துக்காட்டு.

பிமல் ராய் தயாரித்த தோ பீகா ஜமீன் என்ற ஹிந்திப் படத்தையும் நமது தலையங்கத்திலே குறிப்பிட்டு கௌரவிப்பது நமது கடமை என்று எண்ணுகிறோம். சர்வதேச பிலிம் விழாவிலே பரிசுபெற்ற பைசைகிள் திருடன் என்ற படத்தைக் காட்டிலும் அதிக சிறப்பு வாய்ந்தது இப்படம். இம்மியளவு கூட ஆபாசமின்றி அற்புதமாக அமைந்த இப்படத்தைத் தயாரித்த பிமல் ராயை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இத்தகைய படங்களைத் தொடர்ந்து மேலும் நல்ல படங்கள் அடிக்கடி வெளிவர வேண்டும் என்பதுதான் நமது பேரவா.

நான் டைரக்டரானேன்

கொத்தமங்கலம் சுப்பு

வருஷம் சுமார் 1935. பர்மாவிலே ஐராவதி நதிக் கரையிலே ஒரு அழகான ஊர். இயற்கை எழில் பொருந்திய ரமணீயமான சோலை. பாக்கு மரங்களும் நிழல்தரும் மா, பலா முதலிய பல மரங்களும் நிறைந்த குளுகுளுவென்றிருந்த அந்தச் சோலை, ஆற்றின் கரையிலே இருந்தது. அங்கே நானும் என் முதலாளியும் நின்றிருந்தோம். என் கையிலே் ஒரு கடிதம்.

'எனக்கு இரண்டாவது குழந்தை ஆணைப் பிறந்திருக்கிறதாம். செய்தி வந்திருக்கிறது. நான் போய்வர உத்தரவு தரவேணும்' என்றேன்.

'சௌகரியப்படாது. நீ இல்லாமல் இங்கே என் வட்டிக் கடை வியாபாரமும் மற்ற வேலைகளும் என்ன ஆவது?' என்றார் முதலாளி. புரட்டாசி. மாதம் அது. சனிக்கிழமை உற்சவத்தையும் அங்கேயே செய்து விட்டு தீபாவளி சமயத்திலே ஊருக்குத் திரும்பினேன். அப்போது எனக்கு வயது இருபத்தி ஐந்து இருக்கும். வந்த இரண்டொரு மாதங்களில் என் ஆசை மனைவியை இழந்து விட்டேன்.

என் வாழ்வின் முதற் பகுதி அத்துடன் முடிவுற்றது. என் இளம் பருவ வாழ்க்கை அத்துடன் முடிந்து விட்டதாகத்தான் நான் எண்ணினேன். நான் படித்தது மூன்றும் பாரம்வரைதான். அப்போதே எனக்குத் தமிழ்ப்பற்று அதிகம். நிறைய கவிதைகளை எழுதிக் குவித்தேன். விழலுக்கு இறைத்த நீராகப்போய் விட்டன அவை. வட்டி கடை குமாஸ்தாவானேன். கற்பனைக் கோட்டை இடிந்தது. மனைவியின் பிரிவு இன்ப வாழ்வுக்கே உலை வைத்தது.

மகிழ்ச்சி வெறுப்பாகியது. எதிரே ஒரு பிரம்மாண்டமான பாலை வனமாகக் காட்சியளித்தது 'வருங்காலம்'.

'ஔவையார்' வெளிப்புறக் காட்சியில் டைரக்டர் சுப்புவும் தயாரிப்பாளர் வாஸனும்

ஊரிலேயே இருக்கப் பிடிக்கவில்லை. அப்போது கொத்தமங்கலம் சீனு லோடஸ் பிக்சர்ஸாரின் ஒரிஜினல் சாரங்கதராவில் நடித்து முடித்து அடுத்தபடியாக பட்டணத்தாரில் நடிக்கவிருந்தார். எனக்கு அவர் கடிதமெழுதினார். நானும் அவரும் கொத்தமங்கலத்தில் . பல வருஷம் ஒன்றாகப் பழகியவர்கள். எங்களை கூடப்பிறந்தவர்கள் என்று இப்போதும் கூடப் பலர் நினைக்கின்றனர். இருவரும் உயிர்த் தோழர்கள்.

பம்பாய்க்குப் போனேன். பட்டணத்தாரில் ஒரு லோபி செட்டி வேஷம் எனக்குக் கிடைத்தது. அந்த லோபி செட்டியின் கைகுட்டை தவறி கடலில் விழுந்து விடுகிறது. அதை எடுக்க அவன் கடலில் குதித்து விடுகிறான். இந்தக் காட்சி படமாக்கப்பட்டது. எனக்கு நன்றாக நீந்தத் தெரியும். ஆகவே குதித்து முழுகி உள் நீச்சலில் கொஞ்சு தூரம் சென்று காமிராவின் பிரேமுக்கு வெளியில் தலை தூக்கினேன். இடையே சுமார் நாற்பது செகண்டுகள்தான் ஆகியிருக்கும். காட்சி ரொம்பவும் இயற்கையாக அமைந்து விட்டது. யாவரும் வீடு சென்றோம்.

ஆனால் இரண்டு தினங்களுக்கெல்லாம் எனக்கு ஊரிலிருந்து ஒரு தந்தி வந்ததுதான் ஆச்சரியமாயிருந்தது. 'உன் உடம்பு இப்போது எப்படியிருக்கிறது?' என்பதுதான் அந்தத் தந்தியின் வாசகம். எனக்கு உடம்பு சரியில்லை என்று உறவினருக்கு யார் சொன்னது? சிந்தித்தேன். மறுநாள் சென்னை தினசரிகளில் செய்தியைக் கண்டு ஆச்சரியப்பட்டோம்.

''கொத்தமங்கலம் சுப்பு கடலில் மூழ்கினார். போராடிக் கரை சேர்க்கப்பட்டார். உயிருக்கு ஆபத்தில்லை.'' இந்தச் செய்தி எங்களுக்கு வேடிக்கையாக இருந்தது. அந்தப் படத்திற்குப் பிறகு எனக்கு அநேகமாகச் செட்டியார் வேஷம்தான் கிடைத்து வந்தது.

கடலில் குதித்து...

இந்த உத்தியோகந்தானா...?

பட்டணத்தார் படம் முடிந்ததும் ஊர் திரும்பினேன். பழையபடி செட்டியார் கடையில் குமாஸ்தாவாக அமர்ந்தேன். படங்களுக்கு நாம் ஏன் கதை எழுதக் கூடாது என்று தோன்றியது எனக்கு. 'சமூகத் தொண்டு' என்ற தலைப்பில் 'ஆனந்த விகட'னில் ''கல்கி'' ஒரு கட்டுரை எழுதியிருந்தார். தலைப்பு, கருத்து இரண்டும் எனக்குப் பிடித்திருந்தன. அதையே கருத்தாகக் கொண்டு ''சமூகத்தொண்டு என்று ஒரு கதை எழுதினேன். இது சுமார் 36-37-ல இருக்கும். அந்தக் கதையை மதுரை மோஹன் மூவிடோன் கம்பெனியார் படமாகத் தயாரித்தனர். சந்திர மோகனா என்ற அந்தப்படத்தில் எம். கே. ராதா-டி. என். மீனாக்ஷி இருவரும் பிரதம பாகத்தில நடித்தனர். இதிலே சமூகத் தொண்டு செய்யும் காட்சியில் ஜம்னாலால் பஜாஜ் குடும்பத்தினர் தாங்களே முன் வந்து தொண்டு செய்தனர். பம்பாயில் தயாரான இப்படத்திற்கு எங்கும் நல்ல பெயர். ஆனால் இது பண விஷயத்தில் ஒரு வெற்றியாக அமையவில்லை.

இதன் பிறகு ஜூபிடரிலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. அங்கே

'மைனர் ராஜாமணி,' 'அனாதைப் பெண்' இரு படங்களிலும் செட்டியார் வேஷத்தில் நடித்தேன். கதை, வசனம், பாடல் எல்லாவற்றிலும் எனக்கு ஈடுபாடு உண்டு. அதற்கு சமூகத் தொண்டு வெகுவாகப் பயன்பட்டது. எனது வாழ்வே பாதி இலக்கியமும் பாதி பட உலகமுமாக அமைந்து விட்டது. இயன்ற போதெல்லாம் ஏதாவது எழுதிக் கொண்டேயிருந்தேன்.

அப்போது சௌண்ட் ஸிடி ஏ. நாராயணன் இருந்தார். அவருக்குப் பணம் கேட்காமல் எழுத—உதவி புரிய ஆள் தேவை; எனக்கு எழுத-தொண்டு புரிய இடம் தேவை. இந்த நிலையிலே எனக்கும் நாராயணனுக்கும் இடையே ஒரு அலாதி பிணைப்பு ஏற்பட்டதில் வியப்பில்லை. அதை ஒரு பந்தம் என்றே சொல்வேன். படங்களில் என் பாடல்களும் வசனமும் வரும். ஆனால் என் பெயர் வராது. எழுதுவது தான் எனக்கு அப்போது ஆசை. புகழ் பெறும் ஆசையே இல்லை.

எனக்கு இரண்டாவது மணமாக ஏற்பாடாயிற்று. கையிலோ பணமில்லை. நாராயணனிடம் கேட்டேன். இருநூற்றைம்பது ரூபாய்க்கு ஒரு 'செக்' கொடுத்தார். மணத்தன்று முதல் நாள் பாங்கிக்குச் சென்ற போது 'செக்'குக்குப் பணமில்லை என்று தெரிந்தது. எனக்கு ஒரே ஆத்திரம். மணமானதும் அந்தச் செக்கைப் படம் போட்டுமாட்டி விடத் தீர்மானித்தேன். அப்போது தானே அதைப் பலர் பார்த்து நாராயணனுக்கு அவமானம் ஏற்படும்?

மணமாகி விட்டது. அதற்கு நாராயணன் வரவில்லை. மறுதினம் காரில் வந்தார். காரில் ஏறச் சொன்னார். கோபத்தை அப்போதைக்கு வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் ஏறி உட்கார்ந்தேன். நேரே ஜவுளிக் கடைக்கு அழைத்துச் சென்றார். சுமார் இருபது புடவைகளையும் ஒரு டஜன் வேஷ்டிகளையும் எடுத்துப் போடச் சொன்னார். தேவையானதை எடுத்துக் கொள்ளச் சொன்னார். வேண்டா வெறுப்புடன் சாதாரணமானதை எடுத்தேன். அவரே சுமார் இருநூறு ரூபாய் விலையுள்ள பட்டுப் புடவையையும் தொண்ணூறு ரூபாய் மதிப்புள்ள வேஷ்டி உத்தரீயமும் எடுத்துக் கொடுத்தார். இருபது பூமாலைகள் வாங்கினார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. 'இரவு உன் மனைவி, உறவினர்களுடன் ஸ்டுடியோவுக்கு வா. வண்டி அனுப்புகிறேன்' என்றார்.

இரவு வண்டி வந்தது. ஸ்டுடியோவுக்குச் சென்றேன். சுமார் அறுநூறு பேருக்குச் சாப்பாடு நடந்தது. எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் மட்டும் நூற்றுக்கு மேற்பட்டவர் வந்திருந்தனர்.

"சுப்பு ஒரு சிறந்த அறிஞர். எனக்குப் பலவிதத்திலும் உதவி புரிந்திருக்கிறார். இந்த விருந்து அவர் சார்பில் ஏற்பாடானதுதான். அவருடைய பிரதிநிதியாகத்தான் உங்களை யெல்லாம் அழைத்திருக்கிறேன்" என்றெல்லாம் என்னைப் பிரமாதமாகப் புகழ்ந்து பேசினார் நாராயணன். எனக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது அத்துடன் எனக்கும் என் குடும்பத்தினருக்கும் தான் தயாரித்த படங்களைப் போட்டுக் காட்டினார். இரவு நேரங்கழித்து வீடு திரும்பியதும் முதல் காரியமாக 'செக்'கைக் கிழித்துப் போட்டுவிட்டேன். அதன் மூலம் "கடமையைச் செய். பலனை எதிர்பார்க்காதே" என்பதை நான் தெரிந்து கொண்டேன்.

நாராயணனிடமிருந்து விலகியதும் மயூரா பிலிம்ஸாரின் 'அதிருஷ்டம்' படத்தில் நடிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. அது ஒரு அசட்டுக் குடியானவனின் வேஷம். எனக்கு அதில் நடிக்க விருப்பமில்லை. ஆனால் பணம் வாங்கி விட்டதால் வேண்டா வெறுப்புடன் நடித்தேன். வி. வி. சடகோபன், சூர்யகுமாரி முதலியோர் அதில்நடித்தனர்.



ரேடியோவில் சந்தர்ப்பம்...

சன்மானம்
வாங்கவில்லை...

சுமார் 1939-ல் எனக்கு டைரக்டர் சுப்பிரமணியத்தின் பரிச்சய மேற்பட்டது. எனக்கு காண்டிராக்ட் பேசி நடிப்பதைவிட ஸ்திரமாக மாதச் சம்பளத்தில் வேலை செய்யவே விருப்பம். சுப்ரமணியத்திடம் மாதச் சம்பளத்தில ஏற்பாடு செய்து கொண்டு மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷனில் வேலைக்கமர்ந்தேன். அப்போது அதுதான் மிகப் பிரபல-பெரிய படக்கம்பெனி. எனக்கு உழைப்பதற்கு நல்ல நிறைய வாய்ப்பு கிடைத்தது. அங்கே பாவாடை சரிபார்ப்பது முதல் உதவி டைரக்ஷன் வரை எல்லாவற்றிலும் எனக்கு ஈடுபாடு இருந்தது. கச்சதேவயானி, சூர்யபுத்திரி இரு படங்களிலும் நடித்தேன். மற்ற பொறுப்புக்களும் உண்டு. அய்யருக்கு என்னிடம் அன்பு அதிகம். நன்கு உழைத்தேன். பாராட்டப்பட்டேன். சூர்யபுத்திரியில் கதை, வசனம், பாட்டு இவற்றுடன் இரு வேஷங்களில் நடிக்கவும் செய்தேன்.

என் மனைவிக்கு ஸ்டூடியோ பார்க்க வேண்டுமென்று ஆசை. கணவன் பெரிய முதலாளி என்று அவளுக்கு எண்ணம்! ஒரு நாள் ஸ்டூடியோவில நான் தேவயானி அணிய வேண்டிய பாவாடை, தாவணி முதலியவைகளைக் கையில் வைத்துக் கொண்டு நின்றிருந்தேன். என் மனைவி வந்து என்னைப் பார்த்தாள், ஏளனமாகச் சிரித்தாள்.

"இந்த உத்தியோகந்தானு உங்களுக்கு? இதை வீட்டில் செய்யப்படாதோ?" என்று கேட்டுத் தோளில் இடித்துக் கொண்டாள்.

"இதுக்குத்தான் உன்னை இங்கேயெல்லாம் வரக்கூடாதுன்னு சொன்னேன்!'' என்று விறைப்புடன் கூறிவிட்டு உள்ளே சென்று விட்டேன்!

இந்த இரண்டு படங்களுக்குப் பின் மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பொரேஷன் பல காரணங்களால் சரிவர நடைபெறவில்லை. என் மனதில் ஒரே போராட்டம். இதன் இடையே ரேடியோவில் மாதத்தில் மூன்று நான்கு முறை சந்தர்ப்பம் பெற்று வந்தேன். அதைத் தொடருவதா சினிமாவில் வேறெங்காவது பணிபுரிவதா என்று புரியாமல் திணறினேன். பெரும் பொறுப்பேற்று நிறைய செய்யவும், சினிமா மூலம் நாட்டுக்கு உழைக்கவும் எனகரு ஆசை. அதே சமயம் ஹநுமான் மற்றும் பல பத்திரிகைகளில் நிறைய கதை, கவிதைகள் எழுதிக் குவித்துக் கொண்டிருந்தேன். ஏராளமான இலக்கிய நண்பர்களிருந்தனர். எப்படியும் சினிமாவில் பணிபுரியவே எனக்கு ஆசை அதிகமாயிருந்தது.

நான் வேலை செய்த மோஷன் பிக்சர்ஸ் ஸ்டூடியோவையே ஸ்ரீ வாஸன் விலைக்கு வாங்கி விட்டதாக அறிந்தேன். நான் ஒரு இலக்கிய-சினிமா தொண்டன். சிரிக்காதே, அப்பாவி, திருநீலகண்டர் முதலிய படங்களில் நடித்திருந்தேன். நிறைய எழுதிக் கொண்டிருந்தேன். பத்திரிகைகளிலும் நான் சன்மானம் வாங்கவில்லை. அதற்குப் புத்தகங்களாக வாங்கிக் கொண்டு விடுவேன். இந்த நிலையில் நான் வேலை செய்த ஸ்டூடியோவை ஸ்ரீ வாஸன் வாங்கி விட்டதால் அவரிடம் வேலை செய்ய விரும்பினேன்.

இந்த ஆசை எனக்கு ஏற்பட்ட வுடனே இரண்டு தினங்கள் சென்றதும் நான் ஸ்ரீ வாஸன் அவர்களிடம் சென்றேன். இதற்கிடையே பல இடங்



சுப்ரமணியத்தின்
பரிச்சயம்...

களிலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. நான் ஏற்கவில்லை. ஸ்ரீ வாஸனிடம் பணிபுரிய விரும்பிற்று என் மனம். நேரில் கண்டேன். எல்லாவற்றுக்கும் ஒப்புக் கொண்டார். ஆனால் 'வேறு எங்கும் வேலை செய்யக் கூடாது' என்றார். ரேடியோவில் மட்டும் பணிபுரிய அனுமதி கேட்டேன். மறுத்து விட்டார் அவர். நான் சனியன்று சென்றிருந்தேன். திங்களன்று கூறுவதாகச் சொல்லித் திரும்பினேன்.

அப்போது ஜி.டி. சாஸ்திரி சென்னை ரேடியோ நிலைய டைரக்டராக இருந்தார். அவரிடம் விவரமாக எல்லாவற்றையும் சொன்னேன்.

'ஸ்ரீ வாஸன் ஒரு சிறந்த மனிதர். அவர் சேவையினால் சினிமா உலகம் பிரபலமும் கௌரவமும் அடையும். அவரை நீங்கள் விட்டு விடாதீர்கள். வருஷத்தில் ஆறு புரோகிராம்களுக்கு மட்டும் அனுமதி கேளுங்கள்'' என்றார் சாஸ்திரி. தீர்க்கதரிசி அவர்!

திங்களன்று ஸ்ரீ வாஸனைச் சந்தித்தேன். விஷயத்தை விவரித்துக் கூறினேன். ரேடியோ மூலம் அதிக வருமானம் கிடையாது. ஆனால் எழுதுவதற்கு அதன் மூலம் நிறைய வாய்ப்பு உண்டு. — என் தாயகம் என்பதை விளக்கினேன். ஆறு புரோகிராம்களுக்கு அனுமதி தந்தார். ஜெமினியில் வேலை ஏற்றேன். என் வாழ்வில் இரண்டாவது திருப்பம் அது. முக்கியத்துவம் நிறைந்ததும்கூட. ஸ்திரமற்ற நிலையிலே :பட உலகிலும் இலக்கிய உலகிலுமாகத் திண்டாடிக் கொண்டிருந்த எனக்கு இரு வகையிலும் பணிபுரிய உதவியது ஜெமினி ஸ்தாபனம். ஸ்ரீ வாஸன் ஆறு புரோகிராம்களுக்கு அனுமதி தந்தார். ஆனால் 'கரியாகிப்பரியாகி காரெருமை தானுமாகி' என்று ஔவை பாடியது போல, ஆறு நான்காகி, நாலு இரண்டாகி இப்போது நேரம் கிடைத்து ஒன்று நடப்பதே அபூர்வமாகி விட்டது! இதுவரை ரேடியோவுக்கென அறுநூறு பாடல்கள் இயற்றியிருக்கிறேன். சுமார் நூற்றிருபது நாடகங்கள் எழுதித் தயாரித்தேன். நிறைய பேசியிருக்கிறேன். இப்போதெல்லாம் வாய்ப்பும் ஓய்வும் கிடைப்பதில்லை.

கிழவியும் குழவியும் கைகூப்பி...

1941-ம் ஆண்டில் நான் ஜெமினியில் சேரும்போதே ஸ்ரீ வாஸன் தன் லட்சியங்களைப் பற்றிச் சொன்னார். அதன்படி இதுவரை நடந்து வருவதுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. பணமோ, மனிதர்களோ அவரது லட்சியத்தை மாற்றாதது ஆச்சரியமே!

கதை, வசனம், பாட்டு, நடிப்பு, உதவி டைரக்ஷன் இவ்வளவு பொறுப்புக்களுடனும் அங்கே நான் வேலைக்கமர்ந்தேன். மதனகாமராஜன் படம் தயாராக ஏற்பாடுகள் நடந்தன. மைசூரிலுள்ள ஸ்ரீரங்கப்பட்டணத்திற்கு நாங்கள் சில காட்சிகளைப் படம் பிடிப்பதற்காகச் சென்றோம். ஒரு இடத்தில் ஒரு மரத்தில் ஒருவன் இலை பறிப்பதாக ஒரு காட்சி, காமிரா தயாராக இருந்தது. எல்லோரும் காட்சியைக் காமிரா மூலம் பார்த்தோம். ரொம்பத்தரமாக அமைந்திருந்தது. காமிராமேன் பார்த்தார். எல்லாம் சரியாக இருக்கிறதென்றார்

ஸ்ரீ வாஸன் வந்தார். அதே காமிரா மூலம் பார்த்தார். 'இந்தக் காட்சி நன்றாக இருக்காது—இருக்க முடியாது' என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னார். எங்களுக்கு அவரிடம் வருத்தம். இதைப்போய் நன்றாக இருக்க முடியாது என்கிறாரே என்று அலக்ஷியமாகச் சிரித்தார்கள் அவர்கள். காட்சி படமாக்கப்பட்டது.

போட்டுப் பார்த்தோம். சகிக்க வில்லை. பச்சை மரத்திற்குப் பின்னால் இன்னொரு பச்சை மரம் இருந்தால் அது எடுபடாது என்று ஸ்ரீ வாஸன் கூறியது சரியாகி விட்டது. அந்த முதல் தடவை காமிரா பார்வை மூலமே பட உலகைப் பிடித்து விட்டார் எங்கள் தலைவர். பட உலகம் எப்படிப்பட்டது என்பதை அந்த முதல் பார்வையிலேயே தீர்மானம் செய்து விட்டார் அவர். அந்தக் காட்சியை வெட்டி எடுத்து விட்டோம். காட்சி பிரமாதமாக இருந்தால் போதாது, கண்ணுக்கும் கருத்துக்கும் அழகாக அது படவேண்டும் என்பதைக் கண்டு கொண்டோம்.

ஒருநாள் மைசூரைச் சுற்றிப் பார்க்கப் போய் வருவதற்கு அனுமதி கேட்டேன். 'சரி' என்றார் ஸ்ரீவாஸன். சுமார் பத்தடி தூரந்தான் நடந்திருப்பேன்.

'இங்கே வா' என்றார். திரும்பி வந்தேன். 'நாம் இங்கே வேலை செய்வதற்கு வந்திருக்கிறோம். வேடிக்கை பார்க்கப் போவதாகச் சொல்லுகிறாயே? வேலையைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும் தெரியுமா? வேடிக்கை பார்ப்பதற்கு என்று கிளம்பினால்தான் அந்த வேடிக்கையை அனுபவிக்க முடியும். வேலை செய்யும் போது வேடிக்கை பார்க்கப் போனால் அதில் மனம் லயிக்காது. நீ போய் வா' என்றார். அதன் பிறகு போவதற்கு எனக்கென்ன பைத்தியமா என்ன?



நாராயணராவ் அவர்களை மனதில் நினைத்துக் கொண்டு...

மைசூரிலே நல்ல மழை; ஒரே குளிர்; அருமையான சமையல்; சம்பிரமமான சாப்பாடு. எல்லாம் பகுசுகந்தான், ஆனால் நாங்கள் நினைத்தபடி காட்சிகளை படமாக்க முடியவில்லை ஆகவே அங்கிருந்து நேராக பஸ்ஸில் கள்ளிக்கோட்டைக்குக் கிளம்பினேன். நஞ்சன்கூடு வந்தது ஒரே வெய்யிலாக இருந்தது அங்கே. பஸ் ஒரு இடத்தில் 'நாஷ்டா'வுக்காக நின்றது. நான் இறங்கி காலாற நின்றேன் ஒரு மரத்தடியில். அங்கே ஒரு குடிசை. வாசலில் ஒரு கிழவி இளநீர் விற்றுக்கொண்டிருந்தாள். ஒரு இளநீர் வாங்கிக் குடித்தேன். தேங்காய் வழுவலை ருசிபார்த்து விட்டு தலையிலே கட்டியிருந்த முண்டாசுத் துணியை எடுத்து முகத்தையெல்லாம் துடைத்து விட்டுக் கொண்டேன்.

கதாநாயகன் சம்பத்தாக...

கிழவி என்னைக் கூர்ந்து கவனித்தாள். உட்பக்கம் திரும்பி கன்னடத்தில் ஏதோ சொன்னாள். ஒரு குழந்தை வெளியே ஓடி வந்து நின்றது. அவ்வளவு தான், கிழவியும் குழவியும் கைகூப்பிய வண்ணம் என்னை வலம்வர ஆரம்பித்து விட்டனர். எவ்வளவு சொல்லியும் நிறுத்தவில்லை. வலம் வந்து முடிந்ததும் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து எழுந்தனர். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அவர்களை என்னுடன் வந்த ஒரு நண்பர் விசாரித்தார் 'சூர்யபுத்திரி'யில் சூரியனாக நான் நடித்ததற்காகத்தான் இந்தக் கலாட்டா என்று தெரிந்தது. எப்படியிருக்கிறது கதை? அப்போதுங்கூட படம் வேறு, இயற்கை நிகழ்ச்சிகள் வேறு என்று தெரியாத அப்பாவிகள் இருந்தனர். ஞானசூனியனான என்னை அறிவொளி என்று தீர்மானித்து விட்ட கிழவி எவ்வளவு சொல்லியும்கூட இளநீருக்குப் பணம் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டாள். அன்று முதல் எனக்கு ஒரு ஆசை. நல்லவன் பாத்திரத்தில் நடித்ததற்கு இவ்வளவு நல்ல பிரதி பலன் கிடைத்

திருக்கிறதே. இனி நல்லவன் வேஷத்திலேயே நடிக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டேன். ஆனால் என் தீர்மானம் என்னுடன்தான் நின்று கொண்டது.

மறு வருஷத்தில் அதாவது 1942–ல் 'நந்தனார்' படம் தயாரிக்க ஏற்பாடுகள் நடந்தன. எனக்கு அதில் அலாதி தெம்பு. ஏனெனில் நான் காரைக்குடியில் இரும்பு, மரக்கடையில் முன்பு வேலை செய்திருந்தேனல்லவா? அப்போது பகவத் குணம்ருதீ வர்ஷணி சபை என்ற நாடக சபையை கவி குஞ்சர பாரதியின் பேரர் மு. வெங்குசாமி அவர்கள் நடத்தி வந்தார்கள். தமிழிலும் கலையிலும் சிறந்த பாண்டித்தியம் உடையவர் அவர். அவரிடம் எப்படியும் வேலை செய்ய எனக்கு ஆசை. சம்பளமில்லா விட்டாலும்கூட எப்படியும் அந்த நாடக சபையில் நடிக்கத் தீர்மானித்தேன் நான். அதற்கு எத்தனையோ சிபார்சுகள் பெற்று ஒருவிதமாகச் சந்தர்ப்பம் பெற்றேன். அந்தச் சபை 'நந்தனார்'. 'வள்ளி' இரண்டே நாடகங்களைத்தான் நடத்தியது. அதற்குப் பிறகு பிரமாதமான புகழ். அந்த நந்தனார் நாடகத்தில் பனிரெண்டு வேஷங்களில் நடிப்பேன். இருபத்தியொன்பது அப்ளாஸ்கள் விழும். எனக்கு இந்த நாடகத்திலே பிரமாத புகழ் கிடைத்தது. அநேகமாக நந்தனார் கதையும் பாடல்களும் எனக்குத் தலைகீழ்ப் பாடம். ஒரு நாள் முப்பது அப்ளாஸ் விழுந்து விட்டது. அப்போதெல்லாம் அப்ளாஸ் யாருக்குக் கிடைக்கிறதோ அவர்தான் திறமைசாலி என்று அர்த்தம்.

எனக்கு அன்று கணக்கப்பிள்ளை வேஷம். ஸ்டேஜில் கணக்குப்பிள்ளையின் மேஜைக்கடியில் நான் உட்கார்ந்திருந்தேன். எனது மாஜி முதலாளி நூர்முகம்மது ராவுத்தர் சபையில் எதிரே உட்கார்ந்திருந்தார். என் சம்பந்தப்பட்ட காட்சி முடிந்து விட்டது. 'கிரீன்' ரூமுக்குள்ளே நின்று கொண்டிருந்தேன். ராவுத்தர் வந்தார்.

"ஏய்யா மணி! எங்கிட்ட கணக்குப்பிள்ளே வேலையை விட்டுட்டு வந்தியே. இங்கென்ன வாழுதாம்? கரகோஷம் சாதம்:] போடாதய்யா. என்னிடமே வந்து விடு' என்றார். பேசாமல் அவருடன் கிளம்பினேன்.

இப்படி எனக்கு நந்தனார் சம்பந்தமாக ஏற்கெனவே ஏற்பட்டிருந்த அனுபவமும் பயிற்சியும் ஜெமினி நந்தனாருக்குப் பாடுபட பெரிதும் உதவியாயிருந்தன. தமிழில் வெளி வந்த சிறந்த படங்களுள் ஒன்று ஜெமினி தயாரித்த 'நந்தனார்'. நான் அதற்குப் பெரிதும் பாடுபட்டேன். அடுத்தபடியாக 'தாஸி அபரஞ்சி' தயாராகியது. அதற்கு வசனமும் பாடல்களும் நான் அமைத்தேன். வசனம் ரொம்பவும் உயர்தரமாக இருந்ததாக எல்லா பத்திரிகைகளும் ஒரு முகமாகப் பாராட்டி எழுதின. இதனிடையே 'பக்த நாரதர்' படத்திலும் நான் பங்கு கொண்டேன்.

தொடர்ந்து ஜெமினியின் 'மங்கம்மா சபதம்' வந்தது. அந்தப் படத்திலே எனக்கு ஒருசிறு வேஷம். மஹாராஜா தூங்கி வழிந்தபடி ராமாயணம் கேட்கிறார். உச்சிக்குடுமியுடன் ஒருவர் ராமாயணம் சொல்கிறார். எனக்கோ கிராப்புத்தலை. மொட்டையடித்துக் கொண்டு உச்சுக்குடுமி வைத்துக் கொள்ளவேண்டும். படத்தில் அந்தக் காட்சியே சுமார் நாற்பது விநாடிகள்தான் வரும். சரியென்று மொட்டையடித்துக்கொண்டு உச்சிக் குடுமியும் வைத்துக்கொண்டேன். படமெடுத்தாகி விட்டது. ஆனால் சிற்சில காரணங்களால் அந்தக் காட்சி வெட்டப்பட்டு விட்டது! தலையும் கத்தரித்துக் கொண்டாகி விட்டது. நடித்த காட்சியும் கத்தரிக்கப்பட்டு விட்டது! ஆனாலும் படத்திற்காக–

ஔவை கதையை அமைப்பதில்...

சௌக்கியத்துக்கு
என்னங்க
குறைச்சல்?...

கடமைக்காக தலையை தியாகம் செய்தோம் என்ற ஆத்மதிருத்தி எனக்கு!

அடுத்தது 'கண்ணம்மா என் காதலி' படம். இது முழுக்க முழுக்க ஒரு ஹாஸ்யப் படம். இதை நடைச் சித்திரம் என்றுதான் சொல்லவேண்டும். ஹாஸ்யம் இதிலே அற்புதமாக அமைந்தது இதற்கு ஒரே ஒரு காரணம்தான். எல். நாராயணராவ் அவர்களை மனதில் நினைத்துக் கொண்டு எழுதினால் அதில் ஹாஸ்யம் அற்புதமாக அமையத்தான் செய்கிறது. கண்ணம்மா என் காதலியின் சிறப்பு நாராயண ராவைத்தான் சேரும். முதன் முதலாக நான் தனிப் படப் பொறுப்பேற்று டைரக்ட் செய்த படம் கண்ணம்மா என் காதலிதான். கதை, வசனம் இரண்டும் நான் எழுதினேன். பாடல்களை சோமயாஜுலுவும் நானும் எழுதினோம். கே. ராம்னாத் அவர்கள் எனக்கு நிறைய உதவிபுரிந்தார்கள். அப்போது யுத்த சமயம். அதில் நான டைரக்டர் என்ற அளவில் பிரமாதமாக ஒன்றும் செய்ய சந்தர்ப்பம் இல்லை.

அடுத்த படம் மிஸ் மாலினி. எனக்கு மகத்தான புகழ்தந்தபடம் இது. வசனமும் பாடல்களும் ரொம்பவும் பிரபலமாகி விட்டன. நானே கதாநாயகன் சம்பத்தாக நடிக்கவும் செய்தேன். நானே சம்பத்தாகி விட்டேன் என்று பாராட்டினார்கள். 'வாழ்க்கையிலும் நீங்கள் சம்பத்தானா? எப்படி இவ்வளவு இயற்கையாக நடிக்க முடியும்' என்று விசிறிகள் எழுதிக் கேட்டார்கள்! ஆறு மாதகாலத்தில் ஒரு நாளைக்கு இரு முறை மிஸ் மாலினி பாடல்கள் ரேடியோவில் அமர்க்களப்பட்டன. எனக்கு மட்டும் ஒரே ஒரு குறை. என்னதான் இருந்தாலும சம்பத்துவின் பாத்திரமே ஒரு வஞ்சகனின் பாத்திரம்தானே என்பதுதான் அது.

ஜெமினியின் பிரம்மாண்ட தயாரிப்பு 'சந்திரலேகா'. 'அதில் என் பங்கு நிறைய இருந்தது. 'நாட்டியக் குதிரை' பாடல் ஒரே நாளில் மிகப் பிரபலமாகி விட்டது. ஜெமினியின் வெற்றிக்கே கூட்டு முயற்சிதான் காரணம் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். நான் அள்ளி அள்ளிக் கொடுப்பேன். ஸ்ரீ வாஸன் அதில் அவசியமானதை அளந்து எடுத்துக் கொள்வார். எனக்கு எழுதத் தெரியும். எது யாவருக்கும் பிடிக்கும் என்பது அவருக்குத்தான் தெரியும். இப்படி ஒவ்வொன்றும் வடிகட்டி வெளி வருவதனால்தான் ஜெமினி தயாரிப்புகள் சோபிக்கின்றன. அபூர்வ சகோதரர்கள் படத்திலும் நான் பணிபுரிந்தேன்.

நந்தனார் முடிந்த வுடனேயே ஒரு பிரம்மாண்டமான பாட்டு படம் தயாரிக்கத் திட்டமிட்டோம் கே.. பி. சுந்தராம்பாளைத் தேர்ந்தெடுத்ததும் அதன் விளைவு தான். ஆனால் இப்போது வெளி வந்துள்ள அளவுக்குப் படம் அமையுமென்று நாங்கள் அப்போது எதிர்பார்க்கவில்லை.

ஔவையாரில் பல தொல்லைகள். முதலாவது பல ஔவைகளின் சரித்திரங்கள் இருந்தன. கதையை ஒழுங்காக அமைப்பதில் நிரம்ப சிரமம் இருந்தது. கதையை உருப்படியாக அமைக்க முடியாது என்று தெரிந்ததும் கருத்துக்களுக்குப் பிரதான்யம் அளித்துக் கதையைத் தொகுத்தோம். ஔவையின் கதையிலே தொடர்பு

துதிக்கையை யானை சிறிது
அசக்கியது.

கிடையாது. நிகழ்ச்சிகள் தனித் தனியே பல சந்தர்ப்பங்களில் நடைபெற்றவை. அவைகளைக் கட்டுக்கோப்புடன் அமைப்பதிலேயே பல நாட்கள் செலவழிந்தன.

முத்துக்குளிப்பவன், முத்து இருக்கும் சிப்பியுடன் மற்ற வெறும் சிப்பிகளையும் திரட்டி வருவான். கரை சேர்ந்த பிறகே முத்துச் சிப்பியைத் தெரிந்தெடுக்க முடியும். ஔவை கதையை அமைப்பதில் எனக்கு இந்த அனுபவம்தான் ஏற்பட்டது. ஒன்றல்ல. இரண்டல்ல. ஏழு வருஷங்கள் முழுக்க முழுக்க நாங்கள் ஔவையை உருவாக்குவதில் படாத பாடுபட்டோம். இடையே எத்தனை சிரமம், மனத்தாங்கல் உண்டாகும் விஷயங்கள்? அப்பப்பா, அதைச் சொல்லி முடியாது. உண்மையில் ஆகஸ்ட் சுதந்திர நாளை முதன் முதலாக இந்த வருஷம்தான் நான் மனமாரக் கொண்டாடினேன். என் தலையிலே ஒரே கனம்—இரவு பகல் எந்நேரமும் ஔவையைப் பற்றிய சிந்தனை தான்.

மனத்தாங்கல் என்றேன். ஆமாம். பலவிதமான வதந்திகள் கிளப்பி விடப்பட்டன. வதந்தி கிளப்பின அன்பர்களுக்கு என்னிடம் விரோதம் கிடையாது. எண்ணமும் கெட்டதல்ல. கற்பனையைத் தவறாக உபயோகித்தனர். என் மனம் வீண்டுபோகும் படியான வதந்திகள் கிளம்பின. நான் வருத்தத்துடன் மனமொடிந்து போய்விட்டேன்.

ஔவை குறவஞ்சி நடனத்தில் ராஜலக்ஷ்மி என்பவருக்குப் பாட வாய்ப்பு கிடைத்திருந்தது. அவர் பாடி இரண்டு வருஷங்களான பின் ஒரு நாள் என் வீட்டிற்கு வந்தார். அவர் மனதில் ஏதோ வருத்தம் ஏற்பட்டிருந்ததை முகபாவமே எடுத்துக் காட்டியது.

"சௌக்கியமா? என்ன விசேஷம்?" என்று மேலுக்குக் குசலம் விசாரித்தேன். எனக்கு ஓரளவு அவர் முகத்திலிருந்து உள்ளிருப்பது தெரிந்தாலும் கேட்டு வைத்தேன்.

அவர் முகம் வாடியது. "சௌக்கியத்துக்கு என்னங்க குறைச்சல்? நீங்களும் எவ்வளவோதான் அக்கறையுடன் பாடச் சொன்னீங்க. என் அதிருஷ்டம் இப்படி ஆச்சுது" என்று அழுதுக் கொண்டார்.

"விஷயத்தை சொல்லம்மா" என்றேன் நான்.

"படம் எரிஞ்சு போச்சாமே? நான் பாடினதெல்லாம்கூட சாம்பலாயிடுச்சாமே?" என்றார்.



விபூதியை மண்ணால் அடித்து...

எனக்கு உள்ளம் பற்றி எரிந்தது. விஷயம் நெருப்பு பற்ற வைக்கும் வரை வளர்ந்து விட்டதா?

அத்துடன் விஷயம் நின்றதா? தெரிந்தவர்களும், நண்பர்களும் கடித மூலமும் நேரிலும் துக்கம் விசாரிக்க ஆரம்பித்து விட்டார்கள். என் மனம் பட்ட பாட்டை ஈசனே அறிவார்.

ஔவை ஒரு மகோன்னத படமாக வெளிவர வேண்டுமென்று நாங்கள் விரும்பியதால், சிக்கல் நிறைந்த கதையாகவும் அது இருந்ததால் பல அறிஞர்களுக்கு அவ்வப்போது போட்டுக் காட்டினோம். அவற்றில் உருப்படியான அபிப்பிராயங்கள் இருந்ததால் ஏற்று மாற்றியமைத்தோம்.

பாத்திரத்திற்கு மெருகு போடும்போது அதைச் சீவுவது உண்டு. மோதிரத்திற்கு உருவம் கொடுக்கும்போது அதை ராவுவது உண்டு. ஔவையிலும் கட்டுக் கோப்புக்காக வெட்டு ஒட்டுகள் இருந்தன. அவ்வளவுதான்.

உதாரணமாக ஔவை 'எட்டே கால் லக்ஷணமே!' என்று பாடுவதைப் படமாக்கியிருந்தோம். ஔவை இப்படிச் சொல்வது சரியாகப் படவில்லை. வெட்டித் தள்ளிவிட்டோம். சங்கம் காட்சி பல ஆயிரம் அடிகள் எடுக்கப்பட்டது. பிறகு அவ்வளவு தேவையில்லை என்று வெட்டினோம். ஏராளமான பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப் பட்டன. பின்னர் சுமார்

நாற்பத்தெட்டைத்தான் படத்திற்கு உபயோகித்தோம். கயிலாயத்திலே சிவநடனம் ஒன்று இருந்தது. அது தேவையில்லை என்று அறிஞர்கள் அபிப்பிராயப் பட்டார்கள். வெட்டித் தள்ளினோம்

ஔவை டைரக்டர் சுப்பு...

இதெல்லாம் எதற்காக? படம் திரையிடப்பட்டபின் குறைபாடுகள் இருக்கக் கூடாது என்பதற்காகத் தான் அத்தனை பாடுபட்டோம். ஆனால் வதந்தி அன்பர்கள் தெரிந்தோ தெரியாமலோ வதந்திகளைக் கிளப்பி விட்டனர். சினிமாப் பற்றித் தெரிந்தவர்கள் இப்படிப் பொறுப்பற்ற தன்மையில் நடந்து கொண்டிருப்பார்கள் என்று நான் நம்பவில்லை. ஆனால் அதன் பலன்? மனமறிந்து ஒரு பிழையும் செய்யாத—இடைவிடாத உழைப்பிலேயே இன்பத்தைக்கண்டு பாடுபட்ட என் மனம் உடைந்து போய் விட்டது. இது எனக்கு ஆறாத புண். இதனால் வதந்தி அன்பர்கள் அடைந்த பலன் என்ன என்றுதான் எனக்குப் புரியவில்லை.

ஔவையார் யாரும் எதிர்பாராத அளவுக்குச் சிறந்த படமாக வெளி வந்து விட்டது. இன்றுதான் நான் மூச்சு விடுகிறேன். அது ஓரளவு சரியாக இல்லா விடில் என்னை உலகம் தூற்றியிருக்கும். ஸ்ரீ வாஸன் ஔவையாரை சிறந்த படமாக மட்டும் கொண்டு வரவில்லை. எனக்கிருந்த அபவாதத்தை

காந்தி மகான் கதை..!

யும் போக்கி விட்டார். என் உயிருள்ளவரை அதற்காக அவருக்குக் கடமைப் பட்டவன் நான். இந்தப் படத்திற்காக இரண்டு மூன்று தடவை ஸ்ரீ வாஸனின் உயிருக்கே ஹானி ஏற்பட்டது.

ஔவைக்காக யானைக் காட்சி தயாரிக்கப்பட்டதே, அது ஒரு விசேஷமான கதை. பின்னொரு சமயம் விவரமாக அதைப் பற்றிக் கூறுகிறேன். ஓரிரு சம்பவங்களை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன். தெய்வீகனாக ஜெமினி கணேசன் நடித்தாரல்லவா? அவரைத் தூக்கி வரும் யானையின் முன்பு அவரை நிற்க வைத்து 'ஸ்டில் போட்டோ' எடுக்க ஏற்பாடாயிற்று. கணேசன் யானையிடம் கொஞ்ச ஆரம்பித்தார். முதலில் துதிக்கையைத் தட்டிக் கொடுத்தார். யானை சும்மா இருந்தது. தந்தத்தைப் பிடித்து அசைத்தார். அப்போதும் சும்மா யிருந்தது. பிறகு கன்றுக்குட்டியை அணைப்பதுபோல் அணைத்து முத்தமிட்டார். யானை கடைக்கண்ணால் அவரைப் பார்த்தது. துதிக்கையைச் சிறிது அசைத்தது. கணேசன் காமிராவுக்குப் பின்னால் போய் விழுந்தார். "என்னதான் சும்மா இருந்தாலும் என்னைக் கன்றுக்குட்டி என்று நினைத்து 'முத்தமிட்டு விட்டாய்?" என்று கேட்பது போல் நின்றது அந்த யானை!

யானைகளுக்கு விபூதி பட்டைபோட பெயிண்டர்களை அழைத்துச் சென்றிருந்தோம். யானைத் தந்தத்தில் நின்று பிரஷ்ஷினால் பெயிண்ட் அடிப்பார்கள். யானை குறும்புக்கு அசைக்கும். அவ்வளவுதான்! பெயிண்ட் நிறைந்த வாளியுடன் கீழே விழுவார் பெயிண்டர். அவர் உடம்பு முழுதும் 'பெயிண்டாபிஷேகம்' நடக்கும். அப்படிச் சும்மாயிருந்தாலும் பொட்டிடுவதற்குள் விபூதியை மண்ணாலடித்துக் கலைத்துவிடும் இந்த யானைகள். அவைகளுக்குக் குஷி, நமக்குப் பிராணன் போய்விடும்!

நடிகர்களுக்குத்தான் ரிஹர்ஸல் என்றால் யானைகளுக்கும் உண்டு. சிலருக்கு காமிராக் கூச்சம் இருப்பது போல யானைகளுக்கும் உண்டு. சில யானைகள் காமிராவைக் கண்டதும் பிளறிக்கொண்டு ஓட ஆரம்பித்து

விடும். இதற்காக ஒரு திடலில் நூறு யானைகளையும் காமிராவுக்கு முன் நிறுத்தினோம். யானைகள் பல திக்கிலும் ஓடாதிருக்க பாதையின் இரு புறமும் வேலியமைக்கப்பட்டது. யானை அந்தப் பாதைக்கு நேராக காமிராமேல் வந்து விழக்கூடாதே! அதற்காக மண்டயம் என்ற ஊரிலிருந்து லாரிகளில் வெல்லம், தேங்காய் கரும்பு இவைகளை வரவழைத்தோம். எங்கே யானைகள் நிற்கவேண்டுமோ அங்கே தேங்காய் முதலியவைகளைக் கொண்ட லாரி நிற்கும். யானை எவ்வள்வு வேகமாக வந்தாலும் அந்த இடம் வந்ததும் நின்றுவிடும். அளவுக்கு மீஞ்சிய தீனியால் சில யானைகளுக்கு உடம்புக்கு ஒத்துக்கொள்ளவில்லை யென்றால் எவ்வளவு செலவாகியிருக்கும் பாருங்களேன்! ஔவைக்காக ஸ்ரீ வாஸன் யானை கட்டித் தீனிபோட்டார்!

யானை காட்சி முடியும்போது யானைகள் பருத்திருந்தன. வால் மயிர் சிறுத்து மொட்டையாகவும் ஆகிவிட்டது. பல காரணங்களுக்காக யானை வால் மயிரை எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள் பலர்.

ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் எங்களுடன் ஒத்துழைத்ததைப் பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியாது. சிறிது நேரம் கூட தவறாமல் வேண்டிய போதெல்லாம் வந்து எங்களுடன் பரிபூரணமாக ஒத்துழைத்தார் அவர். நாலு மணிக்கு வருகிறேன் என்றால் அவர் கார் அதே நாலு மணிக்கு வந்து செட்டிலே நிற்கும். அவர் வருவதைக் கண்டு நான் மணியை தெரிந்து கொள்வேன். இப்படி ஒரு நாளா இரண்டு நாளா? ஏழு வருஷங்கள் ஒத்துழைத்தார் கே. பி. சுந்தராம்பாள். மற்றும் ஸ்தாபன நடிகர்கள் அத்தனை பேரும் இதைச் சொந்த விஷயமாகப் பாவித்து ஒத்துழைத்தார்கள். பலரது ஒத்துழைப்பும் இன்றி 'இப்படிப்பட்டதொரு படம் வெளிவர முடியுமா?

ஸ்ரீ வாஸன் ஒரு சிறந்த அறிவாளி. அறிவு, தமிழன்பு, பணம் மூன்றும் அவரிடம் இருந்தன. கொத்தமங்கலம் சுப்பு ஒரு டைரக்டர் என்றால் அப்படி என்னை மாற்றிய



ஸ்ரீ வாஸன் ஒரு சிறந்த அறிவாளி...

பெருமை ஸ்ரீ வாஸன் அவர்களைத் தான் சேரும். இலக்கியத் துறையிலே காந்தி மகான் கதையும், பட உலகிலே ஔவையும் என் இரு கண்கள். ஸ்ரீ வாஸனின் அரவணைப்பிலே பிறந்தவைதான் இவை.

பிறந்த கதை வேண்டுமா, வளர்ந்த கதை வேண்டுமா என்பார்கள் பெரியோர்கள். நான் பெரியோனில்லேனாயினும் நான் பிறந்து, வளர்ந்து. டைரக்டரான கதை இது. . .



ராஜ கட்டத்தில் சுப்புவின் காந்தி மகான் கதை நடக்கிறது ..

தாம்பூலச் செலவு

காலணுதான்!

ஸ்டூடன்ஸ்

உபயோகியுங்கள்

ச ந் தி ரா

ரேவதி புரொடக்ஷன்ஸ் "மனி
தனும் மிருகமும்" படத்தில்
தோன்றும் புதுமுகம்.

★

விஜயா புரொடக்ஷன்ஸின் 'சந்திரஹாரம்': ஒரு பிரமாதமான தயாரிப்பு.
ஏராளமான பொருட் செலவில் பிரம்மாண்டமான காட்சி ஜோடனை...



...களுடன் தயாராகும் இதில் பிரபல நக்ஷத்திரங்கள் நடிக்கின்றனர். வாஹினியில் தயாராகும் இப்படம் விரைவில் திரைக்கு வரவிருக்கிறது.





ஸிஎச். நாராயணராவ் – ஜி. வரலக்ஷ்மி

ஜம்பனு & நந்தி புரொடக்
ஷன்ஸ் கூட்டுத் தயாரிப்பான
குடும்பம் படத்தில்.

'எக்ஸ் ஜில்லா போர்டு மெம்பர்'

எஸ். வி. ரங்கா ராவ்

நமது படங்களில் வில்லன் என்ற ஒரு பாத்திரதாரி சிருஷ்டிக்கப்படுவதுண்டு. அவரது வேலை, கதாநாயகியையும் கதாநாயகனையும் பிரித்து வைத்து கதையை வளர்த்தி விட்டு, பின்னர் தான் இறந்து அவர்களைச் சேர்த்து வைப்பது தான். வில்லன் என்றால் இவ்வளவுதான் என்ற அபிப்பிராயம் ஊறி விட்டது.

ஆனால் எதற்கும் மாற்று உண்டல்லவா? அதேபோல எஸ். வி. ரங்கராவ் ஒரு மாற்று வில்லனாக நடித்து ஓரிரு படங்களுக்குள்ளேயே 'வில்லன்' என்றும், சிறந்த குணசித்திர நடிகரென்றும் புகழ் பெற்றுவிட்டார்.

தணிகாசலம் ஒரு பெரிய டம்பாச்சாரி. அவர் விஷயம் எல்லாமே மாஜிதான். அவர் ஒரு மாஜி பணக்காரர். அவர் ஒரு மாஜி ஜில்லா போர்ட் மெம்பர். மாஜி நல்லவர். இப்படி எல்லா விஷயங்களிலும் மாஜியாக இருந்தாலும் இப்போது அவர் ஒரு புத்திசாலி. பழைய பெருமைகளைக் காப்பாற்றிக் கொண்டார்.

அவருக்கு சாவித்திரி ஒரே பெண். ஏக புத்திரிக்குத் தடபுடலாகத் திருமணம் செய்ய உத்தேசித்தார். நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு அப்பாவிப் பையன் அவரிடம் வந்தான். அவனுக்கு தணிகாசலம் செய்த உபசாரம் நமக்கே கூடப் பிரமிப்பாயிருந்தது.

தன் மகளை மணப்பதானால் அவன் தங்கையின் திருமணத்தை தான் ஏற்று முடிப்பதாகக் கூறுகிறார் தணிகாசலம். அப்பாவி ஒப்புக்கொள்ளுகிறான். அவன் சகோதரி அம்மணிக்கு ஏராளமான வரதட்சிணை கொடுப்பதாகக் கூறி ஒரு பணத்தாசை பிடித்தவனையும் ஏமாற்றி மணமுடித்து விடுகிறார். மூன்றாவதாக மாமனை

வாழ்க்கைச் சித்திரம்

கித்தனம் இருக்கி
றதே அது பிரமாத
ஹாஸ்ய ரஸத்தை
அள்ளிக் கொடுத்
தது. தணிகாசலம்
என்று ஒருவர் நம்
பெதிரே நடமாடு
கிறார். அவர் பலடம்
பாச்சாரிக் காரியங்
கள் செய்தாலும்
அவை நல்ல முடி
வைக் கொண்டவை,
என்று தீர்மானிக்
கிறோமே ஒழிய. ரங்க
ராவ் என்பவர் தணி
காசலமாக நடித்தார்
என்றே நினைக்க
முடியவில்லை. பாத்
திரத்துடன் அவ்வ



மணக்க விரும்பிய மருமகளை
அவள் விருப்பப்படி செய்யச்
சொல்லி தான் சாக்ஷியாக நிற்
கிறார் தணிகாசலம். அவரது
வாழ்விலே பல நல்ல முயற்சி
கள் அவரை அறியாமலே நடக்
கின்றன.

படத்திலே தணிகாசலம் ஒரு
தனிரக வில்லன். அவர் செய்வ
தெல்லாம் நன்மையாக முடி
கிறது. அவரது முகக் கோணங்

ளவு திறமையுடன் ஒன்றி அற்புதமாக நடித்து. அந்த ஒரு படத்தின் மூலமே ஒரு சிறந்த நடிகர் என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தி. மார்க்கெட்டையும் பிடித்து விட்டார் எஸ். வி. ரங்கராவ்.

ரங்கராவ் ஒரு நாடக நடிகரா? இவ்வளவு திறமையாக அவரால் எப்படி நடிக்க முடிகிறது? பட உலகில் இவ்வளவு விரைவில் முன்னணிக்கு வந்து விட்டாரே என்றெல்லாம் நினைக்கிறீர்களல்லவா? எல்லாவற்றையும் விட உங்களுக்கு ஆச்சர்யமளிக்கக் கூடிய விஷயம் அவர் ஒரு பட்டதாரி என்பதுதான்! எஸ். வி. ரங்கராவ் பி. எஸ்ஸி. படித்தவர்.

ஆந்திர நாடு இருக்கிறதே, சரியான விளைச்சல் பூமி. கிருஷ்ணா. கோதாவரி ஜில்லாக்கள் பயிர் விளைச்சலில் செழிப்புள்ள இடங்கள் என்பதோடு வேறொரு புகழும் அவைகளுக்குச் சேருகிறது. பல சினிமா நடிகர்களையும் அவை நமக்குத் தந்திருக்கின்றன.

கிருஷ்ணா ஜில்லாதான் நமக்கு ரங்கராவை அளித்திருக்கிறது. கிருஷ்ணா ஜில்லாவில் நூஜ்வீடு என்ற இடத்தில 1918-ம் வருஷம் ஜூலை மாதம் மூன்றும் தேதி பிறந்தார் ரங்கராவ். அவரது தகப்பனார் கோடீஸ்வர ராவ் நாயுடு கிழக்கு கோதாவரி ஜில்லாவிலுள்ள தவளேசுரம் என்ற இடததில் எக்ஸைஸ் இன்ஸ்பெக்டராக உத்தியோகம் பார்தது வந்தார். கோடீஸ்வர ராவின் மனைவி லக்ஷ்மிநரசம்மா



ரொம்பவும் நல்லவர். தெய்வ பக்திமிக்கவர். இந்தத் தம்பதிகளுக்கு பதினொரு குழந்தைகள் பிறந்தனர். ரங்கராவ்தான் மூத்தவர்.

ரங்கராவ் பிறப்பிலே ஆந்திரரானாலும் இளமையையும் படிப்பையும் சென்னையில் கழித்தவர் என்றால் வேடிக்கையாக இல்லையா? ரங்கராவின் தகப்பனாரைப் பெற்ற பாட்டனார் கோட்டய்ய நாயுடு அப்போது சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஸர்ஜனாக இருந்தார். தனது பேரன் பேத்திகளில் ஒரு சிலராவது தன்னுடன் சென்னையிலிருக்கட்டும் என்பது அவர் விருப்பம். அதன்படி ரங்கராவ் படிப்பதற்காகத் தாத்தாவிடம் சென்னை வந்து தங்கினார்.

திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலில் ரங்கராவ் படித்தார். 'அட, ரங்கராவ் நம் பள்ளிக்கூட மாணவரா!' என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம், மேற்படி பள்ளிமாணவர். எஸ். எஸ். எல். ஸி. வரை அதே பள்ளியில் படித்துத் தேறினார் ரங்கராவ்.

ரங்கராவுக்கு ஊரெல்லாம் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று ஆசை. தாத்தாவிடம் இருந்து எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்த பிறகு மேல் படிப்புக்கு வேறெங்காவது செல்ல விரும்பினார். அதன் மேல் விசாகப்பட்டினம் சென்று அங்கு படிப்பைத் தொடர்ந்தார்: இண்டர் படித்துப் பாஸ் செய்து விட்டார் அங்கே. மீண்டும் அந்த இடமும் சலித்துப் போய் விடவே காகிநாடா சென்றார். காகிநாடாவில்தான் பி. எஸ்ஸி. பாஸ் செய்து பட்டதாரியாக வெளியேறினார் ரங்கராவ்.

ஆசை இருந்தது. வசதி இருந்தது. படித்துப் பட்டம் பெற்றாகி விட்டது. இனி என்ன செய்வது? அவ்வளவு தான். வேலை தேட வேண்டியதுதான், பட்டதாரிகளின் நிலைமையே அதுதானே? ரங்கராவ் சென்னைக்கு வந்தார். வேலை தேடினார்.

சென்னை தீயணைக்கும் படையில் ஸப் ஆபீஸராக வேலை ஏற்றார். சுமார் மூன்று வருஷ காலம் தீயணைக்கும் படையில் இருந்தார். அந்த உத்தியோகம் அவருக்குப் பிடிக்கவில்லை. சுமார் மூன்று வருஷங்களுக்குப் பின் 1945-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் அந்த வேலையை விட்டுவிட்டார்.

ஆசையோடு படித்துப் பட்டம் பெற்றாகி விட்டது. படித்த பின் உத்தியோகம் பார்த்தாகி விட்டது. இனி? கல்யாணம் செய்து கொண்டு பார்த்து விடுவது என்று தோன்றிற்று! எல்லூர் படேடி வெங்கட்ராமய்ய நாயுடுவின் குமாரி லீலாவதியை 1947-ம் வருஷம் மணந்து கொண்டார். வெங்கட்ராமய்ய நாயுடு அவரது தாயின் சகோதரர். மாமா பெண்ணையே மணந்தார் அவர். ரங்கராவின் மாமனார் என்ன செய்து கொண்டிருந்தார் தெரியுமா? அவர் ஒரு ஜில்லா போர்டு பிரஸிடெண்ட். ரங்கராவ் அதனால் தானோ என்னவோ மாஜி ஜில்லா போர்டு மெம்பர் தணிகாசலமாகத் தோன்றினார் படத்தில்!



ரங்கராவின் செல்வங்கள்

ரங்கராவ் நியணைக்கும் படையிலிருந்து விலகியபின வேலையின்றிச் சும்மாதான இருந்தார். அவர் பள்ளி, கல்லூரி நாட்களில் நாடகங்களில நிறைய நடித்திருக்கிறார். அவருடன பி. வி. ராமானந்தம் என்பவரும நடித்திருக்கிறார். இப்பொழுத ரங்கராவ் சும்மாயிருந்த அதே சமயம் ராமானந்தம் மாடர்ன் தியேடடாஸில் ஒரு தெலுங்குப் படத்தைத் தயாரிபபதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

ரங்கராவ் சும்மா இருப்பதையறிந்த ராமானந்தம் தான் தயாரிக்க முயன்ற 'வருதினி' தெலுங்குப் படத்தில் அவரைக் கதாநாயகனாக நடிக்கச் சொன்னார். இரண்டாம் பாரத்தில் படிக்கும்போதே சினிமாவில நடிக்கவேண்டு மென்ற ஆசை ரங்கராவுக்கு இருந்தது. ஆனால் சந்தர்ப்பம் சரியில்லை. படிப்பில் அதிக கவனம் சென்றது. இப்போது ராமானந்தம் கேட்டதும் 'சரி' என்று ஒப்புக்கொண்டார். மாடர்ன் தியேட்டர்ஸில் முதல் படத்திலேயே கதாநாயகனாக நடித்தார் அதிருஷ்டக்காரர் ரங்கராவ்.

துரதிருஷ்ட வசமாக அது ஒரு 'டப்பா'ப் படமாக அமைந்து விட்டது. ஆனால் நல்ல வேளையாக யாருக்

கல்யாணம் பண்ணிப் பார்க்கிருர்

கும் ரங்கராவ் அதில் நடித்திருப்பது தெரியாது! (இப்போது தெரிந்து விட்டதே என்கிறீர்களா?) ராஜகுமாரி புகழ்பெற்றுவிட்ட பின் 'குமாரகுலோத்துங்கன்' வெளியிடப்பட்டது போல, ரங்கராவ் நடித்த 'வருதினி', என்று இப்போது வெளியிட்டுப் பார்க்கலாம்! வருதினியின் தோல்வி ரங்கராவுக்கு வருத்தத்தையும் தொழிலில் வெறுப்பையும் ஏற்படுத்தி விட்டது. பேசாமல் டாடா கம்பெனிக்கு வேலைக்குப் போய்விட்டார் ஆனால் சினிமா உலக கரண்ட் இழுக்கும் போது அவரால் அங்கு காலந்தள்ள முடியுமா என்ன? 1948-ம் வருஷத்தில் அதை விட்டுவிட்டு சென்னை வந்து விட்டார். சினிமா உலகம் அவருக்குக் கண்ணி வைத்து விட்டது! பி. ஏ. சுப்பாராவ் சோபனசலா ஸ்டுடியோவுக்காக 'பல்லெட்டூரு பில்லா' என்ற தெலுங்குப் படத்தை டைரக்ட் செய்து கொண்டிருந்தார். என். டி. ராமராவ். அஞ்சலிதேவி முதலியோர் நடித்த அந்தப் படத்தில் ரங்கராவுக்கும் ஒரு சந்தர்ப்பமளிக்க விரும்பினார் சுப்பாராவ். அதன்படி ஒரு தாத்தா வேஷம் கிடைத்தது ரங்கராவுக்கு. உரலுக்குள் தலையை விட்டாகிவிட்டது. இனி உலக்கைக்குப் பயந்தால் முடியுமா? ரங்கராவ் அந்த படத்தில் தாத்தாவாக நடிக்கவே செய்தார். அந்தப் படம் 'கிராமப் பெண்' என்ற பெயரில் தமிழிலும் வெளியாகியது.

விஜயா புரொடக்ஷன்ஸார் பட உலகில் திக்விஜயத்திற்குக் கிளம்பிய சமயம் அது. அவர்களது முதலாவதும் முதல் தரமானதுமான 'சௌகார்' தெலுங்குப் படம் தயாரிக்கப் பட்டபோது ரங்கராவுக்கு அதிலே ஒரு சந்தர்ப்பம் அளிக்கப் பட்டது. வேலைக்காரன் வீரய்யனாகத் தோன்றி கச்சிதமாக நடித்தார் அவர். அவரது திறமையை அறிந்த விஜயா புரொடக்ஷன்ஸார் அவரை தங்கள் கம்பெனியில் ஒரு நிரந்தர நடிகராக ஒப்பந்தம் செய்து கொண்டனர் சௌகாரைத் தொடர்ந்து விஜயாவின் பிரம்மாண்ட தயாரிப்பான

வாஹினி பொங்கல் விழாவில்

'பாதாள பைரவி' வந்தது. அதிலே மந்திரவாதியையும் அவனது சாகஸச் செயல்களையும், பயங்கரமான குகையையும் கண்டு நடுங்காதவரே இல்லை எனலாம். ரொம்பவும் இயற்கையாக குரூர குணமுள்ள மந்திரவாதியின் பாத்திரத்திலே அனுயாசமாக நடித்தார் ரங்கராவ். தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் வெளியான இப்படம் பிறகு ஹிந்தியிலும் வெளியிடப்பட்டது. தயாரிப்பாளருக்குப் புகழும் பணமும் வாரிக் கொடுத்தது பாதாள பைரவி. கே. வி. ரெட்டி டைரக்ட் செய்த இந்தப் படத்தில் என். டி. ராமராவ், கே. மாலதி, ரேலங்கி முதலியோர் நடித்தனர்.

பாதாள பைரவியின் வெற்றியைத் தொடர்ந்து விஜயாவின் முழுநீள ஹாஸ்யப்படமான 'கல்யாணம் பண்ணிப்பார்' வெளியாகியது. இதிலே ரங்கராவ் தணிகாசலமாக வந்து பிரமாதமாக நடித்து ரஸிக உள்ளங்களிலே நிரந்தர ஸ்தானத்தைப் பெற்று விட்டார். கல்யாணம் பண்ணிப்பார் தெலுங்கில் 'பெள்ளி சேஸி சூடு' என்ற பெயரில் வெளியிடப்பட்டது. இதுவும் மகத்தான வசூலைக் கொடுத்தது. என். டி. ராமராவ், ஜி. வரலக்ஷ்மி, ரங்கராவ், ரேலங்கி, சாவித்திரி, புஷ்பலதா முதலியோர் நடித்த இதை ரஸிக்காரரான பிரஸாத் டைரக்ட் செய்தார்.

விஜயாவின் மகோன்னதத் தயாரிப்பான 'சந்திரஹாரம்' (தமிழ், தெலுங்கு) படத்தில் தற்போது நடித்து வருகிறார் ரங்கராவ்.

இது தவிர ரங்கராவ், சில படங்களில் நடித்தார். 'பிரதுகு தெருவு' என்ற தெலுங்குப் படம் இவருக்குப் புகழ் தந்தது. தாஸி என்ற பெயரில் தெலுங்கிலும் 'வேலைக்காரி மகள்' என்று தமிழிலும் வெளியிடப்பட்ட ராஜ்யம் பிக்சர்ஸ் படத்தில் ரங்கராவ் சிறப்பாக நடித்தார். நரஸுவில் தயாரான 'பல்லட்டூரு' தெலுங்குப் படத்திலும் அவர் கனகச்சிதமாக நடித்தார். அஞ்சலி பிக்சர்ஸ் பூங்கோதை (தெலுங்கில் பரதேசியிலும்) ரங்கராவ் நடித்தார்.

ரங்கராவ் நடித்து சமீபமாக வெளியான படங்கள் பரணியின் 'சண்டிராணி'யும், விநோதாவின் 'தேவதாஸு'மாகும். சண்டிராணியில் அவரது பாத்திரம் வீணடிக்கப்பட்டு விட்டது என்றே சொல்ல வேண்டும்.

தற்போது சந்திரஹாரம் தவிர மதராஸ் ஆர்ட் 'ரோஹிணி' (தமிழ், தெலுங்கு), பிரஸாத் ஆர்ட் 'பெற்ற மனம் (தமிழ், தெலுங்கு) நரஸு 'துளிவிஷம்' (தமிழ், தெலுங்கு) ஜெமினியின் 'டோலி,' சாரதி பிலிம்ஸ் புரொடக்ஷன் 9, எம் ஆர். ஏ. 'லேடி டாக்டர்' ஆகிய படங்களில் நடித்து வருகிறார் ரங்கராவ். இன்னும் இரண்டொரு படங்களில் நடிக்க ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது.

ரங்கராவுக்கு இல்வாழ்வின் பரிசுகளாக மூன்று குழந்தைகளிருக்கின்றன. கோடீஸ்வரராவ் என்ற பயலுக்கு நான்கு வயதாகிறது. அடுத்தவளான விஜயாவுக்கு வயது மூன்று கடைக்குட்டி பிரமீளாவுக்கு இரண்டு வயதாகிறது.

பழகுவதற்கு ரொம்பவும் தங்கமானவர் ரங்கராவ். அவருக்கு இப்போதெல்லாம் ஒரு நாளைக்கு இருபத்திநான்கு மணி நேரம்தான் வேலையிருக்கிறது! ஆகையினால் அவரை வீட்டில் பார்ப்பதே அபூர்வம். அப்படியும் கிடைத்து விட்டாரானால் மேக்-அப்புடன் தான் இருப்பார். அப்படியே சாப்பிட வந்திருப்பார், அவ்வளவுதான. நண்பர்களுடன் அளவளாவ அவருக்கு ஆசைதான். ஆனால் நேரம்தான் கிடைப்பதில்லை.

பெயின்ட் செய்வதில் ரங்கராவுக்கு அலாதி ஆசை. தெலுங்கு தவிர தமிழ், ஹிந்தி பாஷைகளில் அவருக்குப் பயிற்சியுண்டு. நல்ல உயரமும் அதற்குத் தகுந்த பருமனும் கொண்ட ரங்கராவ் எப்போதும் சிரித்த முகத்துடன் கலகலப்பாகப் பேசிக்கொண்டிருப்பார். கவலையே அறியாதவர் அவர். அதைச் செய்ய வேண்டும் இதைச் செய்யவேண்டும் என்றெல்லாம் அவருக்கு ஆசை கிடையாது. அதை யெல்லாம் பற்றிச் சிந்திக்க நேரமும் கிடையாது. வரும் படங்கள் ரங்கராவ் பி எஸ்ஸி. யின் புகழை மேலும் உயர்த்தும் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

—எஸ். வி. ஸம்பத்குமார்

சத்யன்





சந்திரன் ஓர் ஆதர்ச சகோதரன். தன் சகோதரி சாந்தாவிடம் அவன் உயிரையே வைத்திருக்கிறான்.

அவன் ஏழை. அவனால் பணத்தைக் கொண்டு சகோதரியைத் திருப்தி செய்ய முடியாது. ஆனால் அவளை அவன் சாதாரணமாக வளர்க்கவில்லை. தன் மார்பை தொட்டிலாக்கி வளர்த்தான். கஞ்சியின் தண்ணீரை அவன் குடித்துவிட்டு சோற்றுப் பருக்கையை அவளுக்கு ஊட்டி வளர்த்தான். அவள் மனதிற்குகந்த புருஷனுக்கு மண முடித்து அவள் மகிழ்ச்சியோடிருப்பதைக் கண்டு தான் ஆனந்திக்க வேண்டுமென்று கனவு கண்டான். அவன் ஆசையில் மண் விழுந்தது. அவனறியாமலே சாந்தாவுக்கு மண முடிக்க ஏற்பாடாகி விட்டது. மணத்தன்று முன் தினம் அவன் கையிலே சகோதரியின் கடிதம் கிடைத்தது. நெஞ்சிலே வழிந்தோடும் வேதனை ரத்தத்திலே தோய்த்து எழுதி யிருந்தாள் சாந்தா. நொறுங்கிப் போன ஒரு பெண்ணுள்ளம் தன் காலடிகளில் விழுந்து கதறத் துடித்துக் கொண்டிருப்பதைக் கண்டு ஓடோடியும் வந்தான். ஆனால் அவன் வருமுன் சாந்தா சேகரின் மனைவியாகி விட்டாள்.

சந்திரனின் மனம் உடைந்து விட்டது. அன்னையையும் மாமனையும் தூற்றினான். அவன் உயிர்த்துடிப்பு அதிகமாகி விட்டது. மாமனிடம் அவனுக்குத் துவேஷம். ஆனால் அவர் தன் ஆசைச் சகோதரியின் மாமனார். பெண்ணைக் கொடுத்தவன் (!) பிள்ளையைப் பெற்றவனிடம் பணிந்து போக வேண்டியது தானே! தங்கையிடம் கூறுகிறான்; கணவனே தெய்வம். தன்னையும் அன்னையையும் மறக்கவேண்டும் என்று. மாமனிடம் அவன் கொண்டிருந்த துவேஷம், அவர் நிரபராதி என்பதறிந்ததும் போய்விடுகிறது. காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கிறான்,

சகோதரியின் மண வாழ்விலே சுகமில்லை. விண்டுபோன அவளது பொன்னுள்ளத்தை புரிந்து கொண்ட அவன், சந்தர்ப்பம் வரும்போது தன்னிடமே கொண்டு வந்து வைத்துக் கொள்ளுகிறான்.

சந்திரனாக சத்யன் நடிக்கிறார் 'ஆசை மகன்' படத்திலே. சத்யன் என்றும் சந்திரன் என்றும் பிரிக்க முடியாதபடி அருமையாக நடித்திருக்கும் இந்த இளம் நடிகரை இம்மாத நக்ஷத்திரமாக கௌரவிக்கிறோம்.

காட்சி 1

சதாசிவ முதலியார் ஒரு பணக்காரர். தன் கணக்கப்பிள்ளையோடு பேசிக் கொண்டிருக்கிருர்.

கண : அடிசக்கை! நாலாயிரத்தி ஐநூறு.. எழுநூறு.. எண்ணூறு.. ஐயாயிரம்! ஆ, மேலக்கரை நெலத்திலிருந்து 5000 கலம் நெல்லு வந்திருக்குங்க.

முத : அய்யாயிரம் கலமா? ஆருயிரம் இருக்கணுமேய்யா!

கண : இருக்க வேண்டியது தான். ஆனு திடீர் திடீர்னு பயிருக்கு வியாதி வருதே, மனுசனுக்கு வர்ரமாதிரி. வழுக்கை விழற மாதிரி!

முத : ஹூம்.. நெல்லு ஏன் குறையுதுன்னு கேட்டா புல்லுக்கு வழுக்கையாம்!

கண : புல் இல்லீங்க. பயிரு.

முத : நல்ல ஆளய்யா நீ!

கண : இன்னிக்கு வேலைக்காரங்களுக்கெல்லாம் கூலி கொடுக்கணும். அத்தோட எனக்கும் ஒரு இருபது ருவா......

முத : ஆமா ருபா! அதிலே குறைச்சலில்லே. இப்பொதானய்யா சம்பளம் வாங்கினே? அதுக்குள்ளே என்னய்யா செலவு?

கண : அதை யேன் கேக்கிறீங்க? எனக்குன்னு ஒருத்தி வந்து வாச்சிருக்காளே, யானைக் குட்டி மாதிரி! பணத்தைக் கண்டா ஹி.. ஹின்னு பல்லைக் காட்ரு. பணம் காலியாயிட்டா பத்ரகாளியாயிடரு. நான்

பாத்திரங்கள்

பி. எஸ். சரோஜா	சாந்தா
பத்மினி	ஜெயந்தி
கிரிஜா	சரளா
ஆர். கணேஷ்	சேகர்
பி. ஆர். பந்துலு	சதாசிவம்
சத்யன்	சந்திரன்
டி. எஸ். பாலய்யா	விக்ரம்

வசனம் ;
நாகர்கோயில் பத்மநாபன்

டைரக்ஷன் :
ஜி. ஆர். ராவ்

வழியிலே சேகர். அண்ணனே அடி அடீன்னு அடிச்சிட்டான் மாமா!

கண: அதுக்கு நீ ஏம்மா அழுவறே? அடிபட்டவன்லே அழணும்?

முத: நீ சும்மா இரய்யா!.. சேகர் சந்துருவை அடிச்சானு ஏன்?

சந்திரன்: நான் கோள் சொன்னதனுலேதான் டீச்சர்

என்னுங்க செய்ய றது?

முத: அய்யா! பொஞ்சாதியைக் குத்தம் சொல்றதிலே பிரயோஜனமில்லேய்பா! வரவு அறிஞ்சு செலவு செய்யவும் தெரியணும்! அவ பத்ரகாளியாம்; . இவரு பெரிய தருமபுத்ரனும் ... என்னய்யா பாக்கிறே?

மருமக்கள் வருகின்றனர்.

முத: ஏம்மா அழறே? என்னப்பா இது? எங்கேயாவது விழுந்தியா?

சாந்தா: இல்லே மாமா! நானும் அண்ணனும் ஸ்கூல்லேருந்து வந்திக்கிட்டிருந்தோம்; வர



அவள் முகத்திலே வழிந் தோடின. அவளெதிரிலே நீட்டிய கரத்துடன் சேகர் நின்ருன்.

அவனை அடிச்சாராம். அதுக்காக அவன் என்னை அடிச்சிட்டான் மாமா!

முத: வாத்தியார் சேகரை அடிச் சாரா? எதுக்கு?

கண: எதுக்கு? வீட்டிலே பொஞ்சாதி சண்டை போட்டு வெளுத்துக் கட்டியிருப்பா! அந்தக் கோவத்தைத் தம்பி மேலே...

முத: அடடா!

காட்சி 2

கையில் கரண்டி; முகத்தில் கரி ஆகிய கோலத்துடன் மங்களம் நின்ருள். வியர்வைத் துளிகள்

மங்: (கோபத்துடன்) அடப் பாவி! கை கன்னிப் போச்சே! அடிச்சவன் கையிலே பாம்புதான் புடுங்கணும்! ஏண்டா, அந்தத் திருட்டுப் பசங்க எங்கேடா போனுங்க?

வெளிப்புறம் கையைச் சுட்டிக் காட்டி சேகர் அழுகிருன்.

சேக: (அழுது கொண்டே) ரெண்டு பேரும் அப்பாகிட்டே கோள் சொல்லிக் கொடுத்து...இன்னம் அடி வாங்கித் தர வந்திருக்காங்கம்மா!...

மங்: (கோபத்துடன்) ஆ..ஹா...

ஒரு கையில் கரண்டி; மற்ருெரு கையால் சேகரைப் பற்றி இழுத்துக் கொண்டு வேகமாக வெளியே ஓடினுள்......

காட்சி 3

சந்திரன் அழுது கொண்டிருந்தான். அவனது கண்ணீரை அன்போடு துடைத்து விட்டார் முதலியார்.

முதலியார்: அழாதே ராஜா! அந்தப் பயல் வரட்டும்!

நல்ல பூசை கொடுக்கிறேன்...

சேகரை இழுத்துக்கொண்டு மங்களம் வந்தாள்.

மங்: கொடுப்பீங்க! கொடுக்கவும் வாங்கவும் நான் ஒண்ணும் ஏழெட்டுப் பெத்து வைக்கல்லே. உங்க கண்ணுலே பாருங்க. குழந்தை கையை!

சேகரை அவர் முன்பு கொண்டு நிறுத்தினுள்; அழுது கொண்டிருந்த சாந்தா மீது அவள் பார்வை சென்றது. அருகில் வந்தாள்.

மங்: நீ எதுக்கடி அழறே, இப்போ?

சாந்: அண்ணனே :சேகர் அடிச்சுட்டான்,

மங்: ஆஹா அடிச்சிட்டானு? மூளைச்சு மூணு இலை விடல்லே; அதுக்குள்ளே கோள் சொல்றதும் அழறதும்! முழிக்கிறதைப் பாரு!

சேகர் அருகில் முதலியார் வந்தார்; அவன் அழுவதைக் கண்டதும் கோபம் வந்தது.

முத: (கோபத்துடன்) திருட்டு ராஸ்கல்! அவன் மண்டையை உடைச்சிட்டு, நீ அழறியா? போ, கழுதே!

அவன் தலையில் ஒரு அடி கொடுத்தார். மங்களத்துக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. சந்திரன் தலையில் ஒரு அடி கொடுத்துத் தள்ளினுள்.

மங்: அப்போ நீயும், போ. கழுதே!

சாந்தா முதுகிலும் ஒரு அடி கொடுத்தாள்.

மங்: போடா! வெளியே போ! போடீ! வெளியே போ!

இருவரது கழுத்தையும் பிடித்துத் தள்ளினுள். அழுது கொண்டே அவர்கள் வெளியே சென்றனர்.

முத: இதெல்லாம் என்னடி? உனக்குப் பைத்தியம் கியீத்தியம் புடிச்சிருக்கா?

மங்: புடிச்சிருக்கு. புளிய மரத்துப் பிசாசு!

முத: ஏ, லௌட்ஸ்பீக்கர்! யாம்

லக்ஷ்: (திகிலுடன்) ஆ...?

என்ருள்; அன்போடு அவன் நெற்றியைத் தடவினுள்.

லக்ஷ்: அப்பொ. மாமா ஒண்ணுமே சொல்லலியா?...

காதிலாவது விழுந்தா என் மானம் போயிடும் மானம்! மெள்ளப்பேசுடி.

மங்: முடியாது! எல்லாம் எனக்கும் தெரியும்.

முத: என்னடி தெரியும்? உனக்கு என்ன தெரியும்? உன் மகன் செய்ததை மறந்துட்டடியோ?

மங்: என் மகன் செய்ததெல்லாம் தப்பு; உங்க தங்கை மகன் செய்தது மட்டும் ஒழுங்கோ? பரிஞ்சு பேச வந்துட்டாரு! தங்கையாம் தங்கை!

காட்சி 4

கவலையுடன் லக்ஷ்மி தையல் மிஷின் முன்பமர்ந்து தைத்துக் கொண்டிருந்தாள்; வெகு நேரம் வேலை செய்த சோர்வும், அசதியும் அவள் முகத்திலே தென்பட்டன; ஆயினும் அவளது கால்கள் மிஷினை மிதித்துக் கொண்டிருந்தன.

கையில் புஸ்தகங்களுடன் சாந்தா, சந்திரன் இருவரும் உள்ளே வந்தனர். அவர்கள் வந்ததை லக்ஷ்மி கவனிக்கவில்லை சந்திரன் உட்புறம் சென்ருன். சாந்தா தன் தாயருகில் ஓடி வந்தாள்.

சாந்: அம்மா...!

லக்ஷ்: (தலை நிமிராமல்) என்ன?

தலைகுனிந்து அவளது காதில் சாந்தா ஏதோ கூறினுள். லக்ஷ்மி வியப்புடன் தலை நிமிர்ந்தாள்.

லக்ஷ்: சந்திரா!..

என்றழைத்தாள். சந்திரன் உள்ளேயிருந்து அவளருகே வந்தான். அவனது நெற்றிக் காயத்தைக் கண்டு பதறினுள்.

சாந்: அதுக்குள்ளே.......அத்தை வந்து போடா கழுதேன்னு அண்ணனை அடிச்சாங்க! போடீன்னு சொல்லி, என்னையும் அடிச்சு விரட்டிட்டாங்கம்மா!...

சாந்தா அழுதாள்; லக்ஷ்மியின் கண்களிலும் நீர் துளிர்த்தது; ஒரு வினடி ஒன்றும் பேசவில்லை பிறகு— துயரம் தோய்ந்த குரலில் பேசினுள்.

லக்ஷ்மி: சந்திரா! இனிமே சேகர் விஷயத்தில் நீ தலையிடாதேப்பா! நாம் அனுதைகள்; யார் எது செய்தாலும் எதிர்த்துப் பேச நமக்கு வாய் கிடையாது; காலமும் கடவுளும் கருணை காட்டும் வரை கஷ்டங்களை எல்லாம் அனுபவிக்கத்தான் வேணும். உங்கப்பா மட்டும் உயிரோடிருந்தா......

பேச இயலவில்லை; துக்கம் தொண்டையை அடைத்தது; பொங்கிவரும்கண்ணீரைப்புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

காட்சி 5

உணவருந்தும் மேஜையின் ஒரு மூலையில் அமர்ந்து சேகர் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

முதலியார் உள்ளே வந்தார். துண்டினுல் தலையைத் துடைத்துக் கொண்டே மேஜையருகில் வந்தார். உட்கார்ந்தார். நிமிர்ந்ததும் சேகரைக் கண்டார்.

முத: ஏண்டா! நீ இன்னுமா ஸ்கூலுக்குப் போகல்லே?

ஒரு தட்டில் சாதத்துடன் மங்களம் வந்தாள்.

மங்: இல்லே; அவனுக்கு ஜுரம் அடிக்குது...

முத : அப்படின்னு ஏண்டி சோறு போடறே?

மங் : நல்லாருக்கே! வயிற பசிச்சா சாப்பிடக் கூடாதோ?

சேகர் எழுந்தான்.

முத : அவனுக்கு ஜுரம் அடிக்குதின்னு உனக்கு யாருடி சொன்னது?

மங் : ஆமா! தந்தி வந்தது. ஏன் சும்மாக் கேக்கறீங்க?

முத : டேய்! இப்படி வாடா. பார்க்கலாம்.

சேகர் அவரருகே வந்து நின்ருன். அவனுக்கு ஒரே பயம்.

முத : ஜுரமா? போடா ஸ்கூலுக்கு!

சேகர் வெளியே நழுவினுன்.

முத : (மங்களத்தை நோக்கி) இந்த சில்லறை விஷயத்துக்கெல்லாம் அவனே மட்டம் போட வைக்காதே! ஆமா!

மங் : ஏன் திருப்பித் திருப்பிக் கேக்கிறீங்க? அவன் இன்னிக்குப் போகவே மாட்டான்!

முத : ஆ...? அப்படின்னு நீ போறது தானே?

மங் : ஏன்? என்னேப் பார்த்தா படிச்சவ மாதிரி தோணலியோ?...

முத : யாரு சொன்னது? உன்னேப் பார்த்தாலே படிச்சவதான்னு சர்டிபிகேட் கொடுக்கலாமே!

மங் : நானும் சர்டிபிகேட் எல்லாம் வாங்கினவதான! படிப்புக்கு ஒண்ணு, பாட்டுக்கு ஒண்ணு, பேச்சுக்கு ஒண்ணு!...

முத : பேச்சுக்கு ஒண்ணுதானு? சே! சே! உன் நாக்குக்கு குறைஞ்சது நாலு மெடலாவது தரவேண்டாம்?

இருவரும் சிரித்தனர்.

காட்சி 6

கோட் ஸ்டாண்ட் - அதனருகில் சேகர் நின்ருன்: நாற்புறமும் பார்த்துக் கொண்டே கோட் பையில் கையை விட்டான்.

கை வெளியே வரும்போது அதில் கனமானதொரு பர்ஸ் வந்

தது; அத்துடன் ஒரு மூக்குக் ;கண்ணுடியும் வந்தது; சரியான பிடிப்பு இல்லாததினுல் கண்ணுடி கீழே விழுந்து உடைந்து சிதறியது. அதே சமயம்...தன் வீட்டுக் கணக்கன் 'வாங்க அண்ணே' என்று யாரையோ அழைக்கும் குரல் கேட்டது. பரபரப்புடன் பர்ஸைத் திறந்து சில நோட்டுக்களை எடுத்துத் தன் பையில் சேகர் திணித்துக்கொண்டான். மீண்டும் பர்ஸைக் கோட் பையினுள் போட்டு விட்டு வேகமாக வெளியே ஓடினன்.

காட்சி 7

கணக்கன் எழுதிக் கொண்டு உட்கார்ந்திருந்தான் ஹாலினுள் வந்து கொண்டிருந்த வடிவேலுவைக் கண்டதும் முக மலர்ச்சியுடன்...

கண: வாங்கண்ணே! வாங்க! ஏது, அத்திபூத்தாப்பலே இருக்குதே, அண்ணன் தரிசனம்?

வடி: ஐயா இருக்காங்களா?

அடுக்களையிலிருந்து முதலியார் வந்தார். டவலினுல் வாயைத் துடைத்துக் கொண்டே வரும் போது சிரித்தபடி கேட்டார்:

முத: என்ன வடிவேலு! சௌக்கியமா?

வடி: ஆமாங்க...

சோபாவில் உட்கார்ந்தார். வடிவேலு தனது மடியை அவிழ்த்து பத்து நூறு ரூபாய் நோட்டுக்களை முதலியாரிடம் நீட்டினர்,

வடி: இந்தாங்க.

முத: (நோட்டுகளை வாங்கிக் கொண்டே) இன்னும் 500 ரூபா பாக்கி!

வடி: ஆமாங்க.

முத: சிக்கிரம் கொடுத்துடுங்க.

வடி: ஆகட்டுங்க.

முத: (எழுந்து கொண்டே) கணக்குப்பிள்ளே...

கண: வரவு வச்சிடறேங்க.

வடிவேலு வெளியே சென்ருர். நோட்டுக்களை எண்ணிப் பார்த்துக் கொண்டே முதலியார் தமது அறையை நோக்கி நடந்தார்.

(91-ம் பக்கம் பார்க்க)

1954

வருஷத்திய காலண்டர்கள்

சினிமா நக்ஷத்திரங்களின் அழகிய படங்கள் கொண்ட 1954 வருஷத்திய காலண்டர்கள் தயார் செய்கிரும். உங்கள் வியாபாரத்தை விருத்தி செய்ய எங்கள் காலண்டர்களை உபயோகியுங்கள்.

முழு விபரங்கள் நேரில் தெரிந்து கொள்ளலாம். ரூ. 100 டிபாசிட் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் முக்கிய நகரங்களில் மட்டும் தேவை.

ஸ்டார் காலண்டர் கம்பெனி

(ராமநாத் பிரஸ்)

188 ராயப்பேட்டை ஹைரோட், சென்னை-14.



'துளி விஷம்' சம்பந்தப்பட்டவர்கள்.

ஸ்டுடியோ விஜயம்

நமது விசேஷ காமிரா நிபுணர் ஸ்டுடியோக்களைச் சுற்றி வருகிறூர்



'ஜோதி' கதாநாயகன் ஸ்ரீராமமூர்த்தி

தென் இந்தியர்களின் காலைக் கடன்களில் (ஆமாம்! 'கடன்' வாங்கி சாப்பிடுவதும் உண்டு) முதலாவதாகி விட்டது காபி குடிப்பது. அந்த அளவிலே காபி நம்மிடையே ஆட்சி புரிந்து வருகிறது. காபி என்று நாம் எண்ணும் தறுவாயில் நமது கண்முன் முதன் முதலில் வந்து நிற்பது 'நரசு' என்ற பெயர்தான். நரசுவின் காபி அவ்வளவு பிரசித்தம்.

"உங்க காமிரா ஷாட் 'ஓகே' தானா?" எனகிறார் சாமி, நரசு ஸ்டுடியோவில்.

சென்ற மாத மத்தியில் நரசு ஸ்டுடியோவில் 'துளி விஷம்' (இது தற்காலிகப் பெயர்) படம் சம்பந்தப்பட்ட காட்சி யொன்றைப் பார்க்க முடிந்தது. அப்பப்பா! நரசு இந்தப் படத்தயாரிப்பில் காட்டி வரும் சிரத்தையையும், ஆவலையும் கண்டபோதுதான் நரசுவின் காபியைப் போலவே அவர் தயாரிக்கும் படங்களும் முதல் தரத்தில் அமைந்து பிரசித்தி பெறும் என்ற தீர்மானத்திற்கு வந்தேன்.

காட்டிலே வாழும் கட்டிளம் காளையும், புரட்சித் தலைவனுமான ஒரு தன்னலமற்ற தியாகியை காட்டின் இளவரசி நாகவல்லி காதலித்து காந்தர்வ முறைப்படி விவாகமும் செய்து கொள்ளுகிறாள்.

தன் ஆட்சிக்கு எதிராக சூழ்ச்சி செய்யும் நாசக்காரனொருவனை நாகவல்லி மணந்தாள் என்பதை அறிந்த மன்னர் மார்த்தாண்டர்

'பேப்பர் பாய்' படப்பிடிப்பின்போது



'துளி விஷ'த்தைச் சுடுகிறார்கள் டைரக்டர் சாமி ஊன்றி கவனிக்கிறார்.

மனம் கொதித்தது. நாகவல்லியை இழக்கவும் சித்தமாகி வீடும் அவர் அரண்மனையில் ராஜகுரு வுடன் ஆவேசம் வந்தவர்போல் பேசிக் கொண்டிருந்தார்.

"ஒரு துளி விஷம்!...ஒரு முழக் கயிறு !!...ஊரிலுள்ள குளம் குட் டைகள்!.. இவற்றுள் நாகவல்லி எதையாவது தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும்! மானம் போன பின்பும் உயிர் வாழ்வதா?.. தேவரே!.." அரசனின் எரிமலை யுள்ளம் பொரிந்து தள்ளிய நெருப் பெனும் சொற்றொடர்களைக் கேட்டு சிலையாகி நின்ற ராஜகுரு தேவர், "தேவரே!" என்று அரசர் அழைப்பது கேட்டுத் திரும்பினார்.

அதற்கு முன்பு சூட்டிபோட்ட பூனைபோல் அரண்மனையில் குறுக் கும் நெடுக்குமாக நடந்து ஏதோ திவிரமாக சிந்தித்து வந்த ராஜ குருவுக்கு, அரசன் சிந்தனை செய் வதற்கு அவகாசம் கொடுக்காமல்

ஆர். ஆர். பிக்சர்ஸ் அடுத்தபடம் ஆரம்பமாகி விட்டது.



இங்கே வலது கோடியில் இடுப்பில் கையுடன் காட்சியளிப்பவர்தான் வி. எஸ். நரசு.

மகள் நாகவல்லியின் முடிவை தீர்மானித்து விட்டது கண்டு பதைபதைத்துப் போய் விடுகிறார்.

"தேவரே" என்று மன்னர் அழைத்ததற்கு பதிலாக "ராஜா!" என்றழைத்தபடி திரும்பினார் ராஜகுரு. மன்னனின் முகத்தில் தாண்டவமாடும் கோபத்தைக் கண்டு அவரே பிரமித்துப் போய்விட்டார்.

ஆர். ஆர். பிக்சர்ஸ படப்பிடிப்பின் போது ராமசந்தரைக் குசலம் விசாரிக்கிறார் 'லூஸ்' ஆறுமுகம்.

ரேவதி 'ஸெட்'டில் ராமண்ணா—கணேசன்

வீரசுந்தரி கோஷ்டியினர் ஸ்டார்கம்பைன்ஸ் ஸ்டூடியோவில்

வீரசுந்தரி காமராமேன் சந்திராவின் திறமையை அளக்கிறார்.

"மகாராஜா! நாகவல்லி நீர் பெற்ற அருமை புத்திரியன்றோ!" என்று அரசனுக்கு ஆறுதல் கூறி தேற்ற வந்த ராஜகுருவின் வார்த்தைகளை அரசன் மதிப்பதேயில்லை. வேகமாக அரண்மனைக்குள் செல்லத் தொடங்கிய மார்த்தாண்டரை "ராஜா!" என்று ராஜகுரு அழைத்த சொல் தடுத்து நிறுத்தவே முடியவில்லை!

விரக்தியுடன் மறுபுறம் செல்லத் தொடங்கினார் ராஜகுரு.

இந்தக் காட்சியில் ரங்கராவ் கலந்துகொண்டார். அவர்தான் மார்த்தாண்டராக வருகிறார். ராஜகுருவாக நாராயணசாமி தோன்றினார்.

இந்தக் காட்சி படமாக்கப்படுவதற்கு சில நிமிஷங்கள் முன்பு இந்த அரண்மனையிலேயே ஒரு குட்டி விவாதம் நடைபெற்றது. ராஜகுரு அரசனை 'பிரபு!' எனறழைப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. அரசனுக்கு அறநெறி போதித்து அறிவுரை சொல்லும் ராஜகுரு ராஜா

பரணியின் அடுத்த தயாரிப்பில் ரங்கராவ் இப்படித் தோன்றப் போகிறார்.

என்று கூப்பிடுவதே சரி' என்று ரங்கராவ் சொன்ன யோசனையை

எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் டைரக்டர் சாமி இதற்கு ஒரு சிறு திருத்தம் கொண்டு வந்தார்.

"என் ராஜா!" என்று காதலி காதலனை அழைக்கும் வகையில் இதன் உச்சரிப்பு அமையக் கூடாது. ராஜா என்று கம்பீரமான, அதிகார தொனியில் கூப்பிட வேண்டும்" என்று சாமி சொன்னபோது ஒரு சிரிப்பு எழுந்ததே பார்க்கலாம்! ஆகாயத்தையும் முட்டிவிட்டது அது.

"மீசை சரியில்லை பார்! கொஞ்சம் தாழ்ந்திருக்கிறது" என்றெல்லாம் மிக நுணுக்கமாகக் கவனித்து படப்பிடிப்பை 'செட்'டிலிருந்தபடியே கவனித்து வருகிறார் நரசு.:

நரசுவின் இந்தப் படத்தில் புரட்சிக்கார கதா நாயகனாக கே. ஆர். ராமசாமி வருகிறார். கிருஷ்ண குமாரி நாகவல்லியாகத் தோன்றுகிறார். தமிழ், தெலுங்கு இரு பாஷைகளில் தயாராகி வரும் இப்படம் ஏராளமான செலவில் பல பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகளுடன் படம் பிடிக்கப்பட்டு வருகிறது. நரசுவின் பொங்கல் பரிசாக இதை நாம் எதிர்பார்க்கலாம்.

* * *

அக்டோபர் மாதம் முதல் தேதியன்று ஆந்திர மாகாணம் தனியே பிரிந்து செல்லப் போகிறது. ஆனால் டைரக்டர் ராம்நாத் ஆந்திராவை சென்னைக்குள் கொண்டு வந்து கொண்டிருந்தார். பிலிம் சென்டர் ஸ்டூடியோவில். தமது படத்திற்காக பெஜவாடா ரயில் நிலையத்தை அங்கு நிர்மாணிக்கச் செய்து வந்தார் அவர்.

ஆர். ஆர். பிக்சர்ஸ் படத்தில் தோன்ற சரோஜா மேக்-அப் 'டச்' செய்து கொள்வதை ராமண்ணா கவனிக்கிறார்.

'போதும் பன்னீர்' என்று டி. பாலசுப்ரமண்யம் சொல்லுகிறாரா?' — துரைராஜ் கிரஹப் பிரவேசத்தின் போது.



இந்த ரயில்வே நிலைய காட்சிக்கு முன்பு ஒரு போலீஸ் நிலைய காட்சி ஒன்று சுடப்பட்டதாம். அந்தக் காட்சி விவரத்தை படத்தில் சம்பந்தப்பட்ட ஒருவர் என்னிடம் விவரித்துக் கூறினார்.

முருகன் என்ற ஓர் ஏழை ஜட்காக்காரன் கொலை, கள்ள நோட்டு அச்சடித்தல் முதலிய குற்றங்களைச் செய்தான் என்பதாக 'லாக்-அப்'பில் தள்ளப்படுகிறான். உண்மையில் அக்குற்றங்களைச் செய்தவன் வேறு ஒருவன். ஆனால் நிரபராதியான முருகனை போலீஸ்காரர்கள் உண்மையை ஒப்புக்கொள்ளும்படி அடித்து வற்புறுத்துகிறார்கள்.

சுந்தரி பிக்சர்ஸ் இரண்டாவது தயாரிப்பிலே கலந்து கொண்டவர்கள

முருகன் வலிதாங்காது கத்துகிறான். தான் அக்குற்றங்களைச் செய்யவில்லை என்று கதறுகிறான்.

ஸ்ரீ சுந்தரி பிக்சாஸ் இரண்டாவது படத்துக்காக காமிராவை முடுக்கி வைத்தார் பத்மினி.







'துளிவிஷம்' படம் உருவாக ஒத்துழைப்பவர்களில் சிலர்.

இக்கூக்குரலை போலீஸ் ஸ்டேஷன் பக்கமாக வந்த வள்ளி கேட்கிறாள். அங்கே வாசலில் நின்றுகொண்டிருக்கும் போலீஸ்காரனொருவனிடம் சென்று விஷயம் என்னவென்று விசாரிக்கிறாள்.

போலீஸ்காரன் சொன்ன விவரம் வள்ளிக்கு ஒரு பெரிய சம்மட்டியடியாகி விடுகிறது. காரணம் முருகன் அவளது கணவன் என்பதனால்தான்!

அழுதாள்: அரற்றினாள் வள்ளி. முருகனைத் தப்புவிக்க மார்

சாமி டைரகட் செய்வதை நரசு கவனிக்கிறார்.

க்கமேதும் கிடையாதா என்று அந்தப் போலீஸ்காரனிடம் மன்றாடினாள்.

திறமைசாலியான வழக்கறிஞர் ஒருவரைத் தேடிக் கொண்டு ஓடினாள்.

இந்த வழக்கறிஞரை கேந்திர புருஷராக வைத்துக் கொண்டு தான நியூ ஈரா புரொடக்ஷன்ஸ முதல் படக்கதை அமைந்திருக்கிறது. வாழ்க்கையில் தனக்கேற்பட்ட பல்வேறு மாதிரியான அனுபவங்களால் வழக்

நாகேந்திர ராவ் ஏவி எம். மில் 'ஜாதகம்' பார்க்கிறார்.

'பேப்பர் பா'யில் மனோஹரும்,
ஜி. சகுந்தலாவும்.

கறிஞர் வாழ்க்கையும் பல்வகைப் பட்ட குணதிசயங்களைப் பிரதி பலிப்பதாக அமைந்து விடுகிறது. இத்தகைய ஒரு கடுமையான பாத்திரத்தை நாகய்யா இந்தப் பட்த்தில் ஏற்று நடிக்கிறார் என்பதை அறியும்போது நமக்கு திருப்தியே ஏற்படுகிறது.

வள்ளி-முருகன் பாத்திரங்களை குமுதினியும், பீர்முகம்மதுவும் ஏற்றிருக்கிறார்கள். மனோஹர், கிருஷ்ணகுமாரி இருவரும்தான் படத்தின் கதாநாயக-நாயகிகள்.

'குறைந்த செலவு, வலிமை வாய்ந்த, நீதி போதிக்கும் கதை; காலங் கடத்தாத வகையில் படப்பிடிப்பு' என்ற தமது சொந்த லக்ஷியங்களை நடைமுறையில் இப்படத்தில் செயலாற்றி வருகிறார் ராம்நாத். ஆகையால் படம் இவ்வருஷ முடிவுக்குள் வெளிவந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ராம்நாத் இப்படத்தை பிலிம் சென்டரின் கூட்டுறவோடு தயாரித்து வருகிறார். இவர்களது அடுத்த சாகஸப் படத்திற்கான ஆக்க வேலைகள் முடிவடையும் தறுவாயிலிருக்கின்றன. 'விரைவிலே படப்பிடிப்பு ஆரம்பமாகும்' என்று என்னிடம் தெரிவித்தார் அதே நண்பர்.

* * *

இதே ஸ்டுடியோவில் 'பேப்பர் பாய்' படத்திற்கென மனோஹர், ஜி. சகுந்தலா சம்பந்தப்பட்ட ஒரு சிறு காட்சி படமாக்கப்பட்டது. ஜெயா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பான இதை சம்பத் வரதன் டைரக்ட் செய்து வருகிறார்கள்.

'வீரசுந்தரி'யில் தோன்றும் சந்திராவுக்கு 'மேக்-அப்' டச் செய்யப்படுகிறது.

உள்ளத்தை ஊடுருவும் சம்பவங்கள் கொண்ட சமுக சித்திரம் **தேவதாஸ்.**
விஜேதா பிக்சர்ஸார் சுவாரஸ்யம் குன்றுமல் இக கதையைப் படமாக்கி...





...யிருக்கின்றனர். நடிகர்கள் அனைவரும் அனுபவித்து நடித்திருக்கின்றனர்.
தற்போது தமிழ் நாடெங்கிலும் தேவதாஸ் வெற்றிகரமாக ஓடுகிறது.



கே. ஆர் கே. & ரேவதி கனவிலும், எம். டி. வி. நண்பனிலும் வரும ஜோடிகள்.



மேலே : கனவு. கீழே : பரோபகாரக் காட்சி.

படஉலகிலே பல வருஷ அனுபவம் பெற்றவர்களான நாராயணன் கம்பெனியார் சிரத்தையுடன் தயாரித்து வரும் 'மனம் போல மாங்கல்யம்...'



விரைவில் வெளியிடப்பட விருக்கிறது. நவரஸங்களுடன கூடிய கதை இது. ரஸிகர்களின் அபிமான நக்ஷத்திரங்கள் பலர் நடித்து வருகின்றனர்.



ஏ. டி. எம்.மின் 'கன்னிராணி' மாதுரிதேவி 'எவ்வளவு விறைப்பாக இருந்தால் எனக்கென்ன? என்கிருர் நரஸுவின் 'துளி விஷம்' ரங்கராவ். இரண்டு படங்களும் வெவ்வேறு ஸ்டூடியோக்களில், மிக வேகமாகத் தயாராகி வருகின்றன.

ரேவதி புரொடக்ஷன்ஸ்
மனிதனும்
மிருகமும்
படக்காட்சிகள்
PSR



சிவாஜி கணேசன், மாதுரி தேவி, சாரங்கபாணி, டி. ஆர். ராமச்சந்திரன், எம் என். கண்ணப்பா, ராஜம் முதலியோர் நடித்திருக்கும் இப்படத்தை, கதாசிரியர் சுந்தரமும் கே. வேம்புவும் டைரக்ட் செய்திருக்கின்றனர்.



'மனிதனும் மிருகமும்' என்ற தலைப்பிலே ஒரு கதையை எழுதினார் எழுத்தாளர் எஸ். டி. சுந்தரம். தலைப்பு நூதனமாக இருந்ததுபோல கதையும் புதுமை நிறைந்ததாக இருக்கவே நாடகமாக நடிக்கப்பட்டுப் புகழ் பெற்றது. ரேவதி புரொடக்ஷன்ஸார் இப்போது அதைப் படமாக்கி யிருக்கிறார்கள்.



ரேவதி ஸ்டுடியோவிலே வளர்ந்திருக்கும் இதற்கு நல்ல வரவேற்பு இருக்கு மென்று எதிர்பார்க்கலாம். பிரபலமான கதை. முதல்தர நக்ஷத்திரங்கள் நடிக்கிறார்கள். — நன்றாக இருக்காதா என்ன ?

வி. அருணுசலம், பெங்களூர்

நம் படத் தயாரிப்பாளர்களில் சிலர் இன்னமும் ஏன் மட்டமான படங்களைத் தயாரித்து வருகிருர்கள்?

'தாங்கள் மட்டுமே புத்திசாலி' என்ற மட்டமான அபிப்பிராயம் அவர்களுக்கு இருப்பதனுல்தான்!

நான் சொந்தத்தில் ஒரு படம் தயாரிக்கலாம் என்று இருக்கிறேன். அதற்கு என்ன பெயர் வைக்கலாம்?

'தோல்வி' என்று வையும். 'படம் தோல்வி' என்று பத்திரிகைகள் குறிப்பிட்டாலும் அது உமது படத்தின் பெயரை மட்டுமே குறிப்பிடுவதாக ஆகுமல்லவா?

ராமதுரை, வாணியம்பாடி

'அன்பு' படத்தில் பத்மினியின் நடிப்பு என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. அவருக்கு என மோதிரத்தை என் போட்டோவுடன் பரிசளிக்கலாமென்று இருக்கிறேன். உங்கள் அபிப்பிராயம் என்ன?

மோதிரத்தை மட்டும் அனுப்பினுல் போதும்!

நம் நடிகைகளில் பெரும்பாலோர் ஏன் கல்யாணம் செய்துகொள்வதில்லை?

காதல் கட்டங்களிலும், கல்யாணக் காட்சிகளிலும் அடிக்கடி நடித்து அலுத்துப்போனது காரணமாக இருக்கலாம். தவிர குடும்பச் சித்திரங்கள் என்று வெளிவரும் படங்களில் வரும் கஷ்டங்களைப் பார்த்து சிலர் பயந்து போயுமிருக்கலாம்!

வாசகம், மதுரை

வேலையின்றி இருக்கும் டிராம் கண்டக்டர்களை தியேட்டர்களில் டிக்கெட் கொடுக்கவும், டிரைவர்களை ஆபரேடர்களாகவும் அமர்த்தினுல் என்ன?

பாராட்டப்பட வேண்டிய யோசனைதான்! ஆனுல் நூறு அடிக்கு ஒரு தடவை டிராம் வண்டிகளை நிறுத்திப் பழக்கப்பட்ட அவர்கள், தியேட்டரிலும் அடிக்கொரு தடவை படத்தை நிறுத்தி நிறுத்திக் காட்டாமலிருக்க வேண்டுமே!

தற்போது வெளிவரும் படங்களிலெல்லாம் பஞ்சப் பாட்டு அதிகமாகி வருகிறதே, ஏன்?

நல்ல படத் தயாரிப்பாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பஞ்சத்தை இது குறிப்பிடவில்லையா?

நமசிவாயம், திண்டுக்கல்

நம் தமிழ்ப் படவுலகில் காதல் படங்களின் தரம் எப்படியிருக்கிறது?

எல்லாம் நன்ருகத்தான் இருக்கின்றன. ஆனுல் பெரும்பாலான படங்களில்தான் முடிவு 'காமெடி'யைப் போல் அமைந்து விடுகின்றன.

படவுலகில் அதிக உபயோகத்தில் இருந்து வரும் கருவி எது?

சமீபகாலமாக கத்திரி!

செல்வம், வாணகப்பாடி

நான் பேசும் படம் இதழை சுமார் இருபது தடவைகள் படித்து விட்டேன். இன்னமும் திரும்பத் திரும்பப் படிக்கப் போகிறேன். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

எந்த வகையிலும் திருப்திப்படுத்த முடியாத ரஸிகர் நீர்!

நீங்கள் படம் பார்ப்பதை எப்பொழுது நிறுத்துவீர்கள்?

படமுதலாளிகள் அந்தக் 'குற்றத்தை'ச் செய்யாமலிருக்கும்போது!

மாணிக்கம், தனுஷ்கோடி

விளம்பரத்திற்கும், விமர்சனத்திற்கும் சம்பந்தமுண்டு என்கிறார் என் நண்பர். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

விவரம் தெரியாமல் இதே அபிப்பிராயத்தில் உலவி வரும் படமுதலாளிகளோடு உமது நண்பர் சேர்க்கப்பட வேண்டியவர்தான்!

இங்காங், திருநெல்வேலி

நான் அனுப்பிய விகடத் துணுக்குகள் என்னவாயிற்று?

என் மேஜையின் மீது தான் இருக்கின்றன. நானும் அதை பலமுறை படித்துப் பார்த்து சிரிப்பை வரவழைக்க முயற்சிக்கிறேன். ஆனால் அழுகைதான் வருகிறது!

'உலகம்' படம் பற்றி 'பேசும் படம்' மலரில் ஒன்றுமே எழுத வில்லையே, ஏன்?

'உலகம்' 1953 வருஷத்திய வெளியீடானதால் 1954 வருஷ மலரில் அதைப்பற்றிய விவரங்கள் தரப்படும்.

ஒளவையாரில் 'குமாரி' ஒளவை பாத்திரத்திற்கு வைஜயந்திமாலாவைத்தான் போட்டிருக்கவேண்டும் என்று நண்பர்கள் கூறுகிறார்கள். தாங்கள் கூறுவது என்ன?

நல்லவேளை! ஒளவையாராகவே அவர்தான் நடித்திருக்க வேண்டுமென்று சொல்லாமலிருந்தார்களே!

மு. சதாசிவம், புதுச்சேரி

நான் 'வீரத் தமிழன்' என்றொரு கதை எழுதி வைத்திருக்கிறேன். அதை சினிமாவில் எடுப்பார்களா?

முயற்சிக்கு முணுமுணுக்கமாட்டான் தமிழன்! முயற்சி செய்துபாரும்!

மணியம், வந்தவாசி

எங்கள் வகுப்பு உபாத்தியாயர் 'பேசும் படத்தைப் படிக்கக் கூடாது என்கிறார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

'பேசும் படம்' சினிமா விசிறிகளுக்கான புத்தகமேயன்றி பள்ளி உபாத்தியாயர்களுக்கல்ல! ஆகவே அவர் சொல்வதில் குற்றமில்லை. ஆனால் நீங்கள்தான் அதை பாடப் புத்தகமாக உபயோகப் படுத்தக்கூடாது!

நடிகைக்கும், நக்ஷத்திரத்துக்கும் வித்தியாசம் உண்டா?

ஓ, தாராளமாக! 'எக்ஸ்ட்ரா'வும் ஒரு நடிகைதான். ஆனால் நக்ஷத்திரம் என்பது பிரதம நடிகையைக் குறிப்பிடுவதாகுமே!

கணேசன், திருவாரூர்

நக்ஷத்திரத்தின் 'காலம்' எவ்வளவு?

பட முதலாளிகளிடம்: அவர் உருவமும், பெயரும் பொதுமக்களிடமிருந்து பணத்தைப் பெருவாரியாக வசூலித்துக் கொடுக்கும்வரை. ரஸிகர்களிடம்: அவர் பிரபல படங்களில் அடிக்கடி பிரதம பாகத்தில் தோன்றும் வரை.

பிரபல நடிகை.யின் அழகை என்னால் வர்ணிக்கவே முடியவில்லை. உங்களால் முடியுமா?

முடியாது! ஏனென்றால் வர்ணிப்பதற்கு அவரிடம் ஒன்றுமேயில்லை!

புத்துணர்ச்சி, நாமக்கல்

வறுமை என்பது என்ன?

இந்தியாவின் தேசிய சொத்து!

குருடன் அரசியல்வாதியாக முடியுமா?

அவனால் வாக்களிக்க முடியும்! ஏனெனில் கண்ணிருந்தும் குருடனாக சிலர் வாக்களிக்கிறார்களல்லவா?

அழகும் அறிவும் ஒன்று சேருமா?

நம் நடிகர்களில் சிலரைப் பார்க்கும்போது இது முடியாது என்று தான் எண்ணத் தோன்றுகிறது!

ராஜரத்தினம், உதகை

இதுவரை வெளிவந்த படங்களுள் மிகவும் மட்டமான படம் எது?

இந்தப் பதவிக்கு பல படங்கள் போட்டி போடுவதால் தனியே எதையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன்.

......போன்ற பருத்த நடிகர்களைப் பார்க்கும்போது நமது நாட்டில் பஞ்சமிருக்கிறது என்று எப்படி நினைக்க முடியும ?

திரையில் அவர்கள் அடிக்கும் கூத்தைக் கண்டு குறைந்த பக்ஷம் அவர்களிடையே நடிப்புக்காவது பஞ்சம் ஏற்பட்டுள்ளது என்பதை நாம் தீர்மானித்துக் கொள்ளலாம் அல்லவா ?

சிட்டிபாபு, வலங்கைமான்,

நம் திரைப்பட உலகின் சிறந்த சோக நடிகர்கள் யார் ?

நாகய்யா, கண்ணாம்பா, ராஜம்மா, பண்டரிபாய் முதலியோரைச் சொல்லலாம்.

நடிப்பு, பாட்டு இரண்டில் எது சிரமமானது ?

பாட்டுதான் ! விவரம் தெரியாதவன்கூட நடித்துவிடலாம். ஆனால் பாட்டில் பரிச்சயமில்லாதவன் பாடவே முடியாது !

மதி ஆர்ட்வரன்,
கன்னங்குரிச்சி

வீர சிவாஜி தற்போது எத்தனை படங்களில் நடிக்கிறார் ?

வீர சிவாஜி நாடாண்டதாக சரித்திரம் கூறுகிறதே தவிர சினிமாவில் சேர்ந்து நடித்திருப்பதாகக் கூறவில்லையே. சிவாஜி தற்போது உயிருடனிருந்தால் உமக்காக படங்களில் நடித்திருப்பாரோ என்னவோ ?

குமாரி கமலா தற்போது என்ன செய்து வருகிறார்?

பல படங்களில் நடனமாடிக் கொண்டு வருகிறார்.

மு. மலர்மன்னன், குருநாகலை

நடிகை கிருஷ்ணகுமாரிக்கு ஆங்கிலம் எழுதப் பேசத் தெரியுமா?

நன்றாகத் தெரியும்.

உங்கள் விசேஷ காமிரா நிபுணரோடு ஒரு தடவை நானும் ஸ்டுடியோக்களைச் சுற்றி வர விரும்புகிறேன். அதற்கு அவர் அனுமதிப்பாரா?

அவர் காமிரா பெட்டியைத் தூக்கி வர நீர் சம்மதித்தால் ஒரு வேளை அனுமதிக்கலாம். எதற்கும் சென்னை வரும்போது அவரைப் பாரும்.

வி. பிரான்ஸிஸ், மன்னார்

அபூர்வ சகோதரர்கள் படத்தில் சோமுவிடம் ராதா பானுமதியைப் பற்றி வர்ணிக்கிறாரே, உணர்ச்சியில் உருவம் எப்படித் தெரியும்?

தான் கனவில் நினைத்த பெண்ணை ஓவியமாகத் தீட்டி, அவளைக் கண்டு பிடித்து மணந்ததாக எல்லாம் கதைகள் வரும்போது, உணர்ச்சியால் உருவத்தை வர்ணிக்கத்தானா முடியாது?

சகல படங்களையும் பார்த்து என் மனம் சலித்து விட்டது. என் மனதைச் சலிககப்பண்ணாத படம் இருக்கிறதா?

நீர்தான் 'சகல' படங்களையும் பார்த்து விட்டவராயிற்றே. மீதி இருந்தாலல்லவா நான் சிபார்சு செய்ய?

சிமோன் தூய்தம்பி,
திரிகோணமலை

சிவாஜி கணேசன் இறந்துவிட்டதாக என் சிநேகிதி ஒருத்தி கூறுகிறாள். உண்மைதானா ?

இதுமட்டும் சிவாஜி கணேசனின் காதில் விழுந்து, உமது சிநேகிதையையும் பார்த்திருந்தாரானால், அவள் 'பராசக்தி'யின் சன்னிதானத்துக்குக் கதறிக் கொண்டு ஓடி யிருப்பாள்!

டி. பி. தியாகராஜசர்மா,
திரிகோணமலை

திடீரென்று ஒரு படத்தில் தோன்றிப் பிரபலமான நடிகர், நடிகை யார் ?

'வாழ்க்கை' வைஜயந்தியையும், 'பராசக்தி' கணேசனையும் குறிப்பிடலாம்.

தாங்கள் எப்போதாவது இலங்கைக்கு வந்ததுண்டா ?

இல்லை.

சினிமா உலகில் சின்னப்பாவுக்குச் சமமாக தற்போது எந்த நடிகரைச் சொல்லலாம் ?

சிவாஜி கணேசன் பருத்துக் கொண்டு வருவதைப் பார்த்தால் இன்னும் சில மாதங்களிலேயே சின்னப்பாவுக்குச் சமானமாக வந்து விடுவார் என்று எண்ணத் தோன்று கிறது!

ஆர். இராசநாயகம், இலங்கை

பராசக்தி, பணம், நாம், என் வீடு, என் தங்கை, காஞ்சன இவைகளில் சிறந்த படம் எது?

'பேசும் படம்–1953' மலர் ஒன்றை வாங்கிப் பாரும். பூரா விவரங்களும் இடைக்கும்.

கே. லக்ஷ்மிபதி, திருவள்ளூர்

'பேசும் படம்' ஜூலை இதழில் 23-ம் பக்கத்தில் கணேசனும் சந்தானலக்ஷ்மியும் சேர்ந்த படத்தைப் போட்டுவிட்டு பண்டரிபாய் என்று குறிப்பிட்டிருக்கிறீர்களே?

கணேசனுடன் அந்தப் படத்தில் இருப்பவர் பண்டரிபாய் தான்!

ஏ. என். முத்துகிருஷ்ணன், கொல்லம்

ஆரெண்ணர் புரொடக்ஷன்ஸ் ஜாதகத்தில் யார் யார் நடிக்கிறார்கள்? கம்பெனியின் விலாசமென்ன?

ஸ்லிவன்ஸ் கார்டன் தெரு, சென்னை-14 என்ற விலாசத்தில் அந்தக் கம்பெனி இருக்கிறது. பாலசந்திரன், கே. சாரங்கபாணி, நாகேந்திரராவ், கே. ஆர். செல்லம் சூர்யகலா முதலியோர் இந்தப் படத்தில் நடித்து வருகிறார்கள்.

பி. எஸ். குருசாமி, சாளம்பைக்குளம்

வி. நாகய்யா, ஸ்ரீராம், எம். கே. ராதா இம்மூவரில் சோக நடிப்பில் சிறந்தவர் யார்?

சோக கட்டங்களின் 'சோல்' நடிகர் நாகய்யாதான்!

என். எம். சுப்பய்யா, சிலோன்

11-7-53-ல் மாலை 7-30 மணிக்கு 'வனராணியே' என்ற பாட்டு ஒலி பரப்பப்படும் என்று வானொலியில் இருந்தது. ஆனால் ஒலி பரப்பியது 'பேரின்பமே' என்ற பாட்டு இது யார் தவறு?

இதை தவறு என்று சொல்ல முடியாது. சில அசாதாரணமான சந்தர்ப்பங்களில் இம்மாதிரியான சம்பவங்கள் நடைபெறுவதும் உண்டு.

எஸ். கிருஷ்ணன், புதுடெல்லி

ஹிந்திப் படங்களில் கட்சிப் பிரசாரமே இல்லாதபோது, தமிழ்ப் படங்களில் மட்டும் இருப்பதேன்?

ஹிந்திப் படங்களில் அவை வெளிக்குத் தெரியாத வகையில் உள் பகட்டாகச் சித்தரிக்கப்படுகின்றன. அவ்வளவுதான்!

'.....' என்ற வாரப்பத்திரிகையில் வெளி வரும் செய்திகளனைத்தும் உண்மையா?

இதற்கான தீர்ப்பை உமது சுய சிந்தனைக்கே விட்டு விடுகிறேன்!

தாஜ்மஹால் சொசைட்டி, நாகை

உலகம் கதை உண்மையாக மிஸஸ். முனுஸால் எழுதப்பட்டதா?

வேறு யாரும் இந்தக் கதையை எழுதியிருக்க முடியாது!

மு. கோவிந்தன், சென்னை

மனோஹரா எப்பொழுது வெளி வரும்?

அநேகமாக தீபாவளிக்குள் வந்து விடலாம்.

டி. பி. வெங்கடேசன், திருச்சி

நடனமாடுவதில் நாடறியப்பட்ட நடனமாது நானறியேன். சற்று கூறுவீர்?

எந்த வகை நடனமாடுவதில் என்பதை பகருவீரா! இது இருக்கட்டும். முதலில் நீர் உமது இனிஷியலை மாற்றிக் கொள்ளும். படிப்பதற்கும் கேட்பதற்கும் அருவருப்பாக இருக்கிறது!

ஜூபிடர் பிரியன், தஞ்சை

குமாரி புகழ்(!) எம். ஜி. ராம் சந்தர், கங்கணம் புகழ்(!) கே. ஆர். ராமசாமி, பூங்கோதை

புகழ்(!) சிவாஜி கணேசன் இவர்களில் நடிப்பிலும், வசனம் பேசுவதிலும் சிறந்தவர் யார்?

பராசக்தி புகழ் (?) கணேசன் தான் !

உண்மையின் வெற்றி, என் கணவர், கங்கணம் ஆகிய படங்கள் இன்னும் ஏன் பெரும்பாலான நகரங்களில வெளியிடப்படவில்லை?

அந்நகரவாசிகள் புண்ணியம் செய்திருப்பதால் பிழைத்தார்கள் !

துரை முருகேசன், காரமடை

சட்டசபை மேஜை நாற்காலிகளில் குடியிருக்கும் மூட்டைப் பூச்சிகள் சட்டத்தைப்பற்றி என்னவென்று பேசிக் கொள்ளும்?

தங்களிடம் அந்தச் சட்டம் பலிக்காது என்று ஜம்பமாகப் பேசிக் கொள்ளலாம்!

எம். குணசேகரன், கொழும்பு

பொன்னி படத்தில் கண்மணி காரில் வந்து உட்கார்ந்து கொண்டிருக்கும்போது, சமரஸம் முன் ஸீட்டில் அவள் பக்கத்தில் உட்கார வருகிறன். ஆனல் கண்மணி அவனை பின்புறமாக உட்காரச் சொல்லுகிருள். ஆனல் எங்கேயோ வெளியே போகும் போது காரில் சமரஸத்தின் பக்கத்தில் தன்னை உட்கார விடாமல் வேலைக்காரி தடுத்ததைக் கண்ட கண்மணிக்கு கோபம் ஏன் வருகிறது ?

எந்தப் பெண்ணுமே தன் காதல் விஷயத்தில் பிறர் தலையிடுவதை விரும்புவதில்லை. இந்த உலக நியதிக்கு உட்பட்டே இந்தக் காட்சி சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

எஸ். ரஷீத், தென்காசி

குட்மார்னிங்! வேர் ஈஸ் யுவர் "அக்கப்போர்" சுண்டெலி? பிளீஸ் டெல் மி சம்திங் எபௌட் தட் சுண்டெலி?

தட் "அக்கப்போர் சுண்டெலி" ஈஸ் டேகிங் ரெஸ்ட் அட் பிரஸன்ட்! தட்ஸ் ஆல்!!

எஸ். கிருஷ்ணன், எட்டியாந்தட்டை

'மூன்று பிள்ளைகள்' படத்தில் ராமர் படம் விற்கும் வியாபாரியாக வருபவர் உண்மையிலே செவிடரா ?

நல்ல ஆசாமி! அவர் உண்மையிலே செவிடாக இருந்தால் "கட்!", "ஓகே" போன்ற டைரக்டரின் குறிப்புகளைக் கேட்டு நடந்திருக்க முடியுமா?

கே. சுப்பய்யா, பாலக்காடு

புன்னகை மலர் எங்கே கிடைக்கும்?

மலர் மங்கையிடம்!

பி. சங்கரமூர்த்தி, பட்டமுடையார்புரம்

எங்கள் ஊரில் ஒரு பெரிய மேதை இருக்கிறர். நீங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்வது அத்தனையும் சுத்தப்பொய் என்கிறர்...

நான் 'சொல்வது பொய்' என்று சொல்லிக் கொண்டு 'நான் மேதாவி' என்று அவர் உங்களிடம் பொய் விளம்பரம் செய்து வருகிறராக்கும்; எப்படியாகிலும் அவர் பிரபலமடைய வேண்டும் பாருங்கள். அதனல் தான் இது!

ஜுபிடர் பிரியன், தஞ்சை

பிரபல டைரக்டர்களான ஏ. எஸ். ஏ. சாமியும், கே. ராம்னத்தும் எந்தப் படங்களை டைரக்ட் செய்து வருகிறர்கள்? முன்னவர் தற்போது எந்தப் படத்திற்கு வசனம் தீட்டுகிறர் ?

நரசுவின் சொந்தப் படமான 'துளிவிஷ'த்திற்கு வசனமெழுதி டைரக்ட் செய்து வருகிறர் சாமி. ராம்னத் தனது சொந்தப் படத்தை டைரக்ட் செய்து வருகிறர்.

கலையமுதன், பொள்ளாச்சி

"இது மெய்! நீங்களும்...சோப் உபயோகித்து அதிக அழகைப் பெறலாம்" என்று சினிமா நக்ஷத்திரங்கள் கூறுவது உண்மையா ?

கூறுவது உண்மைதான்! ஆனல் உபயோகப்படுத்துகிறர்களா என்பதுதான் தெரியவில்லை!

“நான் ரஸித்த காட்சி”



(“சினிமா பார்க்கும் பொது ஜனங்கள் ஆபாசத்தைத்தான் விரும்புகிருர்கள், மாயா ஜாலப் படங்களும், ஸ்டண்டுகளும்தான் ஓடுகின்றன. அரை நிர்வாண நடனம் இல்லாத படங்கள் தோல்வியடைகின்றன” என்றெல்லாம் கூறும் படமுதலாளிகளை இந்தப் பகுதியைக் கவனமாகப் படிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். ஜனங்கள் எதை ரஸிக்கிருர்கள் எதைப் பாராட்டுகிருர்கள் என்று தெரிந்து கொள்ள இப்பகுதி மிகவும் உபயோகமாக அமைந்திருக்கிறது-ஆசிரியர்.)

*ஒளவையார்

பெண்டாட்டியிடம் நடுங்கும் வீரய்யனின் விருந்தாளியாகி அவன் வீடுசென்ற ஒளவைக்கு அவன் மனைவி சாப்பாடு போடும் போது நன்கு ‘மரியாதை’ செய்கிருள். ஒளவைக்காவது தேவலை. வீரய்யனுக்கு உடம்பு வளையாமல் எட்டவிருந்தே பரிமாறுகிருள் அந்தப் புனிதவதி. ‘பர்த்தாவிற்கேற்ற பதிவிரதை யுண்டானல் எத்தாலும் கூடியிருக்கலாம்—சற்றேனும் ஏறுமாருக இருப்பளேயாமாகில் கூருமல் சந்நியாசம் கொள்” என்கிருள் ஒளவை. வீரய்யன் சந்நியாசம் பூணுகிருன். அவன் மனைவி மன்னிப்பு கேட்கிருள். ஒளவை சொல்லிலே நீதி இல்லாமலிருக்குமா? மனைவியின் கடமைகளை உணர்த்தும் இக் காட்சி சாலச் சிறந்ததாகும்.

எஸ். சுசிலா,
ராமநாதபுரம்.

*ரத்னதீபம்

தான் வெகு காலம் வேலை செய்யும் ஜமீன்தார் குடும்பத்திற்கு கோபாலினல் அவமானம் நேர்ந்து விட்டதாகக் கருதிய திவான் கோபாலைச் சுடப் போகிருர். உண்மையறிந்த சின்னராணியின் தோழி அதைத் தடுக்கிருள். பெரிய ராணி அங்கு வந்து, ‘நீ என் மருமகளை ஒரு முறைகூடத் தொடவில்லையா?’ என்று கேட்கிருள். ‘இல்லையம்மா’ என்கிருன் கோபால். அவள் கவலை நீங்குகிறது. அங்கேயே தங்கியிருக்கும்படி வேண்டுகிருள். ஆனல் அவன் மனம் ஏற்குமா அதை? அவள் பாதத்தைத் தொட்டு வணங்கிவிட்டு மௌனமாக வெளியேறுகிருன். நம் இதயத்திலே சம்மட்டி கொண்டு அடிக்கிறது அவன் மௌனம்.

வி. சுப்பய்யா,
கொழும்பு.

*தேவதாஸ்

நோயுடன் ஊர் திரும்புகிருன் தேவதாஸ். நோய் அவனை வாட்டுகிறது. மரணப் படுக்கையிலிருக்கும் அவன் வண்டியில் கிளம்புகிருன். அவன் பரிதாப நிலை கண்ட வண்டிக்காரன் ஒரு இடத்திலே வைக்கோலை நிரப்பி அதன் மேல் தேவதாஸைக் கிடத்துகிருன். ஆனல் தேவதாஸ் ஏழை வண்டிக்காரனுக்கு அந்த நிலையிலும் மறக்காமல் வாடகையைக் கொடுக்கிருன். அதை வாங்கும்போது வண்டிக்காரனின் கண்களிலே நீர் வழிகிறது. நம் கண்களிலும் நீர்ப் பிரவாகம்தான்!

எஸ். ராஜகோபால்,
பாளையங்கோட்டை.

---

* இக்குறியிடப்பட்ட மூன்று கடிதங்களுக்கும் தலைக்கு ஐந்து ரூபாய் வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

ஔவையார்

பெண் கொடுக்க மறுக்கும் பாரி மீது போர் தொடுக்கின்றனர் மூவேந்தர்கள். தன் மகளிருக்காக நாட்டு மக்களைப்போரில் ஈடுபடுத்த விரும்பாத பாரி வள்ளல் மூவேந்தரின் சேனாதிபதிகளிடம் சமரஸத்திற்குச் செல்கிறான். ஆனால் முடிவு? வஞ்சகக் கொலை. தர்மமே ஜெயம் என்ற ஜெயக்கொடி பாரியின் பொன்னுடலின் மீது வீழுகிறது. உள்ள முருக்கும் காட்சி, பாரியின் மரணம்.

எம். பகவத்பெருமாள்,
அம்பாசமுத்திரம்.

நாடெல்லாம் நடந்து களைத்த ஔவையை, முருகவடிவேலன் நாகப்பழம் பறித்துப் போட்டுக் கேலி செய்கிறான். சுட்ட பழம், சுடாத பழம் இரண்டிற்கும் வித்தியாச முணர்த்தியவன் வரிவடிவேலன் என்பதை ஔவை அறிந்து மகிழ்கிறாள். அறிஞர்களும்—பகுத்தறிவும்கூட—கடவுள் முன் கலக்கமடையத்தான் வேண்டுமென்பதைச் சீரிய முறையில் சித்தரிக்கிறது இக்காட்சி.

ஆர் தண்டபாணி,
கடலூர்

தொட்டிலிட்டுத் தாலாட்டப்படும் குழந்தை வீறிட்டு அழுகிறது. காரணம் தெரியவில்லை. ஏதாவது முதுகில் உறுத்துகிறதோ என்று நினைத்தோம். ஆனால் நடந்ததென்ன? பால்மணம் மாறாப் பச்சிளம் குழந்தை விநாயகன் பொம்மையைக் கண்டு, தனக்கு அது வேண்டுமென்பதற்காக அழுகிறது. குழந்தையின் குறுகுறுப்பான பார்வையும் அழகிய முகமும் நம் கண்களிலிருந்து மறையுமா என்ன?

"அறிவின்பம்,"
கரூர்.

பாரி மகளிரைக் கானகத்திலே கண்டு உண்மையறிந்த ஔவை, மூவேந்தர்களிடம் ஓடி தெய்வீகனை விடுதலை செய்யச் சொல்லுகிறாள். ஔவை ஒரு தெய்வப் பெண் என்று தெரிந்தும் செருக்குற்ற மூவேந்தர்களும் மறுக்கின்றனர். கணநாதனிடம் ஓடுகிறாள் ஔவை. கண் கண்ட தெய்வங்களான மன்னர்கள் அநீதி இழைத்தால் கல்லுருவான கடவுள் பேசாமலிருப்பானா? விநாயகன் யானைப் படை கொண்டு தெய்வீகன் சிறை வைக்கப்பட்ட கோட்டையை சின்னா பின்னமாக்கி அவனை விடுதலை செய்கிறார்.

திருமணம் நடக்கிறது. மூவேந்தர் படையெடுக்கின்றனர். திக்கற்ற பெண்களைத் தாக்கப் பெரும் படையுடன் வந்த மூவேந்தர்களிடம் தாங்கொணாக் கோபம் கொண்ட தமிழனை, தன் இனத்தவளான பூமாதேவியைக் கொண்டு அவர்களுக்குப் புத்தி புகட்டுகிறாள். செருக்கு அழிகிறது. அறம் வளருகிறது. காலத்திற்கேற்ற சிறந்த காட்சி.

பி. சுப்பராயலு,
திண்டுக்கல்.



வில்லன்: *நீங்க கொடுத்த 'செக்' பாங்கியிலேயிருந்து திரும்பி வந்துட்டுதுங்களே!*

முதலாளி: *நீ நடிச்ச படங்கூடத்தான் தியேட்டர்களிலேருந்து திரும்பி வந்துட்டுது.*

டைரக்டர்: பத்திரிகை நிருபர் கிட்டே பேசறமாதிரி நாஸுக்கா, நிறுத்திப் பேசம்மா!

பல்லாயிரக் கணக்கான மக்கள் பரவசம் அடைய, வேதியர் மந்திர மோத, நடனமாதர் நாட்டியமாட, படைகள் அணி வகுக்க, பொய்க் கால் குதிரை, பொம்மை ஆட்டம் முன்வர, புலவர் மந்திரிகள் புடைசூழ கால் நடையாக வந்து ஔவையை வரவேற்கிறான் சோழ மன்னன். தமிழனின் பண்புதான் எத்தகையது? மீண்டும் வருமா அக்காலம்? தியேட்டரை விட்டு நம்மை வெளியேற மறுக்கச் செய்யும் இந்தக் காட்சி மிகச் சிறந்தது.

நாராயணன்,

விஜயபுரம்.

தமிழனின் பண்பை விளக்க, விருந்தோம்பலின் உயர்வை விளக்க, சோழ மன்னன் தமிழ்த் தாய்க்குப் பிரமாதமான வரவேற்பளிக்கிறான். ஆனால் அன்னை அதற்கு மலைத்து அங்கு தங்கினாளா? கடமை! அதனை மன்னனுக்கு உணர்த்திக் கால் சென்ற வழி சென்றாள். சீலமிக்க காட்சி.

எஸ். நாகராஜன்,

தேவகோட்டை.

பணம், பணம் என்று பதுக்கி வைத்த பாதகன் ஆழ்வார், ஔவையை ஏமாற்றி வயிற்று நோயால் துடித்தான். அவனுக்குப் பணம் உதவியதா? இல்லை, மங்கிக்கிடந்த அறிவு புத்தொளி பெற்றது. ஔவையிடம் ஓடினான். வலி தீர்ந்தது. அவன் துர்க் குணமும் ஒழிந்தது. படிப்பினை கொண்ட காட்சி.

பி. தியாகராஜன்,

திருச்சி.

தமிழின் சிகரம் ஔவை கைலாசம் செல்கிறாள். வயது முதிர்ச்சி காரணமாகத் தளர்நடை போட்டுச் செல்கிறாள் ஔவைப்பாட்டி. தமிழ்த் தெய்வம் வருவதைக் கண்டு உலகாளும் தெய்வம் எழுந்து நிற்கிறது. தமிழுக்கு இதைவிட உயர்வு காட்ட முடியுமா? அற்புதமான காட்சி.

கே. சுந்தரம்,

காரைக்குடி.

பயங்கரமான காடு. அங்கே ஒரு கூடையில் ஒரு பெண் குழந்தை. பெற்றவர்கள் விட்டுச் சென்று விடுகிறார்கள். முயல், மான், பக்ஷி ஜாலங்கள் எல்லாம் குழந்தையருகே ஓடி விளையாடுகின்றன. காற்று, மின்னல், இடி, கடுமழை. மரக்கிளைகள் முறிந்து விழுகின்றன. கப்பலைப் போல் மிதந்து செல்லும் கூடையிலுள்ள குழந்தை பாணரிடம் பத்திரமாகச் சேருகிறது. இதயம் தொடும் சிறந்த காட்சி.

அருணா நமசிவாயம்,

திருவாரூர்.

பாரி மகளிருக்கும் தெய்வீகனுக்கும் மணமுடித்த ஔவை, குழந்தைக் குலத்துக்கு விடுதலை தரக் கிளம்புகிறாள். சிறு மூட்டையுடன் செல்லும் மூதாட்டியிடம், 'என்ன பணியாரம்?' என்று கேட்கின்றனர் குழந்தைகள். பல நாள் கஷ்டப்பட்டு உங்களுக்கென்று தயாரித்த இனிப்புப் பலகாரம்'

என்று கூறி அவர்களிடம் ஏட்டுச் சுவடிகளைக் கொடுக்கிருள் அன்னை. இந்தச் சமயத்தில் இப்படிப்பட்ட காட்சிகள் எவ்வளவோ வரவேற்கத் தக்கவை.

எஸ். கே. சுவாமி,
பாளையங்கோட்டை.

பெற்ற குழந்தையை நடுக்காட்டில் விட்டுத் தன்னுடன் வரச் சொல்கிருன் கணவன். பத்து மாதம் சுமந்து பெற்ற குழந்தையை மனித நடமாட்டமற்ற ஆரண்யத்திலே விட்டுச் செல்ல ஒரு தாய்க்கு மனம் வருமா? 'அன்னை நெஞ்சமே அஞ்சாதிரு' என்று ஆறுதல் கூறுகிறது குழந்தை! தாயின் மனம் மேலும் துன்புறுகிறது. இவ்வளவு புத்தி சாலியான குழந்தையை வளர்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று தவித்தாலும் கணவன் சொல்லைத் தட்டி நடந்தறியாத அப்பேதை அவனுடன் செல்வது நம் கண்களிலே நீர்சொரியச் செய்கிறது.

த. வெங்கடலக்ஷ்மி,
கோயமுத்தூர்.

சண்டிராணி

தன் சகோதரி சம்பா தான் காதலிப்பவனுடன் ஆனந்தமாக இருப்பதைக் கண்டு மனமொடிந்து திரும்புகிருள் சண்டி. அப்போது அவளை சம்பா எனநினைத்த அசட்டு முகுந்தன் நிலா பாட்டு பாடும்படிக் கேட்கிருன். அதைப் பாடும்போதே அவளுக்குப் பழைய ஞாபகம் வரவே அழுது விடுகிருள். அவளது அந்த நிலை நம்மையும் கண் கலங்கச் செய்கிறது.

எம். பி மூர்த்தி,
பாளையங்கோட்டை

காட்டிலே வசிக்கும் சண்டியை சந்திக்கிருன் கிஷோர். அவன் திரும்பும்போது பல திட்டங்களுடன் திரும்புகிருன். சண்டிக்கு அவன் மீது காதல். ஆனுல் அவனே? அப்பாவியான சம்பாவின் மீது அவனுக்கு ஆசை. சம்பாவை திட்டப்படி கிஷோர் வீட்டிற்கு அனுப்பி தான் சம்பாவாக நடிக்கிருள் சண்டி. ஒருநாள் ரகசிய சுரங்கம் வழியே கிஷோரிடம் ஓடி வருகிருள். ஆனுல் அங்கே கிஷோரும் சம்பாவும் பால் நிலவை அள்ளியள்ளிப் பருகுகிருர்கள். சண்டியின் மனம் உடைந்து விடுகிறது. அவள் முகத்தைக் காணவே நம் கண் கூசுகிறது. காதலில் பெண்களுக்கு ஏமாற்றமேற்பட்டு விட்டால் அதைத் தாங்க அவர்களால் முடியுமா?

கே. துரைசாமி,
ஸ்ரீரங்கம்.

காதலில் ஏமாற்றமடைந்த சண்டி தற்கொலைக்குத் துணிந்து விடுகிருள். ஆனுல் சிறிது தடுமாறிய மனம் சரியாகி விடுகிறது. நாட்டின் நலனுக்காக, பாட்டிக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதற்காக, பிரசண்டனை ஒழித்துத் தன் தந்தையைச் சிம்மாசன மேற்றுவதற்காகத் தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணிக்கத் துணிகிருள். அந்த முடிவும் அவள் முடிவும் நம்மைக் கலங்கச் செய்கின்றன.

"ராவண்ணு",
காரைக்குடி.

தகப்பன்: ஏய் அதிகப் பிரசங்கி! நீ பெரிய ஹீரோயினுனு நான் உங்க அப்பனுக்கும் தெரிஞ்சுக்கோ!

"ஸார் எனக்கும் உங்களைப்போல பெரிய நடிகன் ஆக வேணும்னு ரொம்ப ஆசையிருக்கு ஸார்! என்ன பண்ணலாம்?

காட்டில் சந்திக்கும் சண்டியிடம் கிஷோர் தன் ஞாபகமாக ஒரு குரங்கு பொம்மையைத் தருகிறான். காதலின் பரிசு என்று நினைக்கிறாள் சண்டி. ஆனால் சம்பாவை அவன் காதலிப்பதைக் கண்ட சண்டியின் கையிலிருந்த குரங்கு பொம்மை விழுந்து உடைகிறது. நல்ல விளக்கக் காட்சி.

எஸ். செபஸ்ரியன்,
குருநகர், யாழ்ப்பாணம்.

ராஜபுத்ர பெண்மணிகள் வீரத்தில் யாருக்குமே குறைந்தவர்களல்ல. கரண்டி பிடிக்கும் அவர்கள் கை, கத்தியைப் பிடிக்க எப்போதுமே தயங்காது. ஆனால் காதல் அவளையும் எரிக்கிறது. கைகூடாத காதலால் முதலில் தற்கொலைக்கே துணிகிறாள் அவள். ஆனால் அப்படித் தற்கொலை செய்து கொள்ளுவதைவிட தேசத்திற்காக உயிர்த் தியாகம் செய்யத் தீர்மானித்து கடைசியில் தியாக மாதாவாக மறைகிறாள். இந்தியப் பெண்மணிகளின் வீரத்தை விளக்கும் சீரிய காட்சி.

"சதுரங்கன்",
சென்னை

இன்ஸ்பெக்டர்

படித்த கமலா கலைக்காகத் தன் 'பெருநிதி'யை இழந்து தவிக்கிறாள். ஆனால் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவிக்கும் அவள், மோகனைத்தேடிக் கிளம்பிய போது, படித்தேயறியாத ஒரு பட்டிக் காட்டுப் பெண் கற்பைக் காப்பாற்றிக் கொள்ளப் படும் பாட்டைக் கண்டு வெட்கித் தலைகுனிகிறாள். அவளை ஏமாற்றிய காதலன் துடி துடித்துச் சாகிறான். படித்த பெண்களை உஷார் படுத்துகிறது இந்தக் காட்சி.

ஜி. கிருஷ்ணமூர்த்தி,
கும்பகோணம்.

தனக்கென தீர்மானிக்கப் பட்ட கமலாவுக்கு அவள் விருப்பப்படி நடனம் கற்றுக் கொடுக்க தன் நண்பனை ஏற்பாடு செய்கிறான் ராஜா. ஆனால் மோகன் அவள் கற்பைச் சூறையாடி விடுகிறான். ராஜா மனதை யடக்கிக் கொண்டு கமலாவை ஏற்கும்படி மோகனிடம் வேண்டுகிறான். நம் உள்ளத்தில் ஒரு வேதனை ஏற்படுகிறது.

ஏ. கே. ராஜாமணி,
மாயூரம்.

அன்பு

வறுமையுடன் போராடிய போதிலும் தங்கம் எப்படியோ செல்வத்துக்கு மட்டும் உணவளிக்கிறாள். தனக்கு மட்டும்தான் சாப்பாடு கிடைக்கிறது என்பதை ஒரு நாள் கண்டு கொள்ளுகிறான் செல்வம். 'எவ்வளவு நாட்களாக இந்த நாடகம் சித்தி? உங்களைப் பட்டினி போட்டுவிட்டு நான் மட்டும் சாப்பிடுவதா?' என்று கூறி வேலை தேடக் கிளம்புகிறான். அனுபவிக்கக் கூடிய காட்சி.

சோமு,
சென்னை.

தேவதாஸ்

நோயுடன் துர்க்காபுரம் வந்து சேருகிறுன் தேவதாஸ். அங்கே அவன் மரணமடைகிருள். பார்வதி பூஜை செய்து கொண்டிருக்கும் போது விளக்கு அணைந்து விடவே ஓடி வருகிருள். மகேந்திரன் மூலம் தேவதாஸின் மரணச்செய்தி கிடைக்கிறது. அப்படியே மாடிப்படியிலிருந்து விழுந்து விடுகிருள். மீண்டும் எழுந்து ஓட முயற்சிக்கும்போது கால் தடுக்கி விழுந்து மரணமடைகிருள். இந்தக் கட்டம் காண்பவர் கண்களைக் கலங்கச் செய்கிறது.

மு. ராமசாமி,
திருமலைராயன் பட்டினம்.

தோ பிகா ஜமீன்

நெற்றி வியர்வை சிந்த, நிலத்தை தெய்வமாக நினைத்துப் பாடுபட்டு உழைத்து அதன் மூலம் வரும் வருவாயைக் கொண்டு நிம்மதியாக அரை வயிற்றுக்காவது சாப்பிட்டு குடித்தனம் செய்யும் குடியானவன் (ஏழை உழவன்) சாம்பு, தன் ஜமீன்தாருக்கு கொடுக்க வேண்டிய கடன் தொகையைச் செலுத்துவதற்காக கல்கத்தாவிற்கு தன் சிறு பையனுடன் சென்று வேலை தேடுகிருன். கடைசியாக ஓர் ரிக்ஷாகாரனுக மாறுகிருன்.

சிறு பையனும் தன் தகப்பனுரின் கஷ்டத்தைப் பொறுக்க முடியாமல் தானும் ஏதாவது வேலை செய்து தன் நிலத்தை கடனிலிருந்து மீட்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் தன்போன்ற மற்றொருவன் உதவி கொண்டு பூட்ஸ் துடைக்கும் வேலையை செய்து கை நிறையக் காசு கொண்டு வருகிருன். அன்று சாம்பு இரவு முன்னதாகவே வீட்டிற்கு வந்து விடுகிருன். பையன் அன்று பகல் வேலை செய்துவிட்டு சற்று தாமதமாக வீட்டிற்கு பயத்துடன் வருகிருன். தினம் பையன் வரவை எதிர்பார்த்து சந்தோஷத்துடன் வரவேற்கும் அவன் பையனைக் கூப்பிட்டும் காணுதது கண்டு விசாரிக்கிருன் ரிக்ஷாவின் சொந்தக்காரனுன நண்பன். தான் கூட்டி வருவதாகச் சொல்லி நண்பன் வெளிவர, பையனும் உற்சாகத்துடன் வருவது கண்டு மகிழ்ந்து விஷயத்தைச் சொல்லி உள்ளே அனுப்புகிருன்.

சாம்பு பையன் போய் வந்த இடம், எதற்காக இவ்வளவு நேரம் ஆகியது போன்ற வார்த்தைகளைக் கோபத்துடன் கேட்கிருன். பையன் மிகுந்த பயத்துடன் நடு நடுங்கிக் கொண்டு தன் சட்டைப் பையில் கையைப் போடுகிருன். இதைக் கவனித்த சாம்பு தானே முந்திக் கொண்டு அவனிடம் பணமிருப்பது கண்டு ஆச்சர்யப்பட்டு, அவன் திருடியதாக தப்பாக நினைத்துக்கொண்டு, அவனிடம் ஒன்றுமே கேட்காமல் நன்ருக பிரம்பால் தன் கை வலிக்க செம்மையாக அடித்து நொறுக்கிவிடுகிருன். நமக்கு பையன் படும் வேதனை தாங்காது நம்மையே அடிப்பதாக உணர்ச்சி ஏற்படுகிறது. சினிமா என்பதையே மறந்து விடுகிருேம்.

டி. எஸ். ஆர்.,
சென்னை.

பழையகால ஹாஸ்ய நடிகர்:— இந்தக் காலத்துப் படங்களுக்கும் எனக்கும் ரொம்ப தூரம். சீ சீ! இப்ப வர படங்களிலே ஹாஸ்யமா இருக்குது?....

தபால் பெட்டி

நடிகர்கள் கவனிக்க

சங்கடப்படும் உள்ளத்திற்குச் சாந்தி அளிப்பது கலை. ரஸிக உள்ளம் படைத்த யாவரும் ரஸித்து அனுபவிப்பர் அதை. பராரியாக இருந்து கலையுலகில் காலடி வைத்த கலைஞர்களில் பலர், இன்று ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்து அவர்கள் ஆட்டி வைக்கும் பதுமைகளாகிக் கௌரவமிழந்து வருகிறார்கள். கலைகளைப் போற்றி வரும் நம் தேசிய அரசாங்கத்தின் விரோதிகளாக இருக்கும் சிறு கட்சிகளின் கையாட்களாக இல்லாமல் கலைஞர்கள் கலைக்காகவே பாடுபட்டால்தான் உயர்வு உண்டு. இதை குறிப்பிட்ட நடிகர்கள் உணருவார்களா?

ப. சுவாமிநாதன்,
திருவிடமருதூர்.

பத்திரிகைகளும் பட விமர்சனமும்

சமீபத்தில் வெளியான சில படங்களின் விமர்சனங்களைப் பத்திரிகைகளில் பார்த்தேன். பிரமாதமாக எழுதப்பட்டிருந்தது. படத்தைப் பார்த்தேன். சர்வமட்டமாக இருந்தது. விளம்பரங்களுக்காகவும் இலவசமாகப் படம் பார்க்கவும், சிற்றுண்டி—சாப்பாடு அருந்தவும் வசதி கிடைப்பதற்காகவும் பத்திரிகைகள் மட்டரக படங்களை உயர்வாக எழுதி விடுகின்றன. வெட்கப்பட வேண்டிய தன்மையாகும் இது. பத்திரிகைகள் மக்களுக்குப் பிரதிநிதி போன்றவை. நேர்மையுடன் விமர்சனமெழுத முடியா விட்டால் எழுதாமலே இருந்துவிட வேண்டும்.

வி. வி கேபி, தண்ணீர்மலை,
காரைக்குடி.

ஏழை பெயரால் ஏனிந்த வேலை?

புரட்சி என்றனர் பட உலகினர் சிந்தனைச் சிற்பிகளின் சீர்திருத்தக் கதைகளைக் கண்டு! ஏழ்மை—ஏழை இதை வைத்துக் கொண்டு, மக்களைக் கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கச் செய்யும் அளவிலே கதைகள் புனைந்தனர். பணக்காரனின் பகட்டையும் கர்வத்தையும் கண்டித்தனர். பாட்டாளிகளுக்காகப் பரிந்து வரிந்து தள்ளினார்கள். கற்பனை விரிய விரிய ஏழ்மையை ஒழிப்பது பற்றிச் சொல்லோவியம் தீட்டினர். ஆனால், ஏழை ஏழையாகவேதான் இருக்கிறான். ஏழ்மை யாரையும் விடவில்லை. நாடு பஞ்சத்திலடிபட்டுத் தவிக்கிறது. பாட்டாளி எழுத்தாளன் பணக்காரனாகி விட்டான். பாட்டாளியாக நடித்த நடிகன் பணம் சேர்த்து விட்டான். ஆனால் ஏழ்மையைப் போக்க எவனும் துணியவில்லை. கஞ்சித் தொட்டிகள் நடத்த கலை உலகத்தால் முடியாதா? எதைக் காட்டிக் காசு பறிக்கிறதோ அதை ஆதரிக்க முடியாதா, இந்தச் சினிமா உலகத்தால்? கருணையே யில்லாதவர்களும் மனிதர்களா?

கண்ணபிரான்,
குருக்கத்தி.

சுகாதாரக் குறை

நம் மாகாணத்தில் அனேக தியேட்டர்கள் வெறும் குகைகளாகக் காட்சியளிக்கின்றன. 'கோடவுன்' என்ற சேமிப்பு இடமாக இருந்தவை யெல்லாம் தியேட்டர் என்ற பெயரில் இயங்குகின்றன. பிராண வாயு பிராணன் போகும்வரை கிடைக்காது. வருமானமில்லையா? நல்ல மூட்டைப் பூச்சிகளை உற்பத்தி செய்து சகல வீடுகளுக்கும் சப்ளை செய்யும் ஸ்தலங்களாகத் தியேட்டர்களை

நடத்தி வர சர்க்கார் ஏன் அனுமதிக்கிருர்கள்?

ஏ. எம். எஸ். ஏ. சத்தார்,

தர்மபுரி.

கட்சிப் பிரசாரம்!

மதுரை பத்திரிகாசிரியருக்கு அளித்த பேட்டிக்கு மாருக திரை இளவரசர் கணேசன், 'திரை மூலம் கட்சிப் பிரசாரம் செய்வது சர்வ நியாயம்' என்கிருர்! ரொம்பவும் நியாயம்தான். ஆனல் அதில் நேர்மை இருக்க வேண்டும். 'உன் கட்சிக் கொள்கைகளை எடுத்துக் கூறு; பிறகு மக்கள் தீர்ப்புக்கு விடு. ஆனல் பிறர் மீது, பிற கட்சிகள் மீது வசை புராணம் பாடாதே!' என்றுதான் கட்சிப் பிரசார நடிகர்களைக் கேட்டுக் கொள்ளுகிருேம். ஒருவனுக்கு எவ்வளவு சுதந்திரம் இருக்கிறதோ அவ்வளவு பொறுப்பும் இருக்கிறது. மற்றவன் சுதந்திரத்தில் தலையிட்டு அவன் மனதைப் புண்படச் செய்யும் எந்த உரிமையும் இந்தச் சுதந்திர மனிதனுக்கு இல்லை என்பதை நேர்மையுடன் ஒப்புக்கொள்ள வேண்டும்.

தமிழ் மாணவன்,

திருச்சி.

கருணை காட்டுங்கள்

'பேசும் படம்' செப்டம்பர் இதழில் இந்தத் தலைப்பில் வெளியான கட்டுரை என் இதயத்தைத் துளைத்து விட்டது. எக்ஸ்ட்ராக்களின் நிலை கண்டு மனம் துடிக்கிறது. பாதுகாப்பற்ற நிலையில் அவர்கள் தவிப்பது நமது துரதிருஷ்டந்தான். ராமதாஸை ஏராளமான படங்களில்பார்த்திருக்கிறேன். ரொம்பவும் நன்ருக நடித்திருக்கிருர். எக்ஸ்ட்ரா என்ற நிலையிலேயே அவர் இருப்பதால் இவ்வளவு அலக்ஷியமா? மச்சரேகை, காம், நிரபராதி, கைதி போன்ற படங்களில் மிகவும் நன்ருக நடித்திருக்கிருர் நடிகர் ராமதாஸ். நடிகர் சங்கம் முதலில் எக்ஸ்ட்ராக்களின் நிலையை உயர்த்தப் பாடு பட வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்காகச் சிரமம் எடுத்துக் கொண்ட 'பேசும் படம்' பாராட்டுதலுக்குரியது.

எம். பி. மூர்த்தி,

பாளையங்கோட்டை.

படமுதலாளிகளின் மதியீனம்

சினிமா, மக்களுக்குப் பல வகைகளில் பயன் பயக்க வல்லது. இதில் கிஞ்சித்தும் ஐயமில்லை. ஆனல் இன்று வெளிவரும் அநேக படங்கள் நன்மை பயக்குவதைத் தவிர்த்து அவர்களைக் கெட்ட பாதைகளில் செலுத்துகின்றன. இதற்குக் காரணம் படமுதலாளிகளே. அவர்கள் ரசிகர்களின் மனப்போக்கை அறியவில்லை. ஆபாசம் நிறைந்த படத்திற்குத்தான் அதிக வசூல் கிடைக்குமென்று நம்புகிருர்கள். இது மதியீனம். ரசிகர்கள் தமிழ்ப்பண்பையும், அறிவையும் புகட்டவல்ல படங்களையே அல்லாது அரை நிர்வாணத்தை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. ஆதலால் மக்களின் சொந்த வாழ்க்கைக்கே பயன் பயக்கத்தக்க படங்கள் வெளி வர வேண்டும்.

வி. வி. நவரத்தினம்,

யாழ்ப்பாணம், இலங்கை

கல்விப் படங்கள்

கல்விப் படங்கள் வந்தால நாடு நலம் பெற முடியும் என்கிருர்களே, எல்லாமே ஒளவையாரைப் போல இருந்து விட முடியுமா? ஒளவையார் படத்தைப் போல் பெருமுயற்சியின் பேரில் தயாரிக்கப்படா விட்டாலும் ஒரு கல்விப் படமாக திருவள்ளுவர் படம் வந்தது. அதில் நடித்தவர்கள் திறம் பட நடித்தனர். கல்விப் படம் தான். ஆனல் வரவேற்பைப் பெற வில்லை. இப்படிப்பட்ட நிலையில் கல்விப் படங்களைத் தயார் செய்ய யார் முன் வருவார்கள்? ஸ்ரீ வாஸன் வியாபார தந்திரம் தெரிந்தவர். அவர் ஒளவையாரைத் தயார் செய்தார் சிறப்பாக. தமாஷாவரி விலக்கில்லாவிட்டாலும் கூட அவரால் அப்படிப்பட்ட படங்களைத் தயாரிக்க முடியும். மற்றவர்?

ராமதாஸ்,

கரூர்.

'மேகவண்ணன்'

மு. கருணாநிதி

''எதிர்ப்பை சமாளித்துக் கொண்டு முன்னேறுபவனே வாழ்க்கையில் வெற்றி பெற்றவனாவான்'' என்பதாக ஒரு ஆங்கில வசனம் உண்டு. இன்றைய நமது சினிமா உலகில் வசன வழியே இதைத் திறமையாகக் கையாளுகிறார் கருணாநிதி.

வசனம் வெறும் வார்த்தைக் கூட்டங்களாக அல்லாது மக்களிடையே ஒரு புத்துணர்ச்சி கொண்டெழச் செய்து, விந்தைபுரியும் சொல்லம்புகளாக அதை மாற்றிய பெருமை நம் தென்னிந்திய திரைப்பட வசனகர்த்தாக்களில் கருணாநிதியையும் ஓரளவு சேரும்.

இளங்கோவனுக்குப் பின் மங்கி வந்த வசன கர்த்தாக்களின் உண்மை வலிமையை 'வேலைக்காரி' மூலம் அண்ணாதுரை மீண்டும் படவுலகுக்கு எடுத்துக் காட்டினார். அண்ணாதுரையைத் தலைவராகக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் பணியாற்றி வரும் கருணாநிதி அரசியல் உலகில் அவருடன் தோளோடு தோள் கொடுத்து பணியாற்றியதுபோல் பட வுலகிலும் தன் ஒத்துழைப்பைக் கொடுத்தார்.

இலக்கியத் துறையில் பண்பட்ட அறிவும், பரந்த அனுபவமும் பெற்றவர் கருணாநிதி. தான் படித்த பண்டைய தமிழ் இலக்கியங்களை வசன வழியில் அவர் உபயோகித்து ஒரு நூதன முறையைப் புகுத்தியதோடு, தனது தற்காப்புக்கான கவசங்களாகவும் அவற்றை ஆக்கிக் கொண்டார். பார்த்திபன் பேசுகிறான்: ''முல்லை'.. குளிர்ச்சியான பெயர்! சூடத் தெரியாதவன் கையில் இருக்கும் சொகுசு-முல்லை!! ரசிக்கத் தெரியாதவனிடம் கிடந்த இன்பமுல்லை! அனுபவிக்கத் தெரியாத அசடனிடம் அகப்பட்ட அழகு முல்லை! முல்லை! நீ முல்லை நான் மணம்!!''

பார்த்திபன் உதிர்த்த இந்த வசனங்களிலேதான் எவ்வளவு பொருள் பொதிந்திருக்கின்றன? இவற்றைப் படிக்கும் போதே அந்த முல்லையை முகர அவனது எரிமலை உள்ளம் எப்படிக் கொந்தளிக்கிறது என்பதைச் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். வசனத்திற்கு ஒரு வேகத்தை கொடுத்து, பாத்திரத்திற்கும் ஒரு புத்துயிர் கொடுக்கிறது இது.

கொள்ளை ஒரு கலையாகப் பாவிக்கப்படுகிறது பார்த்திபனால். இதை அவனது தந்தையே ஆட்சேபிக்கிறார். ஆனால் பார்த்திபன் தக்க உபமானங்களைக் கொடுத்துப் பதில் பேசுகிறான்: ''தந்தையே! எத்தனையோ கவிஞர்கள் கருத்துக்குப் பொருத்தமற்ற கற்பனைகளைச் சிருஷ்டிக்கிறார்கள். கலை என்ற பெயரால் அந்தப் பொய் மூட்டைகளை பொன்னுக்கு விற்கிறார்

கள். அங்கே பொய் கலையாகிறது. வில்லிலிருந்து பறக்கும் அம்பு எத்தனையோ உயிர்களைக் குடிக்கிறது. வீரத்தின் பெயரால் அங்கே கொலை கலையாகிறது. காம லீலையில் ஈடுபட்ட காதலரை ஓவிய மாக்குகிறான். ஓவியன் ஓவியம் என்ற பெயரால் அது கலையாகி விடுகிறது. அந்தப் பட்டியலிலே நான் களவாடுவதைக் கலையாகக் கருதுகிறேன்...'' இத்தகைய வசனங்களால் அவர் பெரும்பாலான மக்களின் ஆதரவைப் பெற முடிந்தது. தவிர அவர் செய்தது சரியா தவறு என்ற பிரச்னைக்கு ''ஏன்?'' என்ற ஒரு கேள்வி எழவே இடமில்லாமற் போய் விட்டது.

கருணாநிதி முதன்முதலாக வசனமெழுதிய படம் கோவிந்தன் கம்பெனியார் தயாரிப்பான 'மருதநாட்டு இளவரசி'யாகும். அப்பொழுது அதில் நடித்தவர்கள் பிரபல நடிகர்களில்லை; ஆனால் அந்தப் படத்தின் மூலம் மக்களின் முன்னணி கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவர்கள். மைசூரில் தயாரான அந்தப் படம் சில இயற்கை அழகு வாய்ந்த காட்சிகளைக் கொண்டிருந்ததோடு சரி. மற்றபடி கலைநுணுக்க அம்சங்களிலோ, காட்சி ஜோடனைகளிலோ அந்தப் படம் எந்தப் புரட்சியும் செய்து விடும்படியாக இல்லை. ஆனால் மக்களிடையே இந்தப் படம் அந்தக் காலத்தில் ஒரு புரட்சியையே உண்டாக்கியது. அந்தப் புரட்சிக்கு முதற் காரணமாக அதில் திகழ்ந்தது கருணாநிதியின் கனல் தெரிக்கும் வசனம் தான்.

மருதநாட்டு இளவரசிக்கு மக்களிடையே கிடைத்த மகத்தான ஆதரவை, 'எவரும் முயற்சிப்பதற்குள் முந்திக் கொள்' என்ற கோட்பாடைக் கொண்ட மாடர்ன் தியேட்டர்ஸார் கண்டனர். அடுத்து கருணாநிதி அவர்களது 'மந்திரி குமாரி'க்கு வசனம் தீட்டிக் கொடுத்தார். படத்தின் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை வசனத்தின் துணைபெற்று ராஜநடை போட்டுச் சென்றது படம்.

இதில் பார்த்திபன் பேசும் வசனங்கள் வெறும் அடுக்குத் தொடர்களாக மட்டும் அமையாது கருத்துச் செறிவு மிகுந்ததாகவும் காணப்பட்டன.

கொள்ளை யடிப்பதைக் கலையாகக் கொண்ட பார்த்திபன் உபமானத்துடன் கூறும் பதில்கள் கேட்ட அவன் தந்தை மட்டுமில்லை, நம்மையும் கற்சிலையாக்கி விடுகிறது. சிந்தித்துப் பார்க்கும் நாமும் பார்த்திபன் கொடுத்த உபமானங்களால் கொலையைக் கலையாக பாவிப்பதற்குத் துணிகிறோம். இங்கேதான் கருணாநிதியின் எதிர்ப்புக்கு கவசம் போடப்படுகிறது. உபமானம் அவருக்கு வரும் எதிர்ப்பைச் சமாளித்து விடுகிறது. இதில் மேலும் ஒரு படி சென்று விடும் போதுதான் நமது புராணம் அவருக்குப் புகலிடம் தருகிறது. இதனால் எதிர்ப்பைக் கிளப்புகிறவர்களுக்கு ஒரு வாய்ப்பூட்டும் பூட்டப்படுகிறது.

கொலையைக் கலையாகப் பாவிக்க விளக்கம் கொடுத்த பார்த்திபன் தன் காதலி அமுதவல்லியிடம். அவள் அவனைக் களவாடுவதை நிறுத்தும்படிக் கேட்டதற்கு, விடைகூறுகிறான்: ''கொள்ளை அடிப்பதையே தொழிலாகக் கொண்ட யக்ஷன் ராமாயணம் பாடும் வால்மீகியானான். கொலை செய்வதையே தொழிலாகக் கொண்ட எத்தனையோ பாதகர்கள் பக்தர்களாகி விட்டார்கள். கேவலம் அவர்கள் கொலை கொள்ளைகளைத் தொழிலாகக் கொண்டவர்கள். நானோ உன்னதமான கலையாகக் கருதுகிறேன்.''

வால்மீகியைப் பற்றி புனிதமாக எண்ணும் நாம் அப்போதைக்கு பார்த்திபனைப் பற்றி இழிவாக நினைப்பதில்லை ஏனெனில் அவன் கொலையையும் ஒரு கலையாகக் கொண்டவன். அதனால்தான்!

மந்திரி குமாரியின் மூலம் தனது வசனத்திற்கு மேலும் மெருகேற்றிய கருணாநிதி தொடர்ந்து தேவகி, மணமகள் படங்களுக்கான கதை வசனங்களை எழுதினார். அவரது கற்பனை ஊற்றில் கருத்து நிறைந்த வசனங்களுக்கும், கவர்ச்சிகரமான கட்டுக்கோப்பு மிகுந்த உரையாடல்களுக்கும் தடை ஏற்பட்டுவிட்டதோ என்று லேசாக ஒரு அபிப்பிராயத்தை இப்படங்கள் ஏற்படுத்தி விட்டன.

இந்த நிலையிலேதான் 'பராசக்தி'யின் அருள் கருணாநிதிக்குக் கிடைத்

தது. ஏறினார், ஏறினார், வசனத்தின் உச்சாணிக்கே ஏறினார் கருணாநிதி.

பராசக்தியில் வசனம்தான் பூரா கவனத்தையும் ரஸிகர்களிடமிருந்து கவர்ந்தது. அதுமட்டுமல்ல. எங்கெங்கெல்லாம் சினிமா தன் கவனத்தைப் பெறாமலிருந்ததோ அங்கெல்லாங்கூட பராசக்தி தாண்டவமாடினாள். கருணாநிதியின் சொற்சிலம்பாட்டம் சிகரத்தை அடைந்தது இந்தப் படத்தில்தான்.

படத்திலே நாஸ்திகம் நாடறியச் செய்யப்படுகிறது என்றார்கள் சிலர். அரசியல், ஆண்டிகளின் பழிப்புக்கும் ஆளாக்கும் நிலையை ஏற்படுத்தி விட்டது என்றார்கள் வேறு சிலர். ஆனால் எல்லோரும் ஒரு முகமாக கருணாநிதி இதில் உயர்தரமாகவே வசனமெழுதி யிருக்கிறார் என்பதை ஒப்புக் கொண்டார்கள். தூற்றுவோரும் மறைமுகமாக இதைச் சொல்லியும் தீர்த்தார்கள்.

கருணாநிதி பராசக்தியில் சில நல்ல வசனங்களைக் கையாண்டார் என்பதோடு, அவரது சில வசனங்கள் துஷ்பிரசாரம் செய்யத் தூண்டுகோலாயிருந்தது என்பதைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

“இட்லி விற்று பிழைப்பது தமிழ் நாட்டில் தாலி அறுத்தவர்களின் தாசில் உத்தியோகம்” என்கிறார் வசனகர்த்தா. தமிழ் நாட்டின் அனாதை விதவைகள் நம் கண் முன் ‘க்யூ’வில் நிற்கிறார்கள்.

“பரஸ்திரியை நாடிப் போவேன்” என்று ஒரு கணவன் சொல்லும் போது, “நானும் ஒரு புருஷனைத் தேடிக் கொண்டு போகிறேன்” என்று ஒரு பெண் கூறும்போது “ஏ சிங்கத் தமிழ் நாடே! நீ சிந்தனைச் சிற்பிகளின் கற்பனை ஊற்றை வற்ற விட்டு விட்டாயா?” என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

கோர்ட்டிலே கல்யாணி கூண்டில் நிறுத்தப்படுகிறாள். தற்கொலை செய்ய முயன்ற குற்றமும், குழவியைக் கொல்ல முயன்ற குற்றமும் அவளை அங்கு கொண்டு வர ஆதரவாக இருக்கின்றன.

நீதிபதி. ‘நீ குழந்தையை எப்படியும் காப்பாற்ற வேண்டும்’ என்று கூறுகிறார். “பச்சையாகச் சொல்கிறேன். பால் கூட என்னிடம் வறண்டு விட்டது...ஏன் என் மகன் என்ன திருஞான சம்பந்தனா பார்வதி தேவி பால் கொடுக்க?” என்று கேட்கிறாள் கல்யாணி. புராணம் இங்கு புகலிடமில்லாமல் தவிக்கிறது. ஏன், பார்வதி தேவியின் மதிப்பும் ஒரு மாற்று குறைகிறது. ஆனால் அதே பார்வதி ஞான சம்பந்தனுக்கு ஞானப்பால் கொடுத்தாளே யன்றி, பசி மறக்கப் பால் கொடுக்கவில்லை என்பதை வசனகர்த்தா மறந்து விட்டார். வார்த்தைகள் வெடிக்கும் வேகத்திலே நாமும் இதை அப்போதைக்கு மறந்து விடுகிறோம்.

கோர்ட்டிலே வாதம் நடைபெறுகிறது. “பிள்ளைக்கறி சமைத்த சிறுத்தொண்டர், ஏழு குழந்தைகளைக் கிணற்றில் தள்ளிய நல்லதங்காள் இவர்கள் எல்லோரும் குற்றவாளிகளில்லையா? கொலைகாரி யல்லவா?” என்று கேட்கிறாள் கல்யாணி. பாவம்! தன்னையும் மீறிய நிலையில் அவள் குழந்தையைக் கொல்ல முயன்றது குற்றமல்ல என்று நாமும் அப்போது தீர்மானிக்கிறோம்.

இங்குதான் கருணாநிதி எதிர்ப்பை மிக்க சாமர்த்தியமாக புராணப் போர்வை யெனும் கவசத்தை அணிந்து கொண்டு சமாளிக்கிறார். “கருணாநிதி இப்படி எழுதி யிருப்பது சரியா?” எள்ற கேள்விக்கு, “அவர்கள் செய்தது மட்டும் சரியா?” என்பது பதிலாக அமைந்து விடுகிறது.

சினிமா ஒரு பிரசார சாதனம். அதில் நல்லதையும் பிரசாரப் படுத்தலாம். தீமையையும் பரப்பலாம். “உன் ஈட்டி என் இதயத்தில் பாயும். ஆனால் என் எழுத்தாணி உன் உள்ளத்தில் பாயும்” என்று சமீபத்தில் வந்த ஒரு இலக்கியப் படத்தில் வசனமொன்று வருகிறது. எழுத்தின் சக்தி அப்படிப்பட்டது. சினிமாவோடு அது சேர்ந்துவிட்டால், செய்யக்கூடிய புரட்சி சொல்லத்தரமன்று. விளைவுகள் விவரிக்க இயலாது.

கருணாநிதியின் கற்பனை ஊற்று மேலும் வளர்ந்து தமிழ் நாட்டின் பெருமையை சினிமாவின் மூலம் அகிலமெங்கும் அறிவிக்க உதவ வேண்டும் என்பதே நமது பேரவா!

ஸ்ரீ சுந்தரி பிக்சர்ஸ்

வீர சுந்தரி

படக்காட்சிகள்

PSR

தமிழ்ப்பட உலகிலே முழு நீள ஸ்டண்ட் படங்கள் வெளியாகிப் பல வருஷங்களாகி விட்டன. பாடல், வசனம், நடனம், ஹாஸ்யம் ஆகியவற்றைப் பின்னணியாகக் கொண்ட பல ரகப் படங்கள் வந்து விட்டன.

ஸ்டண்ட் படங்கள் வரவில்லையே, பொழுது போக்காக அனுபவிக்க முடியவில்லையே என்ற, ரஸிகர்களின் குறையை 'வீர சுந்தரி' என்ற ஸ்டண்ட் படத்தின் மூலம் தீர்த்து விட்டனர் ஸ்ரீ சுந்தரி பிக்சர்ஸார்.



கே.பி. ஜானகிராமன், கே.பி
ஜே. சுந்தராம்பாள் இருவரும்
பிரதம பாகத்தில் திறமை
யுடன் நடித்திருக்கும் இப்
படத்தை பி. கே. பாஷா தயா
ரித்திருக்கிறார். விரசுந்தரி விரை
வில் திக்விஜயத்திற்குக் கிளம்பி
விடுவாள்.

தேவகி போஸின் "ரத்னதீபம்"

பெயருக்கேற்ற படமாகத் திகழுகிறது!

ஆகஸ்ட் சுதந்திர நாள் தேச விடுதலை நாளாக அமைந்து ஒரு சுப சகுனமாக நிற்பது போல் படவுலகுக்கும் கெட்ட படங்களின்றும் குறைந்த பக்ஷம் ஓர் தற்காலிக விடுதலை நாளாக அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஜெமினியின் ஔவையார் திரையீட்டை யொட்டி சில நல்ல படங்கள் திரையிடப் பட்டிருப்பதை தமிழ் நாட்டு ரஸிகர்களின் அதிருஷ்டம் தான் என்று சொல்ல வேண்டும். இந்த வரிசையிலே 'ரத்னதிபம்' ஒரு திரைக்காவியமாகத் திகழுகிறது.

'ரத்னதிபம்' வங்க மொழியிலிருந்து தமிழில் 'டப்' செய்யப்பட்ட படம். படத்திலே ரஸிக ரஞ்சகமானது என்று சொல்லக் கூடியது ஒரு கோஷ்டி நடனமும். வாண வேடிக்கைக் காட்சியும்தான். மற்றபடி படத்தில் வரும் சம்பவங்கள் அனைத்தும் உணர்ச்சிக்கும் உள்ளத்துக்கும் ஏற்படும் போராட்டத்தைத்தான் சித்தரிக்கின்றன.

பகுலி ஜமீனைச் சேர்ந்த புவன் வீட்டை விட்டு வெளியேறி விடுகிறான். பதினான்கு வருஷங்கள் உருண்டோடுகின்றன. பதினைந்து வருஷங்கள் வரையும் புவன் திரும்பி வருவான் என்ற நம்பிக்கையில் அவனது தாயார் பெரிய ராணியும். மனைவி சின்ன ராணியும் இருந்து வந்தனர். ஆனால் அவன் திரும்பாததால், அவன் இறந்து விட்டான் என்று நிச்சயம் செய்யப்பட்டு ஈமக்கிரியை களை நடத்த உத்தரவிடுகிறாள் பெரியராணி.

குஸ்ருபூர் ரயில் நிலையத்தில் வந்து நின்ற ரயில் வண்டியிலிருந்து ஒரு பிரேதம் இறக்கப்படுகிறது. சந்நியாசியாகத் திரிந்த புவனின் உடல்தான் இது. அதே நிலையத்தில் வேலை செய்து வந்த கோபால இந்த பிரேதத்தைப் பார்க்கிறான். அன்றுடன் அவன் வேலையிலிருந்து நீக்கப்பட விருக்கிறான்.

பிணத்தைக் கண்ட கோபாலின் உள்ளத்திலே ஒரு போராட்டம்!

'சின்ன ராணி' அனுபா

அந்தப் போராட்டத்திற்கு முழு முதற் காரணமாக இருந்தது அவனது முகமும். சாயலும ஒன்றாக இருந்தது தான்! இந்த உருவப் பொருத்தம் கோபாலையே ஒரு கணம் திகைக்க வைத்து விடுகிறது. இறந்துபோன அந்த மனிதன் யார்? அவனிடமிருந்த டைரி கோபாலுக்கு அவனைப்பற்றிய பூரா விவரத்தையும் சொல்லி விடுகிறது. பகுலிபுரம் ஜமீன் வாரிசான புவன்தான அவன் என்பதைத் தெரிந்துகொண்ட கோபால். புவனாகவே நடிக்கத் தீர்மானிக்கிறான்.

சின்னராணிக்கு தோழி ஒருத்தி தேவை என்பதை தின்சரியில் கண்ட ராஜாராம் என்பவன் நடிகை கனகத்தை சின்னராணியிடம் அனுப்புகிறான். சின்னராணியின் மனதைக் கலைத்து தன்னை மறுவிவாகம் செய்து கொள்ளும்படிச் செய்ய வேண்டும் என்று கனகத்திடம் தெரிவிக்கிறான்.

இந்தச் சமயத்தில்தான் கோபால் பகுலிபுரம் வருகிறான். டைரிமூலமும், நேரிடையாகவும் புவனைப்பற்றிய பல உண்மைகளைத் தெரிந்து கொண்ட கோபால், பிறருக்கு சந்தேகம் ஏற்பட முடியாத வகையில் நடந்து வருகிறான்.

புவன் திரும்பி விட்டான் என்ற செய்திகேட்டு பெரியராணி புளகாங்கிதம் கொண்டாள். சின்ன ராணியின் உதட்டிலே சிரிப்பு தவழ்ந்தது. ஜமீன்

கோபாலிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அவன் உள்ளத்லே மீண்டும் ஒரு போராட்டம்!

"'தன்னிடம் பூரண நம்பிக்கை வைத்திருக்கும் பெரிய ராணி, சின்ன ராணி இருவரையும் மோசம் செய்வதா?'' என்ற எண்ணம் அவனுக்கெழுந்து விடுகிறது. மனச்சாட்சி அவனை வாட்டி வதைக்கிறது.

ஆனால் சின்ன ராணியோ அவன் அன்புக்குஏங்குகிருள். விரதம் என்று சொலலி அவளை ஒதுக்கி வைக்கிருன் கோபால். தான் செய்தது எவ்வளவு பெரிய மகத்தான தவறு என்பது அப்பொழுததான் அவனுக்குப் புலனுகிறது.

இந்த சமயம்தான் ராஜாராம். கோபால் 'போலி புவன்' என்பதை தக்க ஆதாரங்களுடன் அறிந்து கொண்டு வருகிருன். சின்ன ராணியும் கணவனது விரதம் முடிவுற்றது கண்டு களிப்புடன் அவன் அன்பைப் பெற வருகிருள. ஆனல் கடித மூலம் தான் 'போலி' என்பதை அவளுக்குத் தெரிவித்து விடுகிருன் கோபால். இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியாத பெரிய ராணி, சின்ன ராணி இருவருமே இறந்து வீடுகிருர்கள். கோபால் இப்பொழுது பழைய கோபாலல்ல. அன்பின் அருமை பெருமைகளை உணர்ந்த கோபால்!

ரத்ன தீபம் திரைக் கதை இது தான். பிரபாத் குமார் முகர்ஜி என்பவர் இந்தப் படக் கதையை எழுதியிருக்கிருர். ''வாழ்க்கையிலே மனிதன் உணர்ச்சிகளோடு போராடும் போதுதான் உயர்ந்தவனுகிருன்'' என்ற பிளாட்டோவின் தத்துவக்தை படத்தின் ஒவ்வொரு சம்பவத்திலும் கையாண்டிருக்கிருர் அவர்.

'ரத்னதிபம்' படத்தில் வசனம் பேசப்படும் காட்சிகளைவிட, மௌனமாகச் செல்லும் காட்சிகளே ஏராளமாக இருக்கின்றன. அப்படி பேசப்படும் வசனமும் சமூக வாழ்க்கைக்கு முரணுனதாகவோ, ஆபாசமும், அரசியல் கையாண்டியும் நிறைந்த சொல்லம்புகளாகவோ இல்லை. இப்படத்திற்கு வசனமெழுதிய ஈஸ்வர சங்கர சாஸ்திரி, கண்ணதாசன், டி. என். சுப்ரமண்யம் ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்களே.

கோபாலாக வரும் அபிபட்டா சார்ஜி, சின்ன ராணியாகத் தோன்றும் அனுபா இவர்களது முகபாவமும், நடிப்பும் முதல் தர மேனுட்டு குணசித்ர நடிகர்களது தரததில் இருக்கிறது. அபிபட்டாசார்ஜி வசனம் பேசாமலேயே நம் கவனத்தை வெகுவாகக் கவர்ந்து விடுகிருர். நடிகை கனகமாக வரும் மஞ்சுடே, பெரிய ராணி – மோலினு, திவான்– எஸ். ஆர். கே. ராவ் மற்றும் இதர நடிகர்களும் கச்சிதமாக நடித்திருக்கிருர்கள்.

டைரக்டர் தேவகி போஸின் கறபனைத் திறன் படததின் ஒவ்வொரு 'பிரே'மிலும் பிரதிபலிக்கிறது. பதினன்கு ஆண்டுகள் கழிந்தும் புவன் திரும்பாததால் அவனது ஈமச் சடங்குகள் கங்கைக் கரையில் நடைபெறுகிறது. அதே சமயம் போலி புவன் ரயிலில் வருவதைப் பின்னல் காட்டியிருப்பதும், 'பகைவனுக்கருள்வாய்' என்ற பாரதியாரின் பாட்டை சமயமறிந்து பாடச் செய்திருப்பதும் இவரதுகலைஞானத்தை உணர்த்துகிறது.

'ரத்ன தீபம்' பெயரளவில் மட்டுமல்லாமல் படங்களிலேயும் ஒரு 'ரத்ன தீப'மாகத் திகழுகிறது!

செய்திச் சுருள்

வீரசுந்தரி

நீண்ட நாட்களுக்குப் பின் தமிழ்ப் படவுலகில் ஒரு ஸ்டண்டு படம் தயாராகியிருக்கிறது. படவுலகுக்கு புதியவர்களான ஸ்ரீ சுந்தரி பிக்சர்ஸார் இத்துணிகரமான முயற்சியில் ஈடுபட்டிருக்கிருர்கள். இது மட்டுமல்ல, குறுகிய காலத்தில் குறைந்த செலவில் இப்படத்தை முடித்து படவுலகில ஒரு பரபரப்பையும் உண்டாக்குகிருர்கள். பி. கே. பாஷா இந்தப் படத்தை தயாரித்திருக்கிருர். கே. பி. ஜானகிராம் கதாநாயகனுக இந்தப் படத்தில் நடித்திருக்கிருர், கதாநாயகி வீரசுந்தரியாக கே. பி. ஜே. சுந்தராம்பாள் தோன்றுகிருர். மற்றும் குமாரி ராஜம், சந்திரா, சாயிராம் முதலியோரும் வீரசுந்தரியில் நடித்திருக்கிருர்கள். இப்படம் ஸ்டார் கம்பைன்ஸில் தயாராகியிருக்கிறது.

இவர்களது இரண்டாவது படத்திற்கான ஆரம்ப பூஜை சென்ற மாதம் 11-ம் தேதியன்று ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டூடியோவில் நடைபெற்றது. பத்மினி காமிராவை முடுக்கி வைத்தார். கே. பி. ஜானகிராம், கே. பி. ஜே. சுந்தராம்பாள் இருவரும் பிரதம பாகத்தில் இதில் நடிக்கிருர்கள். இந்தப் படத்தையும் பி. கே. பாஷா தயாரிக்கிருர்.

ஆர். ஆர். பிக்சர்ஸ் புதுப்படம்

வாழப் பிறந்தவளை வெளியிட்டு வெற்றி கண்ட ஆர். ஆர். பிக்சர்ஸார் தங்களது இரண்டாவது தயாரிப்பை ரேவதி ஸ்டூடியோவில் ஆரம்பித்திருக்கிருர்கள். சென்ற மாதம் 10-ம் தேதியன்று இதன் படப்பிடிப்பு ஆரம்பமாகியது. வசனங்களை டி. கே. கோவிந்தன் அமைத்துக் கொடுத்திருக்கிருர். சிவாஜி கணேசன், எம். ஜி. ராமச்சந்தர், பி. எஸ். சரோஜா, கே. சாரங்கபாணி முதலியோர் பெயரிடப்படாத இந்தப் படத்தின் பிரதம நடிகர்கள். ராமண்ணு படத்தை டைரக்ட் செய்கிருர்.

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி

ரேவதி ஸ்டூடியோவில் இந்த முழு நீள ஹாஸ்யப் படம் தயாராகி வருகிறது. ஏவி. எம்.மில் டைரக்டராகப் பணியாற்றிய ப. நீலகண்டனும், நடிகர் பி. ஆர். பந்துலுவும் கூட்டாகச் சேர்ந்து இந்தப் படத்தை தயாரித்து வருகின்றனர். இந்தப் படத்தின் மூலம் திருவாங்கூர் சகோதரிகளில் இளையவரான ராகினி கதாநாயகியாக அறிமுகமாகப் போகிருர். அவருக்கு ஜோடியாக டி. ஆர் ராமச்சந்திரன் சேர்ந்திருக்கிருர். சிவாஜி கணேசன், பி. ஆர். பந்துலு, பத்மினி முதலியோரும் இதில் நடித்து வருகிருர்கள். லலிதா இப்படத்தில் நடனமாடுவாராம். 'பத்மினி பிக்சர்ஸ்' என்ற ஸ்தாபனத்தின் பெயரில் தயாராகி வரும் இப்படம் ப. நீலகண்டன் டைரக்ஷனில் உருவாகி வருகிறது.

மனிதனும் மிருகமும்

'வாழ்க்கை கொடுப்பதற்கேயன்றி பறிப்பதற்கல்ல!' என்ற உயர்ந்த தத்துவத்தோடு விளம்பரப்படுத்தப்

பட்டிருக்கிறது ரேவதியின் 'மனிதனும் மிருகமும்' என்ற படம். கே. வேம்பு எஸ் டி. சுந்தரம்கூட்டு டைரக்ஷனில் தயாராகியிருக்கும் இந்தப்படம் சுவாரஸ்யமான கதையமைப்பைக் கொண்டது. அக்டோபர் மாதத்தில் இப் படம் வெளிவரும்.

நால்வர்

சமூக வாழ்க்கையில் வெவ்வேறு துறையைச் சேர்ந்த நால்வரது வாழ்க்கையில் ஏற்படும் சம்பவங்களே சங்கீதா பிக்சர்ஸ் 'நால்வர்' திரைக் கதையாக அமைந்துள்ளது. குமாரி தங்கம் இந்த நால்வரில் நம் கவனத்தை அதிகமாகக் கவருவாராம். கதாநாயகியாக வரும் அவரது உடையமைப்பும், தோற்றமும் பிரமாதமாக இருக்கிறதாம். நாகராஜன், கண்ணப்பன் மற்றும் பலரும் இந்தப்படத்தில் தோன்றுகிறார்கள். சங்கீதா பிக்சர்ஸாரின் இரண்டாவது படமான நால்வரை வி. கிருஷ்ணன் டைரக்ட் செய்திருக்கிறார். கோயம்புத்தூர் சென்டிரல் ஸ்டூடியோவில் வளர்ந்திருக்கும் இந்த 'நால்வர்' நான்கு பேர் பார்த்து 'நல்ல படம்' என்று சொல்லுமளவுக்கு இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இம்மாத மத்தியில் நால்வர் நம்மைத் தேடிக் கொண்டு திரைக்கு வருவார்களாம்.

மங்கள கௌரி

மாடர்ன் தியேட்டர்ஸ் 'திரும்பிப் பார்' படத்தை கன்னட மொழியில் தயாரிக்கவில்லை என்று தெரிய வருகிறது. கன்னடத்தில் அவர்கள் தயாரித்து வருவது முழுக்க முழுக்க ஒரு புதுப்படமாம் டி. ஆர். சுந்தரம் டைரக்ஷனில் தயாராகும் இதில் ஹரிணி மற்றும் பல கன்னட நடிகர்கள் நடித்து வருகிறார்கள். இம்மாதத்தில் வெளிவரக்கூடிய மற்றொரு படம் மங்கள கௌரி. இக்கன்னடப்படத்தின் வெளியீட்டுக்குப் பின் விக்தன் எழுதி வரும் கதையின் படப்பிடிப்பு ஆரம்பமாகும் என்று தெரிகிறது.

கிருஷ்ணனின் புது முயற்சி

ரேவதி ஸ்டூடியோவிலே அன்றொரு நாள் பாகவதரும் கிருஷ்ணனும் நாதஸ்வரத்தை கனஜோராக 'ஊதிக்' கொண்டிருந்தார்கள். என். எஸ். கிருஷ்ணன் புதிதாக தயாரிக்கும் படமொன்றில் நாதஸ்வர வித்வானாக இவர்கள் வருகிறார்கள். புதுமாதிரியான கதைப்போக்குடைய இந்தப் படத்திற்காக சில பாட்டுகள் பிரபல நாதஸ்வர வித்வான் ராஜரத்னத்தைக் கொண்டு பதிவாக்கப்பட்டிருக்கின்றன.

தூக்குத் தூக்கி

அருணாபிலிம்ஸார் அடுத்தபடியாக 'தூக்குததூக்கி' என்ற பிரபல கதையைப் படமாக்கப் போகிறார்கள். இந்தப் படத்திலே லலிதா—பத்மினி சிவாஜி கணேசன் மற்றும் பலர் நடிக்கப் போகிறார்கள். வழக்கம்போல ஆர். எம். கிருஷ்ணசாமி இந்தப் படத்தை டைரக்ட் செய்வார் என்று தோன்றுகிறது.

நியூ ஈரா புரொடக்ஷன்ஸ்

பிலிம் சென்டரின் கூட்டுறவோடு டைரக்டர் ராம்னாத் சொந்தத்தில் தயாரித்து வரும் முதல் சமூகப் படம் வெகு துரிதமாகத் தயாராகி வருகிறது. நாகய்யா இந்தப் படத்தில் வக்கீலாக வருகிறார். கிருஷ்ணகுமாரியும் மனோஹரும் காதலர்களாக வருகின்றனர். டிஸம்பர் மாதத்தில் இப்படம் அநேகமாக வெளிவந்து விடுமாம்.

கண்ணப்பர்

ஏவி. எம். பில் குப்பி புரொடக்ஷன் ஸார் கண்ணப்ப நாயனார் படத்தைத் தயாரித்து வருகிறார்கள். பண்டரிபாய், வேதா முதலியோர் இந்தப் படத்தின் பிரதான பாகத்தில் நடித்து வருகிறார்கள். எச். எல். என். ஸிம்ஹாவின் டைரக்ஷனில் கண்ணப்பர் திரை ரஸிகர்களின் கண்களுக்கு ஒரு நல்ல விருந்தாக உருவாக்கப் பட்டு வ்ருகிறார்.

மனம் போல் மாங்கல்யம்

நாராயணன் கம்பெனியார் பி. புல்லையா டைரக்ஷனில் வாஹினியில் தயாரிக்கும் மனம்போல் மாங்கல்யம் படம் ஒரு தீபாவளி வெளியீடாக இருக்கலாம். 'ஜெமினி' கணேசனுக்கு இந்தப் படத்தில் நிறைய சந்தர்ப்பங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஹாஸ்ய ரசத்துடன் கூடிய

அவரது பாத்திரத்தின் தன்மை பட உலக ரஸிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 'மனம்போல் மாங்கல்யம்.' அவரவரது மனம் போலவே நடைமுறை வாழ்க்கையும் நடைபெறும் என்பதைச் சித்தரிக்கிறது.

கனவு

கே. ஆர். கே. புரொடக்ஷன்ஸாரது 'கனவு' வெகு விரைவிலேயே நினைவாகப் போகிறது. அதாவது நல்லதொரு படத்தை ரஸிகர்களுக்கு அளிக்கவேண்டும் என்று 'கனவு' கண்டு கொண்டிருந்த அவர்களது 'கனவு' படம் முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. லலிதா, வி. கே. ராமஸ்வாமி முதலியோர் பி. வி. கிருஷ்ணன் டைரக்ஷனில் தயாராகும் கனவில் நடித்து வருகிறார்கள். ரேவதியில் இந்தப் படம் தயாராகி வருகிறது.

கிருஷ்ணா பிக்சர்ஸ்

கிருஷ்ணா பிக்சர்ஸார் தங்களது அடுத்த படத்திற்கான ஆக்க வேலைகளில் மும்முரமாக முயன்றிருக்கிறார்கள். லலிதா, பத்மினி இருவரும் இப்படத்தில் நடிப்பார்கள் எனத் தெரிய வருகிறது.

கண்கள்

சிவாஜி கணேசன், சஹஸ்ரநாமம், பண்டரிபாய், மைனாவதி ஆகியோரைப் பிரதம நடிகர்களாகக் கொண்ட 'கண்கள்' படம் ரேவதி ஸ்டூடியோவில் முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. நாடக மேடையில் நடிக்கப்பட்டு பிரபலமான இதை 'மோஷன் பிக்சர்ஸ் டீம்' என்ற படக்கம்பெனி, கிருஷ்ணன், பஞ்சு டைரக்ஷனில் துரிதமாகத் தயாரித்து வருகிறது. 'படம் தீபாவளி தினம் அநேகமாகத் திரையிடப்படலாம்' என்று பட டைரக்டர்களில் ஒருவரான பஞ்சு தெரிவித்தார்.

ராஜ ராஜேஸ்வரியின் படம்

ஜெமினியில் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிலிம் கம்பெனியார் தயாரிக்கும் தமிழ், தெலுங்கு இருபாஷைப் படம் முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. இந்தப் படத்திற்கான நாமகரணம் இன்னமும் சூட்டப்படவில்லை. கண்ணம்பா, வனஜா, மனோஹர், முதலியோர் இப்படத்தின் நடிகர் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள். கே. பி. நாகபூஷணம் டைரக்ட் செய்யும் இப்படம் ஒரு தீபாவளி வெளியீடாக இருக்குமாம்.

கொட்டகைகள் மூடப்பட்டன

இந்தியப் படங்களை பாகிஸ்தானில் திரையிட பாக் சர்க்கார் தடை செய்து விட்டனர். இதனால் பாகிஸ்தான் தியேட்டர்களில் திரையிடப் போதுமான படங்கள் இல்லாமற் போய் விட்டன. 'பாக் சர்க்காரின் இந்த கொள்கையை' பாக பட விநியோகஸ்தர்கள் கண்டித்திருப்பதுடன், தியேட்டர்களில் காட்ட பாக் சர்க்கார் தயாரித்திருக்கும் டாக்குமெண்டரிகளையும் வாங்கவும் மறுத்திருக்கிறார்கள். இதனால் சென்ற மாதம் 21-ம் தேதி முதல் பாகிஸ்தான் சினிமாக் கொட்டகைகள் மூடப்பட்டு விட்டன. நூறுக்கு மேற்பட்ட இந்தியப் படங்கள் பாகிஸ்தான் சுங்க இலாக்காவில் முடங்கிக் கிடக்கின்றன. இந்தியப் படங்களிலிருந்து தமாஷா வரியாக மட்டும் பாக் சர்க்காருக்கு மூன்று கோடி ரூபாய்களுக்கு மேல் பிரதி வருஷமும் கிடைக்கிறது.

ரத்ன தீபம்

சென்ற மாதம் 10-ம் தேதியன்று 'ரத்ன தீபம்' தமிழ்ப் படத்தின் பிரத்தியேகக் காட்சி ஒன்று பரணி ஸ்டூடியோவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பத்திரிகாசிரியர்களும், படத்துறை பிரமுகர்களும் இந்தக் காட்சிக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். சென்னை மேயர் டி. செங்கல்வராயன் தலைமையில் இந்தக் காட்சி நடைபெற்றது. மேயர் படத்தின் தரத்தைப் பாராட்டிப் பேசினார்.

பிமல்ராய்க்கு வரவேற்பு

தோ பிகா ஜமீன் (இருஏகரா நிலம்) என்ற ஹிந்திப் படத்தை தயாரித்து டைரக்ட் செய்த பிமல்ராய் தென்னிந்திய சினிமா டெக்னீஷியன்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த ஒரு விசேஷக் கூட்டத்தில் கலந்து கொண்டார். தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் சென்ற மாதம் 7-ம் தேதி

யன்று நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு 'மேக்-அப்' நிபுணர் ஹரிபாபு தலைமை வகித்தார். தனது படத்தை தயாரித்த விதம், முதலியன பற்றி பிமல்ராய் விரிவாகக் கூறினார்.

பாகிஸ்தானில் பிலிம் விழா

பாகிஸ்தான் தலைநகரான கராச்சியில் வரப்போகும் டிஸம்பர் மாதம் இந்திய-பாகிஸ்தான் பிலிம் விழா ஒன்று நடைபெறவிருக்கிறது. இதையொட்டி டிஸம்பர் முதல வாரத்தில் அங்கு ஒரு நக்ஷத்திர கிரிக்கெட் ஆட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்திய பாகிஸ்தான் நடிகர்கள் இந்தப் பந்தயத்தில் கலந்து கொள்வார்கள்.

மற்றுமொரு தடை

பாகிஸ்தானிலே இந்தியப்படங்களுக்கு மட்டுமில்லை, இந்திய சினிமா சங்கீதத்திற்கும் ஆபத்து வந்திருக்கிறது. "பாகிஸ்தான் ரேடியோவில இந்திய சினிமா இசைத்தட்டுகள் ஒலி பரப்பப்படுவது அடியோடு தடை செய்யபபடவேண்டும்" என்று ராவல்பிண்டியிலுள்ள பாகிஸ்தான் ரேடியோ ஆலோசனைக் குழு அபிப்பிராயம் வெளியிட்டுள்ளது.

படத்தயாரிப்பாளர்கள் சங்கம்

'தென்னிந்திய படத்தயாரிப்பாளர்கள் சங்கம்' என்பதாக ஒரு புதிய சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. படத்துறையிலுள்ள குறைகளை கவனித்து, பொருளாதார நிலையை உயர்த்துவது இந்தச் சங்கத்தின் முக்கிய கோட்பாடாக இருக்கும். குறிப்பாக வரப்போகும் சினிமாத் துறை சட்டத்தைப்பற்றி இச்சங்கம் கவனித்து பொதுமக்களுக்கும் தொழிலுக்கும் நன்மை விளைவிக்கும் வகையில் அச்சட்டம் உதவும்படிச் செய்ய முயற்சிக்கும்.

இந்தச் சங்கத்தின் தலைவராக 'ஜெமினி' அதிபர் எஸ். எஸ். வாஸன் அமர்ந்திருக்கிறார், காரியதரிசியாக ஆர். எம். சேஷாத்திரி ஐ. ஸி. எஸ். (ரிடையர்டு) பணியாற்றுகிறார்.

ஏ. வி. மெய்யப்பன், பி. நாகி ரெட்டி, கே. எஸ். நாராயண ஐயங்கார், வீ. எல். நரசு, எச். எம். ரெட்டி முதலியோர் கமிட்டி அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கபபட்டிருக்கிறார்கள்.

கிரஹப்ரவேசம்

ஹாஸ்ய நடிகரான டி. எஸ். துரைராஜ் சென்னை ராயப்பேட்டையில் புது மனை ஒன்று கட்டிக்கொண்டு, சென்ற மாதம் 10-ம் தேதியன்று அதில் கிரஹப்ரவேசமும் செய்தார். அப்பப்பா! வந்த விருந்தினர்களை வயிறு புடைக்க விருந்தளித்து அவர் வீட்டுக்கு அனுப்பிய விதமே, மூன்று அடுக்கு மாளிகையான அவரது புது மனை எவ்வளவு உயரம் நின்று காட்சியளித்ததோ, அதே போல் அவரது பரந்த மனத்தையும் எடுத்துக் காட்டியது. படவுலகின் பிரபலஸ்தர்களும், பத்திரிகாசிரியர்களும் இந்தக் கிரஹ பிரவேச விழாவில பங்கெடுத்துக் கொண்டனர். புதுமனை புகுந்த துரைராஜுக்கு நமது கலைரசிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வந்தனோபசாரம்

சென்னை பிராந்திய தணிக்கை அதிகாரியாகப் பணியாற்றி வந்த எஸ். ஏ. ஐயர் கிட்டக் கமிஷனில் ஒரு புதுப்பதவியில் அமர்த்தப்பட்டிருக்கிறார் புதுப் பதவிக்கு செல்லும் எஸ். ஏ. ஐயருக்கு வாஹினியில் ஒரு வழியனுப்பு உபசாரம் நடத்தப்பட்டது. எஸ். ஏ. ஐயரின் தாக்ஷிண்யமற்ற, கண்டிப்பான தணிக்கை முறையினால் பட முதலாளிகள் பலருடைய உள்ளத்தில் அதிருப்தியே நிலவி வந்தது. 'ஒளவையார்', 'பொன்னி', 'சண்டிராணி' முதலிய படங்களுக்கு யாதொரு தடங்கலுமின்றி அவர் தணிக்கைப் பத்திரம் வழங்கியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எடின்பரோ பிலிம் விழா

இவ்வருஷத்திய எடின்பரோ பிலிம் விழாவுக்கு வந்த முன்னூறு படங்களில் பதினொன்கு படங்கள் இந்தியாவினின்றும் அனுப்பப்பட்டவை. இவைகளில மூன்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. 'புராதன இந்திய குடிமக்கள்' 'புண்ணிய இமயமலை', 'மகாபலிபுரம்' ஆக மூன்று டாக்குமெண்டரிகளுமே இவை.

ஆசை மகன்.........

(தொடர்ச்சி)

காட்சி 8

ரூபாய் நோட்டுகளுடன் முதலியார் அறையினுள் வந்தார். பீரோவை நோக்கி நடந்தார். சாவிக் கொத்தினுல் பீரோவைத் திறந்து நோட்டுக்களை உள்ளே வைத்துப் பூட்டினர்.

திரும்பியதும் அவர் பார்வையில் உடைந்து கிடந்த கண்ணுடித் துண்டுகள் தென்பட்டன. பரபரப்புடன் அருகில் வந்து பார்த்தார். கோபம் பொங்கியது...

முத: (கோபத்துடன்) கணக்கு! ஓய் கணக்கு!!

கணக்கன் உள்ளே ஓடி வந்தார்.

முத: இந்தக் கண்ணுடியை யாரய்யா உடைச்சது?

கண: கண்ணுடியா? உடைச்சிட்டாங்களா? யாருங்க?

முத: மண்ணுங்கட்டி!

கண: நான் இங்கே வரவே இல்லீங்களே!

முத: (எரிச்சலோடு) தலையிலே இடி விழுந்தாக்கூட உமக்குத் தெரியாதே! மங்களம்...ஏ, மங்களம்..!

வெளியே சென்ருர். கணக்கனும் அவரைப் பின்தொடர்ந்தார்.

காட்சி 9

உணவு மேஜையின் ஒரு மூலையிலே புத்தகத்துடன் அமர்ந்து சேகர், படிப்பதுபோல் பாசாங்கு செய்து கொண்டிருந்தான்.

பலகையின் உயரே பாத்திரங்களை மங்களம் அடுக்கிக்கொண்டிருந்தாள்; 'கை தவறி ஒரு பாத்திரம் கீழே விழுந்தது. கால்விரலில் பட்டு, நன்ருக நசுக்கியது. அதே வேளையில் முதலியார் அழைத்தார்.

முத: மங்களம்..!

விரலினுல் ஏற்பட்ட வேதனை, எரிச்சல் எல்லாம் மங்களத்துக்குக் கோப ருபத்தில் வந்தது.

மங்: (எரிச்சலோடு) ஆமா, மங்களம்!!

கணக்கனும் முதலியாரும் உள்ளே வந்தனர். சேகர் இருப்பதை முதலியார் கண்டார்...

முத: (கோபத்துடன்) டேய்! நீதானே அந்தக் கண்ணுடியை உடைச்சது?

மங்: எந்தக் கண்ணுடி?

கண: ஐயா போடற அமெரிக்கன் மாடல் வெள்ளெழுத்துக் கண்ணுடி!

முத: என்னடா முளிக்கிறே? அந்தக் கண்ணுடியை உடைச்சியா?

மங்: கண்ணுடியையும் உடைக்கல்லே; காத்தாடியையும் உடைக்கல்லே. ஏன் அதட்டிறீங்க?

முத: நீ சும்மா இரு! இவனைத் தவிர யாருமே அதை உடைச்சிருக்க மாட்டாங்க!

மங்: யாரு உடைச்சாங்களோ அவுங்க கிட்டே போய்க்கேளுங்க... கண்ணுடியை உடைச்சானும்! இருந்த இடத்தை விட்டு நகராமே குழந்தை படிச்சுக்கிட்டிருக்கான்..!

காட்சி 10

மெஷின் முன்பமர்ந்து ஒரு துணியை லக்ஷ்மி வெட்டிக் கொண்டிருந்தாள். கல்யாணியும் மாதவியும் அருகிலிருந்தனர்.

கல்யாணி: லெச்சிமி! ரவிக்கைக்கு ரொம்பக் குறைவா கையை வச்சுப்பிடாதே! தோளு மறைக்காத சம்பரும், லேசுப் புடவையும் கட்டிக்கிட்டுவார கலிகாலப் பொண்ணுங்களைப் பார்த்தா எனக்கு வயத் தெரிச்சலா இருக்கு!

லக்ஷ்: நீங்க ஏம்மா வயத் தெரிச்சப்படறீங்க? காலத்துக் கேத்த நாகரீகம்!

கல்: ஆமா! மூடி வைக்க வேண்டியதையெல்லாம் முக்கால் பாகம் வெளியே காட்றதுதான் நாகரீகமோ?

லக்ஷ்: பெண்கள் ரொம்பக் கெட்டுப் போயிட்டாங்க. இல்லியா கல்யாணி அம்மா!

லக்ஷ்மியும் மாதவியும் சிரித்தனர். வீட்டினுள்ளிருந்து கையில் புஸ்தகங்களுடன் சாந்தாவும் சந்திரனும் லக்ஷ்மி அருகில் வந்தனர்.

லக்ஷ்: பாத்திரங்களை யெல்லாம் மூடி வச்சியா?

சாந்தா தலையை ஆட்டினுள்.

லக்ஷ்: அடுப்பங்கரைக் கதவை சரியா அடச்சியா?

சாந்: ம். அம்மா! சம்பளம்...?

சந்: இன்னிக்குப் பீஸ் கொடுக்கலேன்னு......?

லக்ஷ்: நாளைக்குக் கொடுக்கலாம்பா!

சாந்: ஆமா! அம்மாவுக்கு எப்பவும் நாளைக்கு நாளைக்கு! நேத்தும் இப்படித்தான் சொன்னே!

கல்: கெடு வச்சு தள்ளிக்கிட்டே போரு! இல்லியா, கண்ணு?

சந்: இன்னிக்கும் கொடுக்கலேன்ளு கிளாசுக்கு வெளியே நிறுத்தி வச்சிடுவாங்கம்மா!

லக்ஷ்: சந்திரா! மத்தியானம் கண்டிப்பாத் தரேன்... போங்க... ராஜா!

காட்சி 11

கிளாஸ் ரூம். பல மாணவர்கள் இருந்தனர். சற்று ஒதுங்கினுற் போலிருந்த ஓரிடத்தில் சேகரும் அவனது சகாவும் நின்றனர்.

சகா: (மெல்லிய குரலில்) போடா சீக்கிரம்... பெல் அடிக்கப் போகுது...ம்..போ!

ஒரு மாணவன் டெஸ்க் மீது கையினுல் தட்டித்தாளம் போட்டுக் கொண்டு பாடினுன்.

காலையிலே எந்திரிச்சுக் கணக்கு கோட்டை எடுத்துவச்சா கண்ணை மயக்குதடா கடவுளே! பாழும் கணக்குப் பாடம் தொலையவேணும் கடவுளே! பாழும் கணக்குப் பாடம் தொலையவேணும் கடவுளே!

சிலர் 'ஓ' என்று ஆரவாரித்தனர். சிலர் விஸிலடித்தனர்; சிலர் கை தட்டினர். பலத்த இரைச்சல் எழுந்தது. வேருெரு மாணவன் ஆசிரியரின் ஸ்தானத்தில் வந்து நின்றுன். மேஜை மீது கையால் தட்டிக் கொண்டே பேசினுன்.

மாண: ஸைலன்ஸ்! இதென்ன கிளாஸ் ரூமா, சந்தைக்கடையா?.. ஆ...?

மற்ருெரு மாணவன் எழுந்து நின்று பயபக்தியோடு.

ஆங்கிலமோ பாவக்காய்! அரித்மிடிக்கோ எட்டிக்காய்! வீங்கு புகழ் விஞ்ஞானமோ வேப்பங்காய். ஈங்கிவற்றை எப்படி நான் படிப்பேன்? நீ. செப்பு ஸ்ரீரங்கநாதா!

எல்லோரும் "ஓம்"

மாண: ஸைலன்ஸ்: இதென்ன கிளாஸ் ரூமா சந்தைக் கடையா? ஆ! ஏண்டா ஒன்னு கத்தறீங்க? ஆ...

மணி அடிக்கிறது. யாவரும் உட்காருகின்றனர்.

போர்டில் ஏதோ எழுதி முடித்துவிட்டு ஆசிரியர் திரும்பினர். ஒரு மாணவனை, கை சுட்டிக் காட்டி ....

ஆசி: பிரகாசம் இதைப் படி!

ராஜு: (எழுந்து நின்று போர்டைப் பார்த்து படிக்கிருன்) கல்லாத பேர்களே கல்லவர்கள்.. நல்லவர்கள்; கற்றுமறி வில்லாத என் கன்மத்தை என் சொல்வேன்...

ஆசி: சரி. போதும்!...இந்தப் பாடல் யார் எழுதினது?

ராஜு மௌனமாக நின்றான்.

ஆசி: உங்கிட்டே தான் கேட்கிறேன். இந்தப் பாடல் யார் எழுதினது?

மேஜை மீது தட்டினார்!

ராஜு: (தயங்கிக் கொண்டே) ஔவையார் ஸார்!

ஆசி: ஔவையார் ஸாரா? எப்போடா ஸார் ஔவையாரானாரு? எருமை மாடு...நில்லு...ம்...வாஞ்சு!

(வாஞ்சு மௌனம்)

வாத்: ஏண்டாப்பா உனக்கும் ஏதாவது தனி மாகாணம் வேணுமோ? மௌன விரதத்தை கையாளறியே... சொல்லுடா?

வாஞ்சு: சித்தலைச் சாத்தனார் ஸார்!

ஆசி: எங்கண்ணு! ஷேக்ஸ்பியர் எழுதினான்னு சொல்லலியே...ம் அடுத்தவன்?

மாணவன்: கம்பர் மகன் அம்பிகாபதி ஸார்!

ஆசி: ஆமா! எழுதறபோது இவரு கூட இருந்தாரு! பட்டுன்னு சொல்லிட்டாரு, கம்பர் மகன் அம்பிகாபதியாம்!

மூன்றாவது நபர் எழுந்து மௌனமாக நின்றான்.

மாணவிகள் பக்கம் திரும்பி.

ஆசி: சரோஜா! நீ சொல்லு. இந்தப் பாடல் யார் எழுதினது?

சரோ: (நாணிக் கோணிக் கொண்டு) நீங்கதான் ஸார் போர்டிலே எழுதினீங்க!

பலத்த சிரிப்பு எழுந்தது. ஆசிரியர் மேஜை மீது பலமாகத் தட்டிக் கொண்டே.....

ஆசி: ஸைலன்ஸ்! இதென்ன. க்ளாஸ் ரூமா? சந்தைக் கடையா? சரோஜா! க்ளாஸ் முடியற வரை நீ உட்காரக்கூடாது.... ம் எல்லாரும் ஒன்னு கத்தறீங்களே? ம்...கமலா!

Smashing Reduction in Prices! **Marvellous increase in Light!**

in Newly Developed

RINGSDORFF

CINEMA CARBONS (German Make)

Type & Size	Our Old Price per 100 Pairs	Our New Price per 100 Pairs
6×7 mm. 14" H. I.	Rs. 105 0 0	Rs. 87 14 0
7×8 mm. 14" ,,	,, 111 12 0	,, 94 14 0
7×10 mm. 8" L. I.	,, 41 8 0	,, 34 14 0
8×12 mm. 8" ,,	,, 53 8 0	,, 41 8 0

Agents :

Havell's Electrical (Sales) Corpn.

59, Forbes Street, Bombay-1. P. O. B. 1843, Madras. M. J. Bldg., Chandni Chowk, Delhi

Wanted Agents in unrepresented areas.

ஆசி : ஏ கமலா!

சரோஜா அருகிலிருந்த மற்றொரு பெண் எழுந்து மௌனமாக நின்ருள். அவளுக் கடுத்தாற்போலிருந்த பெண் டெஸ்க் மீது தலையைக் கவிழ்த்தவாறு படுத்திருந்தாள். இதைக் கண்ட...ஆசிரியர் ஏ கமலா என்று அதட்டினர்

பெண் : ஸார்! கமலா அழுது ஸார்!

ஆசி : ஏன்? நல்லதங்கா நாடகம் பார்த்தாளோ? (அருகில் வந்து) கமலா ஏய்...ஏ கமலா...

கமலா எழுந்து நின்ருள். அவள் கண்களில் நீர் வடிந்தது. மௌனமாக தன் கையிலிருந்த கடிதத்தை ஆசிரியரிடம் நீட்டினுள். அதை வாங்கிக் கொண்டார்.

கம : இந்த லெட்டர் என் கணக்கு நோட்டிலே இருந்தது, ஸார்!

ஆசி : லெட்டரா? கணக்கு நோட்டும் தபாலாபிசாயிட்டுதா?

விலாசம்:

சிதம்பரம்

ஜெயராமன்

நெ. 1. கலையூர்

சைதாப்பேட்டை ரோடு,

கோடம்பாக்கம்,

சென்னை - 26

கடிதத்தைப் பிரித்துப் படித்தார்.

ஆசி : என் மனதைக் கவர்ந்த மாமயிலே! உன்னைக் கட்டித் தழுவ ...ஆ ..ஐயோ...!...சரி...உட்காருங்க!

பிரமிப்புடன் நிமிர்ந்து பார்த்தார்

காட்சி 12

முதலியார் கோபத்துடன் நின்ருர். அருகில் சேகர், மங்களம், கணக்கன்-ஆசிரியர் ஒரு சோபாவிருந்தார்.

முத : உன்னைத்தாண்டா கேக்கறேன். உன்னை ஸ்கூல்லேருந்து சஸ்பெண்ட் செய்தாங்களா?

கண : தம்பி. உள்ளதை சொல விடப்பா! ஐயா கோவத்தைத் தூண்டாதே!

சேகர் : ஆமாம்!

முத : எதுக்கு?

மங் : அதை அவன் கிட்டே கேட்டா? சஸ்பெண்ட் செய்தவரைக் கேளுங்க.

முத : அவரைக் கேக்கணுமா? இரு வரேன்!

உள்ளே போகிருர்.

கண : வாத்தியார் ஸார்! தம்பி தான் லெட்டர் எழுதிச்சின்னு என்ன நிச்சயம்?

ஆசி : கையெழுத்தைப் பார்த்தா தெரியுது...

கண : தெரியுதா? இப்போ உங்க மாதிரி கையெழுத்துப் போடட்டுமா? ஐயா மாதிரி போடட்டுமா? அந்தப் பேனவை எடுங்க.

ஆசி : நல்லவங்க அப்படிச் செய்ய மாட்டாங்க...

மங் : எதுக்கய்யா கை எழுத்தும் தலை எழுத்தும்? உம்ம வேலையை மட்டும் கவனிச்சா போராது?

கையில் பிரம்புடன் வருகிருர் முதலியார்.

முத : கொஞ்சங் கூட ஒழுங்கோ மரியாதையோ இலலாமே...திருட்டுப் பயலே...

அடி அடி என்று பிரம்பால் அடிக்கிறார். மங்களம் பிரம்பைப் பிடுங்குகிறாள்.

சேக: அம்மா, அம்மா!

மங்: கையை ரொம்ப நீட்டா தீங்க...நானும் கொஞ்ச நேரமாப் பாக்கிறேன. கோவம் வந்தா சுவ ரிலே நாலு மொத்து மொத்தறது தானே...

முத: மூடு வாயை! நீதான் அவனைக் குட்டிச்சுவரா ஆக்கிட்டே... இதோ பாரு, இனிமே என்னைக் கேக் காமே ஒரு சொட்டுத் தண்ணிகூட இவனுக்குக் கொடுக்கக் கூடாது; உன் செல்லம் இல்லமெல்லாம் மூட்டை கட்டி வை...

ஆசி: அப்பொ...நான் வரட்டுங் களா?

மங்: இல்லே, இருந்து பாயசத் தோடு சாப்பிட்டுட்டுப் போங்க... வந்துட்டாரு ஒரு சஸபெண்டுகாரன்; சேகர் லெடடர் கொடுத்தா என் னய்யா? அதை வாங்கி வச்சுக்கிட்ட பொண்ணைப் போய் கேக்கிறது தானே?

காட்சி 13

சேகர் உணவருந்திக் கொண் டிருக்கிறான். அவனருகே ஒரு பாத் திரத்துடன் மங்களம் இருக்கிறாள்.

மங்களம்: உன்னாலே எனக்கு நிம்மதியே இல்லேடா! இதுவரை எங்கே போயிருந்தே?

சேகர்: (அக்கறையின்றி) இங்கே தான் இருந்தேன்...

இதே சமயத்தில் முதலியார்,

"மங்களம்"

என்றழைக்கும் சப்தம் கேட்டது.

மங்களம்: (உரதத குரலில்) இதோ வந்துட்டேன்!

மெல்லிய குரலில் சேகரை நோக்கி,

மங்க: சீக்கிரம் சாப்பிட்டுட்டு எங்கேயாவது தலைமறைவா இருடா!

எழுந்து போனாள்.

காட்சி 14

முதலியார் நாற்காலியிலிருந்தார். அருகில் கணக்கன் நின்றார். முதலி யாரின் முகத்தில் வியப்பும் கவலை யும் தென்பட்டன.

முத: சேகரைப் பார்த்தீரா?

கண: ஆமாங்க! செல்வம் நாயர் டீ ஓட்டல்லே...

அடுக்களையிலிருந்து அங்கு வந்து கொண்டிருந்த மங்களம், கணக்கனைக் கேட்டாள்.

மங்: இந்தாய்யா! உன் கண் ணாலே பார்த்தியா?

கணக்கன் திணறிப்போனார். ஆயி னும் சமாளித்துக் கொண்டே அசட் டுச் சிரிப்புடன் பேசினார்.

கண: பார்த்தேன்...இல்லேல்லே அது தம்பிதானே...இல்லே தம்பி மாதிரி...

மங்: ஆமா, மாதிரி கீதிரி! ஏனய்யா இங்கே வந்து கதை அளக்கிறே?

முத: அவர் கதை அளக்கிறது அப்படி இருக்கட்டும். நீ சோறு கிறு போட்டியா?

மங்: நான் ஏன் போடறேன்? நீங்க சொன்னப்புறம் ஒரு பருக்கை கூடக் கொடுக்கல்லே!

முத: அப்படி விட்டுடக் கூடாதே?.. ம். ?திருந்துவான், திருந் துவான்னு நினைச்சு...

மங்: நீங்க நினைக்கிறீப்லே அவன் ஒண்ணும் கெட்டவனில்லே. கோவம் வந்தா மட்டும் ஒரு மாதிரி... நீங்க என்ன, கோவத்திலே, குறைஞ் சவங்களா? உங்க பிள்ளை தானே?

கண: அவரை போட்டா துவ ரையா முளைக்கும்?

முத: கணக்குப்பிள்ளே! நான் சொன்னேன்னு சொல்லி அவனை அழைச்சுக்கிட்டு வாரும்!...

டீக் கடையின் உட்புறம் சிறிய அறை—இதையும் கடையையும் நடுவிலே தொங்கிய ஒரு சாக்குத் திரை பிரித்திருந்தது.

கையில் சீட்டுடன் சேகரும் அவனது சகாக்களும் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

ஹோட்டல் பக்கமாக முகம் திருப்பிய சேகர், சாக்குத் திரையிலிருந்த ஒரு கிழிசல் துவாரம் வழியாகத் தங்களை ஒருவன் பார்ப்பதைக் கண்டான். கோபத்துடன் கையை ஒங்கவே, அந்த ஆசாமி தலையை உள்ளே இழுத்துக் கொண்டான்.

"உனைக் கண்டு" என்ற கிராமபோன் சப்தம் ஒலித்துக் கொண்டிருந்தது.

கணக்கன் உள்ளே வந்தார். வியப்புடன் கேட்டார்.

கண : தம்பி .. என்னப்பா இது? உன்னை ஐயா கையோடெ கூட்டிட்டு வரச் சொன்னரப்பா!

சேகர் : சரி, சரி நீ போ! நான் அப்புறமா வரேன்.

காட்சி 15

சேகர் பெரியவனுகிருன். எப்பொழுதும் விக்ரம் முதலிய துஷ்டர்களோடு சீட்டாடுவதுதான் அவன் வேலை. ஒரு நாள்....

விக் : மாதரசே மயிலே! மௌனமாகுமோ குயிலே! ஆஹா அய்யய்யோ என்னாலே தாங்க முடியலியே தாங்க முடியலியே...

சேக : சரிதான்! இந்த வியாதிக்கு டாக்டர் போராது! ஒரு ஆசாரி தான் வரணும். ஏம்பா...ஸ்பானர் இருக்கா?

பிர : ஆமாமா! ஸ்குரு லூஸாத் தான் போச்சு.

சேக : களண்டே போச்சு!

பிர : பாய்! ஆறு டஜன் எலுமிச்சம் பழம் கொண்டா!

விக் : ஏண்டா, கேலியாடா பண்றீங்க! ஆ, கேலியா பண்றீங்க? அவளைப்பத்தி உங்களுக்கென்னடா தெரியும்? இல்லே. தெரியாமே கேக்கிறேன். அவபாட்டும், முகவெட்டும் "வருவார் அழைத்துவாடி வடலூர் தென்திசைக்கே" அப்படின்னு கையை இப்படித்தூக்கி யாடினு .. துடிக்குமப்பா.. துடிதுடிக்கும் நெஞ்சு. ஏ...ஏ...என்னடா இது? சொக்கிட்டே! சொக்கிட்டே.. அன்னக் கொத்தி பிலிம்காரங்க அவளை ஹீரோயீனு புக்பண்ண அவவீட்டு வாசல்லே தவங்கிடக்கிருங்க. எது. தவம் தவம் தவம்!

ராஜு : ஏன் ஸார்! இது நம்ம மாணிக்க வாத்தியார் பேத்திதானே?

விக் : அவபாட்டி! யார்ரா இவன்! நான் யாரைப் பத்திச் சொல்றேன்.. நான்சென்ஸ்.

பிர : கோபப்படாதிங்க ஸார்! பொறுமை வேணும்.

விக் : ஆ...இதுவரை எனக்குத் தெரியாதேப்பா.. டேய்...நீங்க நினைக்கருப்லே அவ அப்படி ஒண்ணும் சாதாரணமில்லேடா! அந்த அல்வா முகத்திலேதான் என்ன குளுமை; என்ன இனிமை! அவ பேரை நோட்டீஸிலே போட்டா போதும்...உடையும், உடையும்... நாற்காலியெல்லாம்...எது.. ஜன நெருக்கடி...அவ டான்ஸைப்பார்க்கணும்னு இருந்தா உடனே டிக்கட் ரிஸர்வ் செய்!

ஜெயந்தியின் நடனம் கண்டு மயங்கிய சேகரை அவளிடம் அழைத்துச் செல்கிருன் விக்ரம்.

விக் : நமஸ்தே ஜெயந்தி!

ஜெய : நமஸ்தே!

மானே : இவர்தான் மிஸ்டர் சேகர், தென்வேலி மிராசுதார் சதாசிவத்தின் ஒன்லி சன். ஏக புத்திரன்.

ஜெய : நமஸ்தே.

சேக : நமஸ்தே.

மானே : இவரைத்தான்...

விக் : இதென்னங்க இது? ரொம்ப காலமாத் தெரியும்.. ரொம்ப காலமாத் தெரியும். இந்த ஊரிலுள்ள அறிஞர்களெல்லாம் இவனுக்காக உயிரை விடத் தயார், தயார், தயார்!

சேக : விக்ரம் வார்த்தையை அப்படியே நம்பிடாதிங்க! 90% ப்ராட்!

விக்: நீ என்னப்பா செய்வே? உண்மைக்கு இடம் ஏது? உம்...

சேக: உங்க டான்ஸ் ரொம்பப் பிரமாதம்; இந்த மாதிரி டான்ஸ் இது வரை நான் பார்த்ததே இல்லை!

ஜெய: தாங்ஸ்.

மானே: டான்ஸ் நல்லாருந்து என்ன ஸார் பிரயோசனம்? தியேட்டர் புல்தான்; ஆனா...எல்லாம் ஓசி!

விக்: ஆ விஷயத்தைச் சொல்ல மறந்துட்டேனே! உங்க டான்ஸ் புரோகிராம்லே ஒரு பத்து ஏற்பாடு செய்யலாம்கிறது சேகர் அபிப்பிராயம். உங்க இஷ்டம்...

ஜெய: ரொம்ப சந்தோஷம்.

விக்: மானேஜர் ஸார்...

மானே: வெரி குட் ஐடியா!

விக்: மத்த விஷயங்களை யெல்லாம் நாளைக்குப் பேசிக்கலாம். ஆ நீங்க எங்கே தங்கியிருக்கீங்க?

மானே: முருகன் லாட்ஜ் பக்கத்திலே ..

காட்சி 16

கையில் பத்திரிகையுடன் முதலியார் உட்கார்ந்திருந்தார். அவர் அருகே சந்திரன் நின்றான். மங்களம், ஒரு கையில் மாம்பழம், மற்றொரு கையில் கத்தியுமாக நின்றாள். அவளது வலது புறத்திலே லக்ஷ்மியும் இடதுப் புறத்திலே கணக்கனும் நின்றனர்.

முத: (சந்திரனை நோக்கி) சந்திரா! இப்போ எதுக்கப்பா வக்கீல் படிப்பு? படிச்ச படிப்புக்கே வேலை கிடைக்காத காலம்...!

சந்: அதுசரி மாமா! இருந்தாலும் இது என்னுடைய நீண்டகால ஆசை.

மங்: எல்லாத்துக்கும் ஒரு அளவு வேணும்; ரெண்டு காலும் இல்லாதவன் மரத்திலே ஏறின...

கண: தலைகுப்புறதான் விழுவாங்க! இருந்தாலும் இது படிப்பு விசயம் பாருங்க...

மங்: என்னய்யா படிப்பு? பணத்தைக் கொட்டிப் படிச்சவங்களெல்லாம் இப்போ என்ன கிழிக்கிறாங்களாம்?

கண: கிழிக்கல்லே; ததிங்கிணதோம் போடறாங்க!

மங்: நம்ம மாணிக்கம் கையிலே மூணு லகாரம் இருக்குது; ஆனா மனைக்குக்கூடப் பள்ளிக்கூடத்திலே ஒதுங்கினதில்லே!

லக்ஷ்: அண்ணி! பணத்தில மிதக்கிறவங்களையும் பட்டினி கிடக்கிறவங்களையும் ஒண்ணா நினைக்க முடியுமா? பணம் உள்ளவங்க படிக்கலேன்னா ஒரு குறைவுமில்லே, ஆனா ஆசையும் உற்சாகமும் உள்ளவங்க படிக்கக் கூடாதா? (முதலியாரை நோக்கி) அண்ணா! சந்திரன் ஆசையை நீங்கதான் பூர்த்தி செய்யணும். அவன் அப்பா மட்டும் உயிரோடிருந்தா......

மங்: அண்ணா அண்ணான்னு சொல்றியே அண்ணன் என்ன, குபேரனா? எங்க கஷ்டம் யாருக்குத் தெரியும்? பணம் இருந்தா எங்க சேகரைப் படிக்க வச்சிருக்க மாட்டோமா?

கண: அதை ஏன் சொல்றீங்க? பட்டினி கிடக்கிறவன் திண்டாட்டம்..

மங்: புளிச்சேப்பக்காரனுக்குத் தெரியுமா?

லக்ஷ்: இதென்ன பேச்சு. அண்ணி, நான் தரித்திரம்தான்; ஆனா பிறத்தியார் கஷ்டம் தெரியாதவளல்ல.

மங்: இந்தாடி! இப்படியெல்லாம் எனக்கும் தெரியும் இப்படி சாஸ்தி அளக்காதே.

லக்ஷ்: மனசு புண்படும்படியா என்ன சொல்லிட்டேன்? என் கஷ்டத்தைத் தான் சொன்னேன்.

சந்திரன்: மாமா! பி. எல். படிப்பில் ஆசை மட்டுமல்ல; அதை என் ஜீவலட்சியமாகவே நினைக்கிறேன்...

லக்ஷ்: (முதலியாரை நோக்கி) அண்ணா! ஏன் பேசாமே இருக்கீங்க? சந்திரன் கேட்கிறது உங்க காதிலே விழலியா? அவன் குழந்தை! ஆயிரங்காலத்துப் பயிர்...

திடுக்கிட்டு விழித்தவர்போல்...

முத : ஆ...ம்... சந்திரா! இந்த வருஷம் கொஞ்சம் பணத்துக்கு ரொம்ப முடை; அறுவடைகூட சரியாயில்லே... அடுத்த வருஷம்...

மங்க : எதுக்கு அடுத்த வருஷம்? ஒரேயடியா இல்லேன்னு சொல்லாமே..

முதலி : (சந்திரனை நோக்கி) அடுத்த வருஷம் ஆகட்டும்ப்பா!...

சந்தி : ஆட்சேபமில்லே. ஆனா லா காலேஜிலே சுலபமா அனுமதி கிடைக்காது; எவ்வளவோ முயற்சி செய்து வாங்கினேன். இந்த சந்தர்ப்பத்தை இழக்கலாமா?

மங் : (கோபத்துடன்) ஆமா அவசியம் போகத்தான் வேணும்!

மங்களம் கையில் மாம்பழமும் கத்தியும் இருந்தது. அதை வெட்டிக்கொண்டிருந்தவள் சந்திரனுக்கு வெடுக்கென பதில் கூறும்போது தவறுதலாகக் கத்தி அவளது விரலில் பட்டு சிறிது வெட்டி விட்டது. ரத்தமும் கசிந்தது. ஆயினும் மங்களம் கவனிக்கவில்லை; ஆனால் லக்ஷ்மி கவனித்து விட்டாள். திகிலுடன்,

லக்ஷ் : அண்ணி! ரத்தம்..

என்று கூவிக்கொண்டே ஓடி வந்து ரத்தம் ஒழுகும் விரலைத் தன் புடவை முந்தானையில் ஒத்தினள், மங்களம் எரிச்சலுடன் தன் கையைப் பறித்துக்கொண்டாள்.

மங் : (கோபம் ஜொலிக்க) அட, சீ! ஏண்டி என்னைத் தொட்டே? உன் கிழிசல் துணி பட்டுடுச்சில்லே! இனிமே இந்த விரலே அழுகிப் போயிடும்...

இந்த வார்த்தைகள் சந்திரனின் நெஞ்சிலே ஈட்டிபோல் பாய்ந்தன. தன் தாயை விலக்கிக் கொண்டு மங்களம் முன்னல் வந்தான். வெறுப்பும் வேதனை உணர்ச்சியும் அவன் முகத்திலே அலை மோதின.

சந் : கிழிசல் துணியும் வறுமைத் தோற்றமும் கேவலமல்ல. அந்த வறுமையின் போர்வையிலே மறைந்து கிடக்கும் இதயத்தில் அன்பும், மனிதத்தன்மையும் இருக்கிறது.

சந்திரனின் ஆவேசத் தோற்றம் கண்டு லக்ஷ்மி திடுக்கிட்டாள். பதறிப்போய்...

லக்ஷ் : சந்திரா!

சந் : இரம்மா! (மீண்டும் மங்களத்தை நோக்கி) லக்ஷம் லக்ஷமாக இரும்புப் பெட்டியிலே பணத்தை ஒளித்து வைத்து இரும்பு நெஞ்சோடிருக்கும் பணமூட்டைகளை விட அந்த ஏழைகள் ஆயிரம் மடங்கு உயர்ந்தவர்கள்தான்! ஞாபகமிருக்கட்டும்!

சந் : (லக்ஷ்மி பக்கம் திரும்பி) வாம்மா! இனி இந்த இடத்தில் நமக்கு எந்த வேலையும் கிடையாது. வா, போகலாம்!

லக்ஷ்மி விம்மினள் முதலியாரை நோக்கி.

சந் : நாங்க வரோம் மாமா!

லக்ஷ் : இன்னிவரைக்கும் யாரிட்டேயும் கை நீட்டிக் காலணா கேட்டதில்லே; ரத்தபாசம் என்னை இங்கே இழுத்து வந்தது. அண்ணன்னு அழைக்க நீங்க ஒருத்தர் தானே இருக்கிங்கன்னு ஓடி வந்தேன்,

சந் : ஏன் அழறே? நான் உயிரோடிருக்கும் வரை நீ எதுக்கும் கண் கலங்க வேண்டியதில்லே! வாம்மா! வா!

மங் : இர்தாங்க...கொஞ்சம் பழம் சாப்பிடுங்க.

முத : எல்லாத்தையும் நீயே சாப்பிடு. நீயே அனுபவி!

கண்ணீரைத் துடைத்துக் கொண்டே இருவரும் புறப்பட்டனர்.

கண்களின் நீர் மல்க முதலியார், தொலைவில் செல்லும் லக்ஷ்மியையும் சந்திரனையும் இமைகொட்டாது பார்த்துக் கொண்டிருந்தார்.

காட்சி 17

சாந்தா முருகன் படத்தின் முன் பாடிக் கொண்டிருந்தாள்......

சந்திரனும் லக்ஷ்மியும் வாடிய முகத்துடன் ஹாலினுள் வந்தனர். அவர்களைக் கண்டதும், உற்சாகமும் மகிழ்ச்சியும் பொங்க சாந்தா அருகில் ஓடி வந்தாள்.

சாந் : (உற்சாகத்துடன்) *அம்மா! போன காரியம் என்ன ஆச்சு? பணம் கிடைச்சுதாண்ணு?...*

சந் : (விரக்தியுடன்) கிடைச்சிது.

சாந் : (ஆவல் மேலிட) *ஆ?... நிஜமாகவா?*

சந் : *ஆமாம்! எது கிடைக்கணுமோ அது நிறையக் கிடைச்சிது.*

தன் அறையை நோக்கி நடந்தான். சாந்தா லக்ஷ்மி பக்கம் திரும்பினுள்.

லக்ஷ்மி தன் முகத்தை வேறு பக்கம் திருப்பினுள். சாந்தாவின் கண்களில் நீர் துளிர்த்தது.

சாந் : *ரெண்டு பேரும் ஏன் ஒரு மாதிரி இருக்கிங்க? ...* (லக்ஷ்மியின் தோளைப் பிடித்து உலுப்பிக் கொண்டே) *தயவு செய்து சொல்லேன். என்ன நடந்தது? மாமா என்ன சொன்ஞர்?...*

லக்ஷ் : (துயரத்துடன்) *அடுத்த வருஷம் பார்த்துக்கலாம்னு சொல்லிட்டாரு!...*

இதைக் கேட்டதும் சாந்தா பிரமித்து நின்ருள்; அவள் கண்களிலிருந்து நீர் வடிந்தது; அன்புடன் அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டாள் லக்ஷ்மி.

லக்ஷ் : *வருத்தப்படாதே! படைச்சவன் படி அளக்காமலா போயிடுவான்?...*

காட்சி 18

மேஜை மீது சாய்ந்து தலையில் கை வைத்த வண்ணம் சந்திரன் உட்கார்ந்திருந்தான். விவரிக்க முடியாத வேதனைகளும் விரக்திகளும் ஆயிரமாயிரம் கவலைகளும் அவன் முகத்திலே அலைமோதின.

கைகளைப் பின்புறமாகச் சேர்த்துக் கொண்டு சாந்தா அவனருகில் வந்து நின்ருள் கனிவுடன்.

சாந் : *அண்ணு இந்தா! இதைக் கொண்டு போய் விற்று விடு.*

நிமிர்ந்து பார்த்த சந்திரன் திடுக்கிட்டான். சாந்தாவின் உடம்பிலே ஒரு நகையும் காணவில்லை. சாந்தா, தன் கைகளில் இருந்த சில நகைகளை மேஜை மீது வைத்தாள். சந்திரன் வியப்போடு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். .... அவளை நோக்கி .....

சாந் : *விற்று விடண்ணு! உன் படிப்பும் சந்தோஷமும்தான் எனக்கு நகைகள்; இந்தக் குடும்பத்துக்கே அதுதான் சொத்து.*

அவள் கண்களில் நீர் துளிர்த்தது. சந்திரன் எழுந்தான். அன்புடன் அவள் தோளில் லேசாகத் தட்டினுன்.

சந் : *அசடே! ஏன் கலங்கறே? மாமா பணம் தராவிட்டால் பரந்த உலகத்தில் படித்து முன்னேற......*

சந்திரனின் வார்த்தைகள் உள்ளே வந்து கொண்டிருந்த லக்ஷ்மியின் காதில் விழுந்தன; அவர்களருகே வந்தாள்.

லக்ஷ் : *சந்திரா! மனசைத் தளர விடாதேப்பா! உங்கள் கண் கலங்குவதற்கு நான் எந்தக் கெடுதியும் யாருக்கும் செய்தவளல்ல; உங்கள் மனசு புண்பட நான் ஒருநாளும் பொறுக்கமாட்டேன்... தைரியமாயிருங்க...மனித சக்திக்கெல்லாம் மேலான தெய்வ சக்தி நம்மைக் கைவிடாது!*

முதலியார் நாற்காலியில் இருந்தார். அவர் அருகே இருந்த மற்ருெரு நாற்காலியில் முத்தையா உட்கார்ந்திருந்தான். அவர்கள் முன்பிருந்த மேஜைமீது பாதி நறுக்கப்பட்ட மாம்பழமும், ஒரு தட்டில் நிறைய சுளைகளும் இருந்தன.

கையில் கத்தியுடன் மங்களம் நின்ருள். வாய்நிறைய சுளையுடன் கணக்கனும் நின்ருர்.

ஒரு கூஜாவைக் கையால் எடுத்துக்கொண்டே மங்களத்தை நோக்கி,

முத்தையா: நம்ப கீழத் தெரு.. நல்ல லெக்ஷணமா... மூக்கும் முழியுமா ஒரு மகள் இருக்குது... அப்படி அவருக்கு.

மங்களம்: வேண்டாம்! அது இங்கே வந்தா கச்சேரி செய்ய ஆரம்பிச்சிடும்!

முத்தையா: ஓஹோ கடையநல்லூர் சபாபதி முதலியார் பொண்ணு?

முதலி: ஆ. அது நல்ல இடம்! நல்ல இடம்.

மங்க: என்ன நல்ல இடம்? சபாபதி தம்பிக்கு எங்கே கலியாணம் ஆகியிருக்குது தெரியுமா?

கண: மாடத்தெரு நம்ப மாணிக்கம் மக.. சைக்கிள்லே ஜம்ஜம்னு!

மங்க: போய்யா! அது கரி அரைச்சுப் பூசின மாதிரி யில்லே இருக்கும்?

முத: சரிதான் உங்களுக்காக புதுசா சிருஷ்டிபண்ண வேண்டியதுதான். ஒலகத்திலே இருக்கிற எந்தப் பொண்ணும் பிடிக்கலேன்னு... அம்மா! நீங்களே சொல்லுங்க..

முதலி: முத்தையா! நானும் ஆயிரந்தடவை சொல்லி இருக்கேன். எதுக்காக நாம மத்தப் பொண்ணுகளைப் பாக்கணும்? நம்ம லக்ஷ்மி மக சாந்தா...

மங்க: ஆமா, லக்ஷ்மி மக! ரொம்ப ஓசத்தி. இங்கே வேண்டாம்!

காட்சி 19

கொளத்து மூக்கன் (ஜெயந்தியின் வேலைக்காரன் அவன்) நடனமாடிக் கொண்டிருக்கும்போது விக்ரமும் சேகரும் வருகின்றனர்.

சேக: என்னப்பா இது?

விக்: ஒவர் ஹீட்டிலைலே வர்ர முனைக்கொதிப்பு! ஏம்பா ஜுரத்தோடே ஆடறியே...ஆ. உன் பேரு என்னப்பா!

பாய்: கொளத்து மூக்கன்!

சேக: கொளத்து மூக்கன்...

விக்: ஆமா! சரித்திரத்திலே இடம் பெற்றவனாச்சே! அடேங்கப்பா! மைசூர் ரஸம், மஸாலா தோசை, மாயவரம் வெண்ணே, காஞ்சீவரம் இட்லி...

சேக: கொளத்து மூக்கன்!

விக்: ஆ. கொளத்து மூக்கன்! சாதாரணப்பட்டவங்களா? அடேங்கப்பா!

சேக: ஏம்பா!

விக்: ஆ?

சேக: அம்மா இருக்காங்களா?

விக்: ஓ, அவளையா கேட்டே?

பாய்: இருக்காங்க. உங்கபேரு?

விக்: பேரானந்தம்! இந்தக் கார்டை கொண்டுபோய்க் கொடு!

பாய்: என்ன ஸார்... சினிமாவிலே ரௌடி வேஷம் போடற பாலையா மாதிரி பேசறீங்களே!

விக்: ஏ அப்பா! என்னை ரௌடிகள் கூட்டத்திலேயா சேக்கிறே?

பாய்: உங்களை எங்கேயோ பாத்தமாதிரி இருக்கே.

விக்: ஆ, பாத்திருப்பே! நடு ரோட்டிலே! கொண்டுபோடா! ஜெயந்திக்கு இவன் ஒரு திருஷ்டிப் பரிகாரம்!

ஜெயந்தி வருகிருள்.

ஜெய: வணக்கம்!

சேக: வணக்கம்!

ஜெய: வந்து ரொம்ப நேரமாச்சோ!

சேக: இல்லேல்லே! இப்போதான் வந்தோம்..

விக்: ஆமாமா! இல்லே...இப்போதான் வந்தோம்...

ஜெய: மூக்கா...

M2 11,N42 P
N53.12

விக் : மானேஜர் எங்கே?

ஜெய : வேறெ வேலே வேணுமே! எங்காவது சுத்தப் போயிருப்பாரு.

விக் : இனிமே சுத்த வேண்டியது தானே? ஆளு பெரிய ஆளு: கொஞ்சம் தூக்கி விட்டாப் போதும். கிழே இறங்கவே மாட்டாரு! எங்கண்ணன் நாலு வார்த்தை பேசினு சகிக்காதே! கர்ணகடூரமால்லே இருக்கும்?

மூக்கன் போகிருன்.

ஜெய : போய் குடிக்க ஏதாவது கொண்டு வா!

பாய் : ஹாட் வேணுமா? கூல வேணுமா?

விக் : கூழாவது கஞ்சியாவது? யார்ரா இவன்!

பாய் : காப்பி!

ஜெய : சீக்கிரம் கொண்டா!

மூக்கன் போகிருன்.

சேக : பையன் பரவால்லேப்பா! புத்திசாலிதான்.

விக் : ஒண்ணுதான் குறைவு!

சேக : என்ன?

விக் : வாலு! அது இருந்தா என் தம்பி மரத்து மேலேயே இருப்பான்!

சிரிக்கிருர்கள்.

காட்சி 20

நடு ஹால். பெட்டி ஒன்று காலின் கீழே கிடக்க சந்திரன் நின்ருன். அவன் முன்னல் லக்ஷ்மியும் சாந்தாவும் நின்றனர். சோகச் சாயை அனைவர் முகத்திலும் வீசியது.

சந்திரன் குனிந்து லக்ஷ்மியின் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டான்...... சாந்தா அழுதாள்.

லக்ஷ் : அழாதேம்மா! அண்ணன் ஊருக்குப் போகச்சே கண் கலங்கலாமா?

சந்திரன் சாந்தா அருகில் வந்தான். அன்புடன் அவள் தலையை வருடிக் கொண்டே சொன்னுன்.

சந் : அசடே! ஏன் அழறே? சந்தோஷமாயிருக்க வேணுமா? எங்கே சிரி, பார்க்கலாம்.. ம்...சிரின்னு சிரிக்கணும். எங்கே? ஆ! ஆ! ஆ! இப்பொதான் நீ நிஜமான சாந்தா!

துக்கத்துடன் சாந்தா சிரித்தாள்.

ரிக்ஷாவாலா உட்புறம் எட்டிப் பார்த்து.

ரி. வா : ஜல்தி வா. சாமி! ரயில் கிளம்பிடப் போகுது!

சந் : நான் வரேம்மா...சாந்தா போயிட்டு வரேன்!......

கையில் பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே சென்ருன்.

அவன் பின்னல் வாசல் வரையிலும் வந்து நின்று அவன் போவதை சாந்தாவும் லக்ஷ்மியும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

89167

காட்சி 21

சந்திரன் ரிக்ஷாவில் ஏறி உட்கார்ந்தான், ரிக்ஷா கிளம்பிச் சென்றது. ரயிலிலிருந்து இறங்கிய போஸ்ட்மாஸ்டர் பரபரப்போடு தமது சாமான்களைச் சரிபார்த்துக் கொண்டிருந்தார். ஒரு பெட்டி காணப்படவில்லை....,....திகிலோடு சரளாவை நோக்கி......

போ. மா. : ஏ.. ஏ.. அந்த சின்ன ஸூட்கேஸ் எங்கே? போர்ட்டர்! போர்ட்டர்!...

சா : ஐயய்யோ! அது வண்டியிலேயே இருக்கு.

போ. மா. : ஆ! வண்டியிலியா?

வண்டியை நோக்கி ஓடினுர். அதற்குள்வண்டி நகர்ந்துவிட்டது.

போ. மா, நின்ருர். அவர் பின்னல் வந்த சரளா அவரைக் கடந்து வண்டியை நோக்கி ஓடினுள்.

வண்டியை நோக்கி சரளா ஓடி வந்து கொண்டிருந்தாள். சந்திரன்

வண்டியிலிருந்து இதைக் கவனித்தான். 'என்ன வேணும்?' என்று கேட்கும் ரீதியில் கையை நீட்டினன்.

சந் : என்ன?

சர : எங்க பெட்டி!

சந் : ஆ பெட்டியா?

சந்திரன் உட்புறம் திரும்பினன்.

ஒரு பெட்டியுடன் மீண்டும் ஜன்னல் பக்கம் வந்தான். அதை வெளியில் காட்டிக் கொண்டே......

சந் : இதுதானே?

சர : (ஓடி வந்து கொண்டே) இல்லேல்லே! அது சின்ன லெதர் சூட் கேஸ்...

சந்திரன் உட்பக்கம் திரும்பினன்.

சந் : இதுதானே?

சர : ஆமா ஆமா!

எடுத்துப் போட்டான்.

காட்சி 22

சேகரைப் பார்க்க வருகிருர் ஒருவர். அவன் குடித்துவிட்டு வருகிருன். உள்ளே சென்று பார்த்த மங்களம் அவனுக்கு ஜுரம் என்கிருள். விஷயமறிந்த அவர் போய் விடுகிருர். அதை முதலியாரிடம் கூறுகிருன் கணக்கன். அவர் கூச்ச லிடுகிருர்.

முத : போகாமே? உன் மகன் திருவிளையாடலே யெல்லாம் பாத்துக்கிட்டேவா இருப்பாங்க? அவனுக்கு என்னமோ ஜுரமடிக்குதின்னு சொன்னியே,பாரு. என்ன ஜுரம்னு! செலவுக்காக பணம் வாங்கியிருப்பான்னு அன்னிக்கு கதை அளந்தியே உன் கண்ணுலேயே பாரு, மகன் செலவு பண்ணியிருக்கிற லெக்ஷணத்தை! கண்டிச்சு வளக்க வேண்டியவனைக் கண்டபடி அலைய விட்டுட்டு இப்பொ கண்ணீரா விடறே? அழவேண்டியவன் நான்; கண்ணீர் விட வேண்டியவன் நான். என்னைப் படைச்ச பிரம்மனை நினைச்சுக் கதற வேண்டியவன் நான். ஒண்ணு மட்டும் மறந்துடாதே. இந்த வயசான காலத்திலே நான் மனசு புண்பட்டு ஒரு வார்த்தை சொன்னேன்...

மங் : ஐயோ!......

முத : அவ்வளவுதான்!

சேகர் ஜெயந்தி பற்றியும் அவன் குடிப்பழக்கம் பற்றியும் செய்தி பரவவே அவனுக்கு யாரும் பெண் கொடுக்க மறுக்கின்றனர். ஒரு நாள் முதலியார் பல இடமும் சுற்றியலைந்து விட்டு வருகிருர்.

மங் : போன காரியம் என்ன ஆச்சு?

முதலி : ஆறதென்ன? வெளியிலே தலைகாட்ட முடியல்லே. வெக்கக்கேடு.

மங் : வெக்கக்கேடா? என்ன நடந்தது?

முதலி : என்னடி நடக்கணும்? யாரோ ஒரு நாடகக்காரி வந்திருக்காளாம். அவளையே ஓம் மகனுக்குக் கட்டி வைக்கிறது தானே! சொல்லுடி இப்பொ! இனிமே பொண் கொடுக்க எவன் வருவான்? எவண்டி வருவான்?

மங் : அப்படீன்னு......... அந்தப் பொண்ணையே அவனுக்குக் கட்டி வச்சிடலாமே?

முதலி : எந்தப் பொண்ணை?

மங் : சாந்தாவை!

முதலி : ஏன், அவமட்டும் கிள்ளுக்கிரைன்னு நினைச்சுக்கிட்டிருக்கியோ?

மங் : ச்...என்ன இது? சாந்தா வேணும் சாந்தா வேணும்னு நீங்க தானே சொன்னீங்க?

முதலி : சொன்னேன். ஆனு உன் மகன் இப்படி தறுதலையா திரியருன்னு தெரிஞ்சும் அந்தக் குழந்தை வாழ்க்கையை நான் கெடுக்கமாட்டேன். எனக்கும் ஒரு மனச்சாக்ஷி இருக்கு!

மங் : இப்படியே பேசிக் கிட்டிருந்தா என்னதான் செய்யறதாம்? காலா காலத்திலே ஒரு பொண்ணை கட்டிவச்சிருந்தா இந்த நாடகக்காரி வம்பெல்லாம் இதுபோல் வந்திருக்குமா? நான் சொல்றதைக்

கேளுங்க...சாந்தாவையே நிச்சயம் பண்ணிடுவோம். முறைப் பொண்ணும்கூட...என்ன இருந்தாலும் நம்ம குழந்தையை நாம தானே கவனிக்கணும்.

காட்சி 23

வீணையுடன் ஹாலில் அமர்ந்து சரளா பாடிக் கொண்டிருந்தாள். போ. மா. ஒரு அறையினுள்ளிருந்தார். காதில் விழும் பாடலை வெகு சுவாரஸ்யமாகத் தலையை ஆட்டிக் கொண்டு ரசித்தார். பல்லவி பாடி முடிந்ததும் சாந்தா வந்தாள்.

சாந் : *சரளா...!*

என்றழைத்தாள். சரளா திமிர்ந்து பார்த்து...

சர : *வா! சாந்தா!*

சாந்தா அவளருகே வந்தாள். இந்த சப்தம் கேட்டு போஸ்ட் மாஸ்டரும் அங்கு வந்தார். சாந்தாவைச் சுட்டிக்காட்டி சரளாவை நோக்கி,

போ. மா. : *ஆ...*

சர : *சாந்தா! பக்கத்து வீட்டு லக்ஷ்மி அம்மா பொண்ணு.*

போ. மா. : *அது தானே கேட்டேன். ஆ..வீட்டிலே அம்மா எல்லாரும் சுகம்தானே?*

சாந் : (உட்கார்ந்து கொண்டே) *ம்...நீங்கதான் எங்க வீட்டுப் பக்கமே வரதேயில்லியே!*

போ. மா : *வராமே என்ன? இப்போ கொஞ்சம் ஜாஸ்தி வேலை இப்போ...வரேன்! வரேன்.*

சர : *அப்பா! நம்ம சாந்தா ரொம்ப ஜோரா பாடுவாப்பா! இப்போ நான் பாடின பாட்டுக்கூட இவ கத்துக் கொடுத்ததுதான்...!*

போ. மா : *அது தானே கேட்டேன்., எங்கே பாடம்மா!*

சாந்தா வெட்கத்துடன் தலை கவிழ்த்துக் கொண்டாள்.

போ. மா : *வெக்கமா இருந்தாச் சொல்லு ; ரெண்டு காதையும் பல மாப் பொத்திக்கிறேன்!*

சரளா கையிலிருந்த வீணையை வாங்கி சாந்தா மீட்டினாள்: பாடத் தொடங்கினாள். பிறகு இருவரும் பாடினார்கள்.

காட்சி 24

சந்திரன் வீட்டின் வெளிப்புறம் கேட் அருகில் ஒரு கார் வந்து நின்றது. முன் ஸீட்டில், கணக்கன் பக்ஷணங்களடங்கிய கூடையுடன் இருந்தார்.

பின் ஸீட்டில் முதலியார் இருந்தார்; கார் நின்றதும் ஏக காலத்தில் கதவைத் திறந்து கொண்டு கணக்கனும் டிரைவரும் இறங்கினர்.

இடது, வலதுபுறமாக நின்று இரு பக்கக் கதவுகளையும் ஒரே சமயத்தில் முதலியார் இறங்குவதற்காகத் திறந்தனர்.

டிரைவர் திறந்த வழியாக முதலியார் இறங்கி, நடந்தார்.

இதை கணக்கன் விரும்பவில்லை. டிரைவரை முறைத்துப் பார்த்தார். காரின் உள்ளே புகுந்து, முதலியார் இறங்கிய வழியாக இறங்கினார்.

இதற்குள் பக்ஷணக் கூடையுடன் டிரைவர் முதலியாரைப் பின் தொடர்ந்தான்.

இந்த வேலைகளெல்லாம் தனக்கே உரியன என்பதுபோல் டிரைவரிடமிருந்து கணக்கன் பலவந்தமாகக் கூடையைப் பறித்துக் கொண்டார்.

முதலியாரைப்பின் தொடர்ந்தார் அந்த அசடனைக் குரோதப் பார்வையுடன் கவனித்துவிட்டு டிரைவர் காரை நோக்கித் திரும்பினான்!

காட்சி 25

சரளா பக்கத்து வீட்டுக்குக் குடி வரவே சாந்தா அவளது சிநேகிதியாகி விட்டாள். ஒருநாள் பெண் பார்க்க முன்னேற்பாட்டின்படி சாந்தா வீட்டுக்கு வந்தார் முதலியார்.

லக்ஷ் : *வாங்கண்ணா! ஏது அபூர்வ தெரிசனமா இருக்கே?...ம்..*

முதலி: (உட்கார்ந்து கொண்டே) அபூர்வம் ஒண்ணுமில்லே. உன்னைப் பார்க்கணும் போலிருந்தது; வந்தேன்.

லக்ஷ்: ஏண்ணு! அண்ணி, சேகர் எல்லோரும் சுகம் தானே?

முத: ம்.. லக்ஷ்மி! சந்திரன் கிட்டேயிருந்து லெட்டர் வருதில்லே? ஒழுங்காப் படிக்கிருனு?

லக்ஷ்: என்னமோ படிக்கிருன். அதிர்ஷ்டம் எப்படி இருக்குதோ?

முத: சாந்தா எங்கே?

லக்ஷ்: பக்கத்து வீட்டிலே புதுசா ஒரு போஸ்ட் மாஸ்டர் வந்திருக்காரு. அவர் மகளும் நம்ம சாந்தாவும் சினேகிதிகள். இப்போ அங்கேதான் போயிருக்கா...

கண: (முதலியாரிடம்) அப்போ நான் போய் ராமசாமியைப் பாத்துட்டு வந்துடறேனுங்க.

வெளியே சென்ருன்.

முத: இதோ பாரு லக்ஷ்மி! சேகர் கலியாண விஷயமா பேச்சு வார்த்தை நடந்துக்கிட்டிருக்குது!

லக்ஷ்: ஏதாவது முடிவாச்சுதா?

முத: ம்...நடந்துக்கிட்டிருக்குது... லக்ஷ்மி! நான் நினைக்கிறது அதில்லே; நம்ம சாந்தாவையே அவனுக்குக் கட்டி வச்சா என்ன?

பதில் கூருது தலை குனிந்து யோசனை யிலாழ்ந்து நின்ருள் லக்ஷ்மி.

முதலியாருக்குத் தூக்கி வாரிப் போட்டது. லக்ஷ்மியிடம் கேட்டார்.

முத: சும்மாச் சொல்லு; தயக்கமே வேண்டாம்!

லக்ஷ்: அண்ணு! உங்க மனசு நல்ல மனசு.. எனக்குத் தெரியும்... ஆனு என் நிலைமை? நான் ஏழை. யாரும் மதிக்காத தரித்திரம். எங்க கஷ்டமும் நஷ்டமும் எங்களோடேயே இருக்கிறதுதானே நல்லது?.. ம்?..

முத: நீ பேசல்லே லக்ஷ்மி! நான்தான் இப்படிப் பேசும்படி பண்ணிட்டேன். உங்கிட்டேயும் உன குழந்தைகள் கிட்டேயும் அந்த வீதத்திலே தான் நடந்திருக்கேன். இருந்தாலும் நாம ஒரே தாய் வயத்திலே பொறந்தவங்க. ஆயிரம் தப்புச் செய்தாலும் அதுக்காக ஒருத்தரை யொருத்தர் தள்ளிட முடியுமா?

லக்ஷ்: உங்களுக்குத் தெரியாதண்ணு! உடம்பிலே ஒரு காயம் பட்டா அது ஆறிப் போயிடும். ஆனு, மனசிலே பட்ட காயம்..?

முத: நடக்கக் கூடாததெல்லாம் நடந்து போச்சு. அதையெல்லாம் மறந்திடு லக்ஷ்மி! வெளிப் படையா சொல்றேன்; அந்தப் பய சேகர் தறுதலையாப் போனதுக் கெல்லாம் மங்களம்தான் காரணம்; பெரிய வாயாடியாகவும் போயிட்டா ... ஆனுலும் எனக்கொரு சபலம்! உன் மகள் வந்தா சேகர் திருந்த மாட்டானுன்னு ஒரு ஆசை.

லக்ஷ்: தங்க ஊசின்னு நினைச்சு கண்ணிலே குத்திக்கலாமா? சேகரைப் பத்தி...

முத: பலமாதிரியாத்தான் பேசுருங்க? லக்ஷ்மி கொஞ்சம் நினைச்சுப் பாரு! ரத்தமும் கொழுப்பும் இருக்கிறதுனுலே இந்தச் சின்னப் பசங்க கொஞ்சம் துள்ளத்தான் செய்வாங்க. அதுக்காக சேகர் எப்பவுமே திருந்த மாட்டானு நீ நினைக்கிறியா? உன்னைக் கட்டிக்கிறதுக்கு முன்னுடி நாராயணன் தான் எவ்வளவு மோசமா இருந்தான்? பொறுமையும் குணமும் உள்ள ஒரு பெண் வந்தா குணம் மாறவே மாருதா லக்ஷ்மி?

லக்ஷ்: மாருதுன்னு நான சொல்லலியே...

முத: நான் கேட்கிறேன்; சாந்தா அவனுக்கு முறைப் பெண்ணு. அவளைக் கட்டிக் கொடுக்க, நீயே சம்மதிக்கலேன்னு நாலு பேர் என்ன நினைப்பாங்க? நம்ம குழந்தையைப் பத்திக் கேவலமாப் பேச நீயே இடங் கொடுக்கலாமா?...லக்ஷ்மி! எதுக்கும் நீ முதல்லே சாந்தா கிட்டே கேளு. சேகர் விஷயத்திலே

பொறுமை காட்டவும், இரக்கம் காட்டவும் சாந்தாவை விட வேறு எந்தப் பொண்ணுக்கு அக்கறை இருக்க முடியும்?

துள்ளிக் குதித்தோடி வரும் மான் குட்டி போல் உள்ளக் களிப்போடு சாந்தா ஓடி வந்து கொண்டிருந்தாள். வீட்டை சமீபித்ததும் முதலியாரின் வார்த்தைகள் அவள் காதில் விழுந்தன. திடுக்கிட்டு நின்ருள்.

முத: நான் கேட்கிறேன்; சாந்தா ...இருக்க முடியும்!

லக்ஷ்: அண்ணு! இந்த விஷயத்திலே...இதிலே என் சம்மதம் பெரிசில்லே. சந்திரன்கிட்டே கேளாமே...

முத: அவசியம் கேக்கத்தான் வேணும். அதிலென்ன சந்தேகம்?

கண: ஆனு.. அவர் வர்ரதுக்கு ரொம்ப நாளாகுமே!

முத: ஆ...அப்போ நானே சந்திரன பேருக்கு ஒரு கடுதாசி எழுதறேன். அவன் அபிப்பிராயம் தெரிஞ்சுக்காமே ஒண்ணும் செய்ய முடியாதில்லே...வரட்டுமா லக்ஷ்மி?

எழுந்து போனர்.

காட்சி 26

முதலியார் வீடு.

மேஜை-அதன் மீது விரித்து வைக்கப்பட்ட லெட்டர் பாடு இருந்தது. மேஜை யருகே நாற்காலியில் முதலியார் பேனவும் கையுமாக உட்கார்ந்திருந்தார்—கணக்கனும் மங்களமும் அருகில் நின்றனர்.

மங்: என்ன இது சொல்றீங்க? ஒரு முடிவுக்கும் வராமே இப்படியே பேசிக்கிட்டிருந்தா?

முத: என்னடி முடிவு? இதுக்கு சந்திரன் சம்மதிக்க வேணுமா?

மங்: எதுக்காம்? அவன் அம்மாவும் கலியாணப் பெண்ணுமே சரின்னுட்டாங்க. இதோ பாருங்க, 27-ந் தேதி நல்ல முகூர்த்தம் இருக்குது. இதைவிட்டா அடுத்த ரெண்டு மாசமும் கலியாணப் பேச்சையே எடுக்க முடியாது!

முத: இந்தா! வளவளன்னு பேசாதே! யோசனை பண்ணறதுக்கு கொஞ்சம் அவகாசம் கொடுக்க வேணும்? சும்மா, தேதி இருக்கு தேதி இருக்குன்னு முகூர்த்தம் நிச்சயம் பண்ணச் சொல்றியே! ஆ?"

மங்: ஆனு ஒண்ணு! நீங்க நினைக்கிறப் போல சந்திரன் ஒண்ணும் அவ்வளவு சுலபமா சம்மதிச்சிட மாட்டான்.

முத: அப்போ இந்தக் கலியாணமும் நடக்காது!

மங்: (வியப்புடன் ஒரு வினடி மௌனமாக நின்ருள். பிறகு) உங்க இஷ்டம்போலவே லெட்டர் எழுதுங்க. மறக்காமே தேதியையும் குறிப்பிட்டு எழுதுங்க (இரண்டடி நடந்தவள் மீண்டும் திரும்பி அவரை நோக்கி) இன்னிக்கு ராத்திரி வண்டிக்கே கணக்கன் பட்டணம் போகட்டும்!

முதலியார் கடிதமெழுத ஆரம்பித்தார். கண்ணினல் கணக்கனுக்கு ஏதோ ஜாடை காட்டி விட்டு மங்களம் அடுக்களையை நோக்கி நடந்தாள். கணக்கன் அவளைப் பின் தொடர்ந்தார்.

காட்சி 27

எதைப்பற்றியும் கவலையின்றி ஜெயந்திவீட்டில் அரட்டை யடிக்கிருன் சேகர்.

சேக: ஜெயந்தி! நீ இருக்கும் போது நான இன்னெருத்தியை சொப்பனத்திலேகூட நினைப்பேனு? இத்தனை நாள் பழகியும் இன்னுமா சந்தேகம்?

சேக: என்னப்பா இது? திடீர்னு இப்படி ஆரம்பிச்சிட்டே?

விக: ஆ, இப்பொல்லே ஜெயந்தி முகமாத் தெரியுது? அடேங்கப்பா! கொஞ்ச நேரத்துக்கு முன்னடி கோவம் அப்படியே தாண்டவமாடிக்கிட்டில்லே இருந்தது.

ஜெய: போதும்! சேகர்கிட்டே எனக்கு அன்பே இல்லேன்னுதானே சொல்றீங்க? பரவால்லே! அவரை அடைய முடியல்லேன்னலும் தெய்

வமா மதிச்சுப் பூசை பண்ணியே காலம் கழிப்பேன்.

விக: சேகர்! உனக்குக் கலியாணம்கிற பேச்சு இவ காதிலே விழுந்தது! அவ்வளவுதான். சாப்பாடில்லே, டிபன் இல்லே, ஆட்டமில்லே, பாட்டு இல்லே ஒண்ணும் இல்லே!

மூக்: எங்கே. சேகர் எங்கே சேகர்னு தூக்கத்திலே கூடப் புலம்பறுங்க!

ஜெய: போதுமே!

சேக: ஜெயந்தி! ஊர்க்காரங்க கண்ணிலே மண்ணைப் போடணும், அதுக்குத்தான் கலியாணம் பண்ணிக்கிறேனே தவிர வேறெதுக்கு?

விக்: இந்த தாஜ்மஹால் இருக்கும்போது உனக்கெதுக்கப்பா கூரை வீடு! ஆனு காரியமாகணுமானு காக்காப் பிடிக்கணும் பாரு! சில ஆசாமிக கையையும் தலையையும் சாச்சுக்கிட்டு கும்பிடறதைப் பாத்தா இவரைப்போல யோக்கியன் இல்லேன்னு சத்தியம்கூடப் பண்ணுவாங்க; இன்னும் சில மேதாவிக. "வாங்க...வாங்க...வீட்லே குழந்தை குட்டி செளக்கியமா... என்னமோ செளக்கியமில்லேன்னு அந்த மேதாவிதான் காப்பாத்தற மாதிரி எல்லாம் நடிப்பு. ஜெயந்தி! படுகாக்கா பசங்க! காக்கா பசங்க! அதே மாதிரி சேகர் கலியாணமும் ஒரு நடிப்புதான்...நீ இரும்பு; சேகர் காந்தம்.

மூக்: அவரு பொடி! நீங்க மூக்கு!

விக்: சே, போடா! கறையான் மாதிரி! ஊடேல்லே வந்து புகுந்துக்கறான்...ஆ, சொல்ல மறந்துட்டேனே நம்ம பழைய மானேஜர் இப்போ கடை ஆரம்பிச்சுட்டாரு!

சேக: என்ன கடை?

விக்: காயலாங்கடை!

காட்சி 28

கணக்கன், மங்களத்தின் சொல்படி, மணமுடிக்கும்படி சந்திரன் அடிப்பது போல முதலியாருக்கும் லக்ஷ்மிக்கும் இரு தந்திகள் அடித்து விடுகிறான். அதுகண்டு சாந்தா அவனுக்குக் கடிதமெழுதுகிறாள். காலங் கடந்து வந்த அக்கடிதத்தைப் படிக்கிறான் சந்திரன்.

அருமை அண்ணு!

இக்கடிதம் உனக்கு வியப்பை அளிக்கலாம்; இது வெறும் கடிதமல்ல; உன் தங்கையின் நெஞ்சிலே வழிந்தோடும் வேதனை ரத்தத்தில் தோய்த்தெழுதப்பட்ட கடிதம். அண்ணு! சேகருக்கும் எனக்கும் விவாகம் நிச்சயிக்கும்படி தந்தி அடித்திருக்கிருயே, ஒரு வார்த்தையாவது என்னிடம் கேட்கக் கூடாதா? உனக்காக எதையும் செய்வேனே. ஒரு பிடி மண்ணை யள்ளி என் வாயில் போட்டாலும் அமிர்தமாக ருசித்துச் சாப்பிடுவேனே! குறை கூற வில்லை அண்ணு! என் நெஞ்சம் கொதிக்கிறது. கடைசியாக ஒரு வேண்டுகோள். உன் கட்டளைப்படி என் விவாகம் 27-ந் தேதி காலை 8 மணிக்கு நடக்கிறது. உடனே வா! நொறுங்கிப் போன ஒரு பெண்ணுள்ளம் உன் காலடிகளில் விழுந்து கதறத் துடித்துக் கொண்டிருக்கிறது.

சாந்தா.

கடிதத்தைப் படித்து முடித்தான் கைகள் நடுங்கின; கண்ணீர் வழிந்தோடியது...பதறும் குரலில்,

சந்: சாந்தா!

விட்டுக்கு ஓடி வந்தான். ஆனல் மணம் முடிந்து விட்டது. வீடு சென்றான்.

அமைதியற்ற நிலையில் சந்திரன் பைத்தியம்போல் உலாவினான் கலவரத்தோடு லக்ஷ்மி கேட்டாள்.

லக்ஷ: உன் போக்கு என் மனதைப் புண்படுத்துகிறதப்பா! தயவு செய்து சொல்லேன்; என்ன நடந்தது?

சந்: என்ன நடந்ததென்று என்னிடமா கேட்கிருய்? நடந்த நாசத்தையெல்லாம் மறந்து பேசுகிருயா அல்லது நாடகம் நடிக்கிருயா?

லக்ஷ: சந்திரா!

சந்: பேசாதே அம்மா! வேதனையால் என் நெஞ்சம் துடிக்கிறது. மணக்கோலத்தில் வாடிய மலர்போலிருக்கும் சாந்தாவைக் கண்டேன்

பால்வடியும் அந்த முகத்திலே கண்ணீர் வடிவதைக் கண்டேன்; மகளை யாரிடம் ஒப்படைத்தாயம்மா? சாந்தாவின் கண்ணீரைவிட மாமாவின் உறவுதான் பெரிதாகப்பட்டதா? அவளுடைய சந்தோஷத்தைவிட அண்ணனின் மனவருத்தம்தான் மேலாகத் தோன்றியதா? சொல்லம்மா! ஏன் எனக்கு எழுதவில்லை? எழுதினால் தடுப்பேன் என்ற பயமா? சூழ்ச்சி பலிக்காதே என்ற நடுக்கமா? சொல்லுங்கள்! ஏன் வாய் மூடி நிற்கிறீர்கள்?

லக்ஷ்: ஐயோ!

லக்ஷ்மி உள்ளே சென்றாள்.

முத: எல்லாம் ஒழுங்காத்தான் நடந்திருக்குது. உன் சம்மதம் தெரிஞ்சுக்கிட்டு வர கணக்குப்பிள்ளைகிட்டே கடுதாசிகூட கொடுத்தனுப்பினேனே!

சந்: வேலிக்கு ஓணான் சாட்சி! உங்கள் நயவஞ்சக நாடகத்திற்கு கணக்கன் கதாநாயகனா? எங்கே அந்த நாய்? மானமிருந்தால் என் முன்னே வரச் சொல்லுங்கள்.

லக்ஷ்மி வந்தாள்; தன் கையிலிருந்த தந்தியை சந்திரனிடம் கொடுத்தாள்; அதை வாங்கி பரபரப்புடன் படித்தான்; கை நடுங்கியது. வெறி பிடித்தவன்போல் பேச ஆரம்பித்தான்.

சந்: சூழ்ச்சி! பயங்கரமான சூழ்ச்சி!! இதை எப்படியம்மா நம்பிவிட்டாய்? இது பொய்த் தந்தி! எனக்கும் இதற்கும் சம்பந்தமே கிடையாது.

லக்ஷ்: (திடுக்கிட்டு) ஆ..?

சந்: சூழ்ச்சிக்குப் பெயர் போன சகுனியும் செய்ய நடுங்கும் செய்கை! அம்மா! ஆயிரம் துன்பம் வந்தாலும் அதைக் கண்டு கலங்காதவளாயிற்றே நீ! உன் வைர நெஞ்சம் இந்த வஞ்சகத்தை ஏன் தெரிந்து கொள்ளவில்லை? அண்ணனின் பேச்சை நம்பி விட்டாயே அம்மா!

லக்ஷ்: (கதறிக்கொண்டே) அண்ணா! இதென்ன பயங்கரம்! சந்திரனுக்குத் தெரியாமே யாரண்ணா தந்தி அடிச்சாங்க?

முத: லக்ஷ்மி..

சந்: லக்ஷ்மி! ஹஹ்ஹா! தங்கையிடம் எவ்வளவு பிரியம்? ஆஹா! அந்த அன்பிலே அவள் குடும்பத்தை அரை நொடியில் அழித்து விட்டீர்களே! மகனுக்கு மணம் முடிக்க நினைத்தீர்கள், கெட்டழிந்து போன அவனுக்கு எங்குமே பெண் கிட்டாது என்பதை உணர்ந்தீர்கள். வெறி பிடித்தலையும் வேட்டை நாய்களின் பார்வையிலே பாபமறியாத மான் குட்டி பட்டது போல் சாந்தா உங்கள் கண்களில் விழுந்தாள், ஏழை வீட்டுப் பெண்ணை. எது வேணடுமானாலும் செய்யலாம் என்று நினைத்தீர்களா? அவள் ஏழைதான், இந்தப் பட்டினியின் நிழலிலே வளர்ந்தவள் தான்! ஆனால் சாதாரணமாக வளரவில்லை, எங்கள் அன்பை யெல்லாம் கொட்டி வளர்த்தோம்; இந்த மார்பையே தொட்டிலாக்கி வளர்த்தோம் கஞ்சியின் தண்ணீரை நாங்கள் குடித்து விட்டுப் பருக்கையை அவளுக்குக் கொடுப்போம்! ..மாமா! நான் பி.எல். படிப்பது பணம் தேடி அதில் மிதப்பதற்கல்ல. ஓரளவு பணம் தேட வேண்டும்; மனதிற்குகந்த புருஷனுக்கு அவளைக் கட்டிக் கொடுக்க வேண்டும்; காலம் எல்லாம் அவள் களிப்புச் சிரிப்பைக் கண்டு ஆனந்திக்க வேண்டும் என்றிருந்தேனே! நிமிஷ நேரத்தில் எங்கள் வாடா மலரைப் பொசுக்கிவிட்டீர்களே! என் ஆசையில் மண்ணை யள்ளிப் போட்டு விட்டீர்களே, மாமா!

லக்ஷ்மி அவனது வாயைப் பொத்த முயன்றாள்.

லக்ஷ்: சந்திரா ... போதும்ப்பா!

சந்: அம்மா! என்னை அடக்கி விடலாம்அம்மா. துடித்துக் கொண்டிருக்கும் என் வேதனைகளைக்கூட அடக்கிவிடலாம்! ஆனால் நொறுங்கிப் போன உன் மகளின் உள்ளத்திலே அமைதி நிலவச் செய்ய முடியுமா? நகையெல்லாம் கொட்டிச் சொரிந்து அவளை மண மண்டபத்தில் உட்கார்த்தி விட்டீர்களே! அந்த அலங்கார வேஷத்தினுள்ளே ஒரு இதயம் வெடித்துக் கொண்டிருப்பதை உன்

அண்ணன் அறிவாரா? நீதான் அறிவாயாம்மா?

ஓயாமல் இந்த மிஷினிலே உழைத்தாய்! மிஷினுக்காவது ஓய்வுண்டு. நீ ஓய்வில்லாமல் உழைத்தாய். உழைப்பின் களைப்பிலே எழுந்த பசியை அடக்க நீ சாப்பிடவில்லை. பச்சைத் தண்ணீரால் பசியை அடக்கினாய். அன்று இந்த அண்ணன் எந்த உலகத்திலிருந்தார்?.. உங்களிடம்தான் கேட்கிறேன். மாமா! அன்று இதே தங்கையும் நானும் வறுமையின சின்னங்களாக பணம் கேட்டு அலைந்தபோது உங்கள் அன்பு எங்கே மாமா போயிருந்தது? பால் வடியும் எங்கள் சாந்தாவைப் பார்த்தால் இளகாத நெஞ்சமும் இளகி விடுமே! பார்த்த பிறகுமா இந்தப் பாதகச் செயல்? அனாதையான தங்கைக்கு அண்ணன் அளிக்கும் உதவி இதுதானா? தங்கையின் குடும்பத்தை அழிக்க வேண்டுமானால் நள்ளிரவில் நாலு ஆட்களை விட்டு இந்த வீட்டையும் எங்களையும் சுட்டுப் பொசுக்கி இருக்கலாமே? என்ன காரியம் செய்து விட்டீர்கள் மாமா? என்னால் தாங்க முடியவில்லையே!

முத: சந்திரா! எனக்கு எதுவுமே தெரியாதப்பா! நான் நிரபராதி!

சந்: ஆயிரம் கொலைகள் செய்தவன் கூட தூக்கு மேடைக்கு வந்தால் நிரபராதி என்றுதான் அலறுவான். தயவு செய்து போய் விடுங்கள். உங்களைப் பார்க்கும் போதெல்லாம் என் உயிரின் துடிப்பு அதிகரிக்கிறது. மானங்கெட்ட நமது உறவு சாந்தாவின் பலியோடு அஸ்தமித்துப் போகட்டும்!

முத: சந்துரு! என்னைத்திட்டு... என்ன வேண்டுமானாலும் பேசு. ஆனால் சூழ்ச்சிக்காரன்னு மட்டும் சொல்லாதேப்பா. சூழ்ச்சிங்கிற சொல்லை என சொப்பனத்தில்கூட அறியாதவனுச்சே! செத்துச் சாம்பலானாலும் அந்த நினைப்பு மட்டும் வராதப்பா.. லக்ஷ்மி! அழாதம்மா! மங்களம் பெருக வேண்டிய இந்த நாளிலே நீ கண்ணீர் விடலாமாம்மா? உங்க கண்ணீர் ஒரு பாபமுமறியாத இந்தக் கிழவனை எப்படி வதைக்கிறதின்னு பாரம்மா... பார்க்க மாட்டே.. பார்க்க மாட்டே.. இதோ பாரு! சத்தியமாச் சொல்றேன் நான் நிரபராதி... நான் நிரபராதி! பொய்த் தந்திங்கிறதும் எனக்கு இப்பொதான் தெரியும். இதெல்லாம் யாரோ செய்த சதி. யாரோ செய்த சதி! அதைக் கண்டுபிடிக்காமெ உங்க முகத்திலே முழிக்க மாட்டேன். முழிக்க மாட்டேன்.

கண்களில் நீர் மல்க தடுமாறிக் கொண்டே நடந்தார்.

காட்சி 29

அமைதியற்ற நிலையில் முதலியார் அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தார். முகத்தில் கோபம் ஜொலித்தது. திகிலுடன் அவரையே நோக்கிய வண்ணம் நின்றாள் மங்களம். நடந்து கொண்டிருந்தவர் மங்களத்தை திரும்பிப் பார்த்தார்...

மங்: என்ன இருந்தாலும்...

முத: மூடு வாயை! உன்னாலே என் மானமே போச்சே! நாலுபேர் முகத்திலே முழிக்க முடியாதபடி செய்திட்டியே, சண்டாளி! இந்தமாதிரி மகனுக்குக் கல்யாணம் செய்து வைக்கலேன்னு யாருடி அழுதாங்க? இந்த நாச புத்தியை எங்கிருந்து விலைக்கு வாங்கினே? போ சனியனே இங்கிருந்து! எங்கேயாவது போய்த் தொலை!

மங்: ஏன் கோபப்படறீங்க? நீங்களே கொஞ்சம் நினைச்சுப் பாருங்க. இந்தக் கல்யாணமும் நின்னு போயிருந்தா நம்ம குழந்தை கதி என்னவாயிருக்கும்? சாந்தாவைத் தவிர வேறு எந்தப் பெண் வந்தாலும் அவன் நல்லாக மாட்டான். சந்திரன் ஆர்ப்பாட்டத்தை நீங்களே பார்த்தீங்களே. அவன் சம்மதம் கேட்டிருந்தா கல்யாணம் நடந்திருக்குமா?

முத: நடக்கலேன்னு யாருக்கும் நஷ்டமில்லே. இப்படி நடத்தணுமின்னு எவண்டி சொன்னான்? எனக்கில்லாத அக்கறை உனக்கென்னடி வந்தது?

மங்: என்னமோ கொஞ்சம் தப்பா நடந்துக்கிட்டேன். இருந்தாலும் நான் செய்தது யாருக்காகவாம்? இதோ பாருங்க. இன்னி முதல்

சேகர் நல்லாகலேன்னு அப்புறம் என்னைக் கேளுங்க.

கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டே

முதலி: அந்தக் கணக்கன்! அயோக்கிய ராஸ்கல்! ஒளிஞ்சுக் கிட்டு திரியருரோ? வரட்டும்! சொல்றேன்...

ஆமா! கேக்கவேண்டியதுதான்! அந்தக் கணக்கன்... இவ்வளவும் செஞ்சிட்டு தலைமறைவா திரியருரோ? வரட்டும் அயோக்ய ராஸ்கல்!

காட்சி 30

சந்திரன் சாந்தா வீட்டுக்கு வருகிருன். அழுதுகொண்டே வரவேற்கிருள் சாந்தா.

சந்: அழாதே சாந்தா!

சாந்: என் கலியாணத்தை ஏத்து நடத்தவேண்டிய நீ திரும்பிக்கூடப் பாராமே போவேன்னு நான் நினைக்கவே இல்லேண்ணு.

அழுதாள். அண்ணன் மனம் உருகியது.

காட்சி 31

சந்: என்னைத் தப்பா நினைக்காதே சாந்தா! எதிர்பாராமே நடந்த சில சம்பவங்களினலேதான் நான் வரல்லே. நடந்ததை விவரிக்கவும் இஷ்டமில்லே. சாந்தா இனிமே இது தான் உன் வீடு. கலியாணத்துக்கு முன்னடி இந்தக் குடும்பங்களுக்குள்ளே சில மனக்கசப்புகள் இருந்தது. அது வேறே விஷயம். இனிமே அண்ணன் அம்மாங்கிற ஆசையெல்லாம் நீ குறைச்சிக்கணும். கட்டின புருஷனும் அவனது பெற்ருேரும்தான் இனிமே உன் குடும்பம். அவங்களை தெய்வமா மதிச்சு நடந்து கொள்ளம்மா.

சந்திரன் திரும்பும்போது முதலியார் அழைக்கிருர்.

முத: ஒண்ணு மட்டும் சொல்லிட்றேம்ப்பா ஒரு குத்தமும் செய்யாதவன் சில சமயங்களில் எல்லா குத்தங்களேயும் சுமக்கணும்; பாபமறியாதவங்க தலையிலே பழி வந்து விழும் அதுக்காக நான் வருத்தப்படலே. பொழுது அஸ்தமிச்சு இருட்டு வருது; மறுநாள் காலமே பொழுது விடிஞ்சா இருட்டு மறைந்து போயிடுது... அதுபோல வேதனைப் படும்படியான சில காரியங்கள் நடந்து உன் மனசிலே அந்தகாரம் நிறைஞ்சிருக்கலாம். ஆனு அது விடியாமலே இருக்கக் கூடாதப்பா! சந்திரா! இன்னி முதல் சாந்தா என மகள்! இந்தக் கிழவன் உயிரோடிருக்கும்வரை அந்தக் குழந்தைக்கு ஒரு குறைவும் வராதப்பா...

சந்: (வருத்தம் மேலிட) மாமா! அடக்க முடியாத மனசு வேதனையிலே ஏதேதோ பேசிட்டேன். தயவு செய்து மன்னிச்சிடுங்க மாமா! நான் போயிட்டு வரேன்...

கரம் குவித்து வணங்கி விட்டு வெளியே சென்ருன்.

காட்சி 32

ஜெயந்தி வீட்டில் சேகர் இருக்கிருன்.

விக்: ஆஹாஹா! என்ன வாய்ஸ் என்ன வாய்ஸ்.. மாஸ்டர் வாய்ஸ். இது சங்கீதமா?.. ம் அன்று... அன்று தேவகானம் இம்மாதிரி செஞ்சுருட்டி கேட்டு எத்தனை வருடங்களாகின்றன. ஜெயந்தி உன்னுடைய கான ரஸத்துக்கு எனது எளிய வணக்கம்!

ஜெய: போதும் சர்டிபிகேட் ஒண்ணும் தேவையில்லே.

சேக: ஏன் ஜெயந்தி, விக்ரமன் கிட்டே இவ்வளவு கோபம்?

விக்: ஆமா! எங்கிட்டே முறைச்சா கட்டிடம் முளைக்கவா போகுது?

சேக: ஓ! இவ்வளவு தானு? ஏம்ப்பா! அந்தக் கண்டிராக்டர் பிளான் கொண்டு வந்தானு?

விக்: பிளானெல்லாம் எப்பவோ வந்தாச்சே!

சேக: சரி! அடுத்த வாரம் முதல் வேலை ஆரம்பமாகணும். என்ன?

ஜெய: என்னுலே உங்களுக்கு எவ்வளவு சிரமம்?

விக் : சேகர்! இந்தப் பரிதாபப் படறது இருக்குப் பாரு, வெறும் வெத்து வேட்டு; வெடிச்சா சத்தம் வராது! புஸ்வாணம்!

எல்லோரும் சிரித்தனர்.

* * *

சேகர் சாந்தாவுடன் சந்தோஷமாக இருக்கிறான். அது பற்றிப் பெருமையாகக் குறிப்பிடுகிறாள் மங்களம்.

முதலியார் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். வெற்றிலையில் சுண்ணும்பு தடவி அதை மடித்து அவரிடம் நீட்டிக் கொண்டே...

மங் : பார்த்திங்களா? கலியாணம் முடிந்த மறு நிமிஷமே நம்ப சேகர் திருந்த ஆரம்பிச்சிட்டான்!

முத : புது மோகம்! முப்பது நாளைக்கு எல்லோரும் அப்படித்தான் இருப்பாங்க.

மங் : நம்ம குழந்தை ஒண்ணும் அப்படியில்லே; விளையற பயிரு முளையிலேயே தெரியாதா?

முத : ஓ! நல்லாத் தெரியுமே! அதுதானே உனக்கு சின்னவயசிலேயே 'வாயாடி'ன்னு பேர் வச்சாங்க?

மங் : நீங்க ஒண்ணு! ஆமா! பேப்பரிலே என்ன விசேஷம்!

முத : எல்லாமே விசேஷம்தான். அப்துல்லா கராச்சிக்குப் போறாராம்!

மங் : ஆமா! நீங்கதான் பார்த்திங்க! அதுசரி, பவுனு என்ன விலையாம் இப்போ?

முத : அரிசி விலை! போடி, போ! பெரிசா பவுனு விலை கேக்க வந்துட்டா. என்னமோ லட்ச ருபாயை இடுப்பிலே முடிஞ்சு வச்சிருக்கிற மாதிரி!

மங் : அடி ஆத்தே! இந்த வயசிலே இவருக்கு என்ன கோவம் வருது?

கணக்கன் வருகிறார். முதலியார் திட்டுகிறார்.

காட்சி 33

சந்திரன் வீடு திரும்புகிறான். வீட்டில் சரளா இருக்கிறாள். ஓடிப் போய் லக்ஷ்மியை அழைத்து வருகிறாள்.

லக்ஷ் : சந்திரா, ஏம்பா? புறப்படற விவரத்துக்கு ஒரு கார்டாவது போடக் கூடாது?

சந் : கார்டுக்குப் பதில் நானே வந்துட்டேனே.. இது யாரம்மா? குறும்புக்காரப் பெண்!

லக்ஷ் : இவ யாருன்னு தெரியல்லே? உன் பேருக்கு நான் அனுப்பின கடிதங்களெல்லாம் இவ கையாலே எழுதினதுதான்.. நீதான் இவுங்க பெட்டியை ரயில்லேருந்து எடுத்துக் கொடுத்தியாம். அதை ஒரு நாளைக்கு ஆயிரந் தடவை சொல்லுது.

சந் : ஐ ஸீ... அந்த முயல் குட்டி தானு இது? அன்னிக்கு ரயிலே விரட்டிக்கிட்டு இவ ஓடின ஓட்டம்.. ஆ... அடேயப்பா.

லக்ஷ் : இவ அப்பாதான் நம்ம ஊர் போஸ்ட் மாஸ்டர். பக்கத்து வீட்டிலேதான் இருக்காங்க.

போ. மா : சரளா...

லக்ஷ் : அதோ! அவரே வந்துட்டாரு.

போ. மா. : ஏ.. ஏ.. ஏ.. ஏ !!!!

லக்ஷ் : என் மகன் ..சந்திரன்...

போ. மா : ஓ...ஹோ...

சர : அப்பா! அன்னிக்கு ரயில்லேருந்து நம்ம ஸூட்கேஸை எடுத்துத் தந்தாரில்லே!

போ. மா. . ஆ? சரி, சரி, அது தானே கேட்டேன். எங்கேயோ பார்த்த முகமா யிருக்குதேன்னு? பரிக்ஷையெல்லாம் நல்லாத்தான் எழுதியிருப்பே... கேட்கணுமா? ...ம் கொஞ்ச நாளாவது இங்கே இருப்பே இல்லே?

சந் : ஓ. இனி ரெண்டு மாசம் இங்கேதான் காம்ப்!

போ. மா. : தம்பி! பக்கத்து விட்டுக்காரன்னு நினைக்காதே! இந்தப்

பொண்ணுக்கு உங்க விடுதான் ஜாகை! உங்கம்மாவை வீட்டு ஒரு நிமிசம் கூடப் பிரியறதில்லே! சாப்பாடு, படுக்கை எல்லாம் இங்கே தான்! லக்ஷ்மி! இவளைச் சும்மா விடாதே! ஓஞங்கா வாடகை வாங்கிப்பிடு! என்ன?...ஆ வரட்டுமா?

லக்ஷ : சந்திரா! போய்க் குளிச்சிட்டு வா! சமையல் பண்ணிட றேன்.

காட்சி 34

ஒருவனுக்கு பணம் பாக்கி என்பதற்காக வீட்டிலேயே திருடுகிறுன் சேகர். முதலியார் திருடனென்று பிடித்ததால், தள்ளி விட்டு ஓடி விட்டான். மண்டையிலடிபட்டு விழுந்த முதலியார் திருடன் தன் மகன் சேகர் என்பதை அறிந்து விட்டார். முதலியார் படுக்கையில் கிடந்தார். கட்டிலைச் சுற்றிலும் மங்களம், லக்ஷ்மி சந்திரன், சாந்தா, கணக்கன் ஆகியோர் துயரம் தோய்ந்த முகத்துடன் நின்றனர்.

முதலியாரின் நெற்றியிலே பாண்டேஜ் கட்டி, முடிச்சிட்ட பிறகு டாக்டர் நிமிர்ந்தார். கணக்கன் அவரது பெட்டியை எடுத்துக் கொண்டார்.

சந்திரனை நோக்கினுர் டாக்டர்.

டாக : பயப்படும்படியாக ஒன்றுமில்லை. நான் மருந்து கொடுத்தனுப்புகிறேன்.

கணக்கன் பின் தொடர டாக்டர் வெளியே நடந்தார்.

லக்ஷ : (மங்களத்தினிடம்) சேகர் எங்கே அண்ணி?

மங் : டாக்டரை அழைச்சுக்கிட்டு வரப் போனுன்.

லக்ஷ்மி முதலியார் அருகில் வந்தாள்.

லக்ஷ : அண்ணு! வலி ரொம்ப இருக்குதா?

முத : இப்பொ கொஞ்சம் தேவலைம்மா!

லக்ஷ : தன்னந்தனியாப் போய் திருடனைப் பிடிக்கலாமா? அவன் கையிலே ஏதாவது ஆயுதமிருந்தா என்ன ஆகி இருக்கும்?

மங் : சேகரையாவது கூப்பிட்டிருக்கக் கூடாதா? அவனும் அப்பொ இங்கே தான் இருந்தான்.. நம்ம போறாத வேளை! அதைத் தான் சொல்லணும்!

சந் : இதை லேசா விட்டுடக் கூடாது; போலீஸிலே ரிப்போர்ட் கொடுத்து திருடன் யார் என்பதை எப்படியும் கண்டு பிடிக்கத்தான் வேணும், மாமா!

முத : வேண்டாம்ப்பா! இந்த அடியும் அதிர்ச்சியும் என்னுேடவே போகட்டும்!

யாவரும் செல்கின்றனர். முதலியாரின் மனச்சாட்சி பேசுகிறது.

குர : சதாசிவம்! எவ்வளவு கௌரவமாக வாழ்ந்தவன் நீ! உன் மகனின் நன்மைக்காக எவ்வளவோ பாடு பட்டாய். பலன் என்ன? கவலை தாங்காமல் படுத்திருக்கிருய். உன் முடிவு நெருங்கி விட்டது. யோசித்துப் பார் கஷ்டப்பட்டு நீ சம்பாதிச்ச இந்த சொத்துக்களெல்லாம் கேடு கெட்ட உன் மகன் கையில் சிக்கினுல்...?

முத : குடும்பம் நாசமாப் போயிடுமே...

குர : அந்தக் குழந்தை சாந்தா! நான் உயிரோடிருக்கும் வரையிலும் அவளைக் கைவிட மாட்டேன் என்று சந்திரனுக்கு வாக்குக் கொடுத்தாயே அந்த வாக்கை உன் மகன் காப்பாற்றுவானு?...

முத : மாட்டான்.. காப்பாத்தவே மாட்டான்..

குர : அப்படியானுல்...சாந்தாவின் சந்தோஷத்துக்காக, குடும்பத்தின் நன்மைக்காக ஆகவேண்டியதை உடனே செய். தயங்காதே ம்... உடனே செய்!

தன் சொத்தில் பாதியை மங்களத்துக்கும் பாதியை சாந்தாவுக்கும் எழுதி வைத்து விடுகிறுர் முதலியார்.

காட்சி 35

சேகரைப் பற்றிய ஏக்கத்திலேயே முதலியார் இறந்து விடுகிறார். அப்போதே சாந்தாவுக்குக் குழந்தை பிறக்கிறது. அவளுக்கு இருமல் இருக்கிறது. அதை க்ஷய ரோகம் எனக் கூறி குழந்தையைப் பிரிக்கிறாள். மங்களம். விஷயத்தைச் சொல்ல சந்திரனிடம் ஓடுகிறான் கணக்கப் பிள்ளை. குழந்தை இறந்து விடுகிறது. சாந்தாவை ஊருக்கு அழைத்துப் போகிறான் சந்திரன். எந்தக் கவலையுமின்றி ஜெயந்தி வீட்டிலே கிடக்கிறான் சேகர்.

ஜெய: எனக்கு மட்டும் அந்த உணர்வு இல்லையா? இன்று வரை இதுபோல் மகிழ்ச்சி என் நெஞ்சில் பிறந்ததே இல்லை.

சேக: இனி எப்போதும் அது மறையாது ஜெயந்தி! காலம் மாறினாலும் நம் காதல் மாறாது!

ஜெய: ஆம்! நாம் இறந்தாலும் நம் காதல் இறக்காது.

விக்: சேகர்!

சேக: வந்துட்டாரு. பூசை வேளையிலே கரடி மாதிரி!

சேகரை அழைத்துச் செல்கிறான் விக்ரம். சேகரிடம் சாந்தாவை ஒழித்து விடும்படி யோசனை கூறுகிறான் விக்ரம்.

* * *

தாயிடமிருந்து நிலத்தைப் பெற்று அதையெல்லாம் விற்று அவளை நிர்க்கதியாக விட்டு விடுகிறான் சேகர்.

காட்சி 36

சந்திரனும் கோபாலும் பேசிக் கொண்டிருந்தனர். பந்தல் நிர்மாண வேலையில் சிலர் ஈடுபட்டிருந்தனர்.

கோபா: சந்திரா! என்ன இருந்தாலும் நம்ம பி. எம். பலே ஆளப்பா! சும்மாவா, சாப்பாட்டுச் செலவைக் கூட உன் தலையிலே சுமத்திட்டாரு!

சந்: அப்படியில்லே; அவர் ஒண்டி ஆளு. அதனாலேதான் எல்லா ஏற்பாடுகளையும் நான் கவனிக்கிறேன்.

லக்ஷ: ஏம்ப்பா! சாப்பாடு, ஸ்னானம் எதுவுமே வேண்டாமா? புது மாப்பிள்ளை கல்யாணத்தன்னிக்கு உபவாசம் இருக்கணுமின்னு யாராவது சொன்னாங்களா? கோபால் நீ வாப்பா. ஆ சந்திரா!

சந்: என்னம்மா?

லக்ஷ: அண்ணி கார்த்தாலேயே வரேன்னு சொல்லியிருந்தாங்க. இன்னும் காணோமே.

கோ: ஒரு வேளை ஜுரம் ஜாஸ்தியா இருக்குமோ?

லக்ஷ: எதுக்கும் நான் போய்ப் பார்த்திட்டு வரேன்.

சந்: அம்மா! சாந்தாகிட்டே காபி கொண்டு வரச் சொல்லி ஆறு மாச மாகுது; சீக்கிரம் வரச் சொல்லு!

கோ: இந்தாப்பா! ம்...ம்...ஜல்தி ஆகட்டும்.

குமாஸ்தா சுப்பு வந்தான்.

சந்: என்ன சுப்பு! 203, 352 ரெண்டுக்கும் பெடிஷன் கொடுத்துட்டீங்களா?

குமாஸ்தா: ஸார்! ஒரு முக்கிய விஷயம்; உங்க மாப்பிள்ளை சேகருடைய வீட்டை ஜப்தி செய்யும்படி உத்திரவாகி இருக்குது. அம்மா எல்லாரும் போயிருக்காங்க!

சந்: (திடுக்கிட்டு) என்ன, ஜப்தியா?

குமா: ஆமா! வட்டிக் கடை நாராயணபிள்ளை செய்த வேலை.

கோபால் நாற்காலியிலிருந்தான். சிந்தனை மேலிட சந்திரன் அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்தான்; சுப்பு அருகில் நின்றான்.

சுப்: நம்ம ராமானுஜ நாயுடு தாங்க அம்மா!

கோ: சே! கேட்கிறதுக்கே கஷ்டமா இருக்கே!

லக்ஷ: நான் அண்ணியைப் போய்ப் பார்த்திட்டு வரேன், சந்திரா!

சந்: அம்மா! சேகர் வாங்கின ஏதோ கடனுக்காக அவுங்க வீட்டை ஜப்தி பண்ணப் போறுங்களாம்!

சாந்தா இதைக் கேட்டுக் கலங்கி போனுள்.

லக்ஷ: அழாதேம்மா! என்னைப் பிடித்த துரதிருஷ்டம் உன்னையும் எல்லோரையும் ஆட்டிவைக்கிறது ஐயோ! எவ்வளவு செழிப்பா இருந்த குடும்பம்! அண்ணன் போனப்புறம் அந்த வீடும் சூனியமாப் போச்சே!!!

சாந: (தலைநிமிர்ந்து) அம்மா! எனக்கெதுக்கு பாதி சொத்து? அவர் தவிக்கும் போது... (அழுதாள்)

லக்ஷ: மனசைத் தளரவிடாதேம்மா! அவுங்களுக்கில்லாத எந்த சொத்தும் நமக்கு வேண்டாம்; தைரியமாயிரு; அண்ணன் போயிருக்கான்; ஒரு ஆபத்தும் வராமே கவனிச்சிப்பான்!

காட்சி 37

மங்களத்தின் வீடு ஜப்திக்குத் தயாராகிறது.

வேதனை வழிந்தோடும் பார்வையோடு அமீனவை நோக்கி மங்களம் பேசிக் கொண்டிருந்தாள். அமீனு அவளை நோக்கி நின்றுன். மங்களம் அருகே கணக்கன் நின்றுர். நாராயண பிள்ளை, போலீஸார், அமீனு.

மங: மாட்டேன்! ஒரு நாளும் வெளியே போகமாட்டேன். செத்தாலும் சரி. போகமாட்டேன்...

அமீனு: அம்மா! இது சர்க்கார் உத்திரவு.

மங: (நாராயண பிள்ளையை நோக்கி) நீ கூடவா இப்படிச் செய்தே? இந்த மாதிரி எங்கிட்டே நடந்துக்கிட்டியே! நீ உருப்படவா போறே?

நாரா: அம்மா! நான் ஒண்ணும் சும்மாச் செய்யல்லே; சுளை சளையா உங்க மகனுக்கு பணத்தை எண்ணிக் கொடுத்திருக்கேன்; மறந்திடாதீங்க!

மங: அதுக்கு அவனைப் போய்க் கேக்கிறதுதானே? இதுஎன் சொத்து; இதை விட்டு நான் போகவே மாட்டேன்.

போலீஸ்: அம்மா! பிடிவாதம் செய்யாமே போறீங்களா; இல்லே, நாங்கதான் வெளியே கொண்டு விடணுமா?

அவர்கள் சும்மா யிருப்பார்களா? சிப்பாய் கதவைப் பூட்டினுன்; தாங்க முடியாத வேதனையோடு மங்களம் நோக்கினுள்; நினைவிழந்து கீழே சாய்ந்தாள். கீழே விழுந்து கொண்டிருந்த அவளை கணக்கன் தாங்கிப் பிடித்துக் கொண்டார்.

மங்களம் லக்ஷ்மியின் வீட்டுக்கு வருகிருள்.

மங்களம் சிறியதொரு திண்டின் மீது சாய்ந்திருந்தாள்; துயரம் தோய்ந்த தோற்றத்துடன் லக்ஷ்மி அருகில் நின்ருள். விம்மிக் கொண்டே,

மங: லக்ஷ்மீ—உன்னையும் உன் குழந்தைகளையும் இந்தச் சண்டாளி உயிரோடு வதைச்சேனே! என்னை மன்னிச்சிடு லக்ஷ்மீ. என்னை...

லக்ஷ: அண்ணி! கஷ்டமும் கண்ணீரும் நிறைஞ்ச அந்த நாளையெல்லாம் நான் எப்பவோ மறந்துட்டேனே!...அண்ணி...இது உன் வீடு... இங்கே நீ சந்தோஷமா இருக்கலாம்.

மங: கண்ணே! உன் முகத்தைப் பாக்கக்கூட இந்தப் பாவிக்கு யோக்யதை இல்லேம்மா! ஒரு பாபமுமறியாத உன்னைக் கலங்கடிச்சுக் கண்ணீர் விட்டுக் கதறச் செய்தேனே, அதுக்காக ஆண்டவன் என்னை சும்மா விடல்லே. அனுதையைப் போல ஒன் ஆதரவிலே வந்திருந்து, ஒன் கையாலேயே ஒரு பிடி சோறு வாங்கிக் சாப்பிடும்படிச் செய்துட்டாரம்மா...

சாந: மனசைத் தளர விடாதீங்கம்மா. நாங்க இருக்கிற வரைக்கும் அனுதைங்கிற வார்த்தையே நீங்க பேசப்படாதம்மா! உங்க சந்தோஷமும் நிம்மதியும்தாம்மா எங்க சந்தோஷம்...

மங: ஐயோ! என் மகன் மட்டும் நல்லா இருந்தா? உன் தங்கமான

குணத்திலே ஆயிரத்திலொரு பங்காவது அவனுக்கிருந்தா...

லக்ஷ : ஏன் இல்லே? கலங்கின தண்ணி தெளியாமலே போயிடுமா?

சாந் : ஆமாம்மா! எப்பவுமே அவர் திருந்த மாட்டாரா? கறை பிடிச்ச இரும்புகூட நிமிஷநேரத்திலே பிரகாசமாயிடும்மா..

மங் : நானும் அப்படித்தாம்மா நினைச்சேன்; அந்த நினைப்பிலேதான் அவன் நாசத்தையெல்லாம் மறைச்சு வச்சு அன்பு காட்டினேன்.. அதுக்கு சரியான பலன் கிடைச்சுப் போச்சு. ஐயோ .. இனிமேயாவது அவன் திருந்துவானு? உனக்காகவாவது கடவுள் அவனுக்கு நல்ல புத்தி கொடுப்பாரா?

போ. மா. : நேரமாகுது லச்சுமி.. ஓ நீங்களா. .ஆ. மங்களமான சமயத்திலேதான் வந்திருக்கிங்க. ஆ-ஆ. எல்லாம் வாங்க. முகூர்த்த வேளை நெருங்குது...

லக்ஷ : வா. அண்ணி!

முன்னுல் நடந்தாள், மங்களம் எழுந்தாள். நாதஸ்வர இசை உயர்ந்தது.

காட்சி 38

சேகருக்குப் புத்தி சொல்கிருர் கணக்குப்பிள்ளை.

கண : நான் சொல்றது உனக்குப் பிடிக்காமே இருக்கலாம, அன்னிக்கு இதேபோல ஏதோ சொன்னதுக்காக என் ரெண்டு கன்னத்திலும் கைவச்சே! இதா.. வேணும்னு இப்பவும் அடி, ஆனு நடந்த அனியாயங்களை மட்டும் என் நெஞ்சு லேசா மறக்காதப்பா! கண்டவங்க கழுத்திலே கையைப் போட்டு நடக்கும் மானங்கெட்ட ஜயந்திக்கு மாளிகை! பத்து மாசம் சுமந்து பாடுபட்டுப் பெத்த தாய்க்கு நடுத்தெருவு.. முதலியாரையா தேடின சொத்தை அனுபவிக்கிறது ஜெயந்தி. கண்ணை விட மேலா உன்னை நேசிச்ச அந்தக் குழந்தை சாந்தாவுக்கு கண்ணீரும் துக்கமும்! அவ கால் தூசிக்கு அந்த விபசாரி விலை பெறுவாளா தம்பி?

சேக : போதும்! என்னை வதைக்காதே!

கண : இதுவா மரியாதை இதுவா பெருமை? எங்கே தம்பி விக்ரமன்? யாரையும் காணுமே! அன்னிக்கு நீயும் அந்த அயோக்கியனும் சேர்ந்து அடிச்சு அவமானப் படுத்தினீங்களே, அதே சந்திரன் தான் ஆபத்து வேளையிலே கடவுளைப் போலவந்து ஆறுதல் சொல்லி உங்கம்மாவைத் தன் வீட்டுக்கு அழைச்சிட்டுப் போனன், அந்த வயத்திலே பொறந்த நீ செய்ததென்ன? உனக்காகத் தன் வாழவையே அர்ப்பணம் செய்த அந்த தாயாருக்கு நீ செய்த கடமைதான் என்ன? அவுங்க மனசிலே ஏக்கமும் வெறுப்பும் இருக்கும் வரை உனக்கு விமோசனமே கிடையாது. போ! அந்தப் பொன்னுன பாதங்களில் விழுந்து உன் கறையை போக்கிக் கொள்! அம்மா அம்மா என்று ஆயிரந்தடவை அலறி, உன் கண்ணீரை அவுங்க பாதங்களில் கொட்டி மனதை சுத்தப் படுத்திக் கொள்! போ! ..

சேகருக்கு மனப்போராட்டம். சாந்தாவின் கடிதம் அவன் கையிலே.

அத்தான் !

கலங்கிய விழிகளோடு எழுதுகிறேன். உங்கள் வீட்டை ஜப்தி செய்யப் போகிருர்கள் என்று கேட்டதும் நானடைந்த வேதனையை எப்படிச் சொல்வது? கடன்காரனுவி அவமானத்தையும் துக்கத்தையும் தாங்கள் நெருங்கும்போது தங்கள் சொத்தில் பாதி என்னிடமிருப்பதா? இல்லை, தங்களுக்குதவாத எதுவுமே எனக்கு வேண்டாம்...அத்தான்! தங்கள் கண் கலங்கினுல் என் உயிரே துடிக்குமே? அருகிலிருந்து ஆறுதல் சொல்ல, என் புன்சிரிப்பால் தங்கள் கவலைபோக்க ஐயோ! அந்த பாக்யம்கூட எனக்கில்லையா? போதும்.. இனியும் இந்த வேதனையை என்னுல் தாங்க முடியாது! வாருங்கள்...ரத்தம் சொட்டும் விழிகளோடு காத்திருக்கிறேன்...

சேக : சாந்தா!

குரல் : ஏன் அழைக்கிருய்? கேடுகெட்ட உனக்கு அவள் பெயரைச் சொல்ல என்னடா யோக்கியதை? அழிந்து போகும் அற்ப சொத்துக்காக

யிரங்காலத்துப் பயிரை அழிக்க னைத்தாயே! சேகர் கை நீட்டிக் ஏ களடா! புன்சிரிப்போடு தருவா ஜ ா! கேடுகெட்டவனே! உன் ரத்த வெட்டைக்கு முடிவுகட்டு. உத்தமி யின் உயிரைக் காப்பாத்து. விக்ரம னைத் தடுத்து நிறுத்து. தடுத்து நிறுத்து...போ!

சேக: சாந்தா!

ஓடுகிறான் ஜெயந்தியிடம்.

ஜெய: அதோ சேகர்!

விக்: அவனுக்கென்ன வேலை இங்கே?

ஜெய: ஆமா! பேச்சிலே மட்டும் பெரிய புலி! எத்தனை நாளைக்குத் தான் இப்படி பயப்படப் போறீங்க ளாம்? நான் வேணும்னு சேகர் கிட்டே எல்லாத்தையும் துறந்து சொல்லிடறேன்!

விக்: பொறு ஜெயந்தி! இன்னும் ஒரே ஒரு சீன் பாக்கி!. அதுவும் இன்னிக்கு ராத்திரிக்குள்ளே முடிஞ் சிடும்!

ஜெய: ஆமா! சேகரைப் போல முட்டாளை நான் பார்த்ததே இல்லே: பணமோ காசோ இல்லைன்னாலும் கொடுக்கலாம்! மூளைக்கு எங்கே போறது?

விக்: சொத்து, வீடு போன வழி யிலே அதுவும் போயிடுச்சு!

ஜெய: இனிமே அவருக்கு எது வேணும் தெரியுமா?

விக்: ஓ! ஒரு முழம் கயிறு!

சேகர் வருகிறான்.

சேக: ஆமா! ஒரு முழங் கயிறு உங்கையிலேதான் வாங்க வந்திருக் கேன்.

ஜெய: என்ன இது?

சேக: சீ!

விக்: ஏய்! தொடாதே!

சேக: தொட்டா?

44 ஆண்டுகளாக
புகழ் பெற்ற
மேரிராம்
பற்பொடி
சகலவித தந்த நோய்களையும்
அறவே ஒழிக்க வைத்திய
முறைப்படி தயாரிக்கப்படுகிறது.
தயாரிப்பவர்கள்:
ஆர். எஸ். பதி அண்டு கோ.
(REGD.)
214 & 215, மேலமாசி வீதி • மதுரை

சண்டை ஆரம்பமாகிறது. சேகர் விக்ரமனைக் கொன்று விடுகிறான். ஜெயந்தியையும் கொன்று விடுகிறான். போலீஸ் தொடருகிறது.

விக்ரமின் ஆட்கள் மங்களத்தைக் கொன்று விடுகின்றனர். சேகர் ஓடி வருகிறான்.

சேக: அம்மா! உன் பொன்னான பாதங்களில் தலைவைத்து மன்னிப்புக் கேட்கும் பாக்கியம்கூட இல்லாமல் போய் விட்டதே! ஐயோ! மகனை நினைத்து மகிழ வேண்டிய நெஞ்சிலே, அவன் மடி மீது தலைவைத்து கண்மூட வேண்டும் என்று துடி துடித்த நெஞ்சிலே ரத்தமும் புண்ணும் வழிந்தோடச் செய்து விட்டேனே! பாரம்மா! இனி ஒரு நாளும் உன் பேச்சைத் தட்ட மாட்டேன் ஒரு தப்பும் செய்யமாட்டேன் பாரம்மா!

போலீஸார் வந்து அவனை கைதாக்குகின்றனர்.

சாந்: என்ன இது?

இன்ஸ: மர்டர். முதல்லே விக்ரமனும் ஜெயந்தியும்... இப்பொ...

சேக: ஆம்! இதையும் நான்தான் செய்தேன்...

89677

காட்சி 39

சேகர் சிறையிலே நிற்கிறான். சாந்தா அழுகிறாள்.

சேக: அழாதே சாந்தா! எனக்காக ஏன் கண்ணீர் வடிக்கிறாய்?

தமிழ்ப் பெரியார்
திரு. வி. க. அவர்களின்
போட்டோப் படம்
திரு. வி. க. அவர்கள் இறைவனடி சேர்வதற்குச் சில மாதங்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட அவர்களின் புகைப்படம். தபால் கார்டு சைஸ் 1 பிரதி விலை ரூ 1-2-0 (தபால் செலவு உள்பட) உடனே எழுதுக.
ராமநாத் பிரஸ், சென்னை-14.

தவங்கிடந்தாலும் பெற
அன்பின் உருவம் நீ! அதை
ராமல் அறிவு கெட்டு நடந்தே,
மனைவீ என்ற முத்திரையைத்
இந்த மடையன் உனக்கெதை
தான்? எத்தனையோ தடவை
புப் பிச்சை கேட்டு இதயம் நொ
என் கால் பிடித்து நீ கதறினாய்.
கத்தைவிட முரடனாக நடந்து வெ
டேனே! உன்னிடம் மன்னி
கேட்கக்கூட எனக்கு உ
இல்லை... இல்லை.

சாந்: அப்படிச் சொல்லாதி
அன்றும் இன்றும் நீங்கள்தான்
தெய்வம்...

சேக: இத்தனை நாளும்
பாதையில் நடந்துகொண்டிருந்
அன்பு தீபமாகிய நீ காட்டும் வெ
சத்தில் இனி என் பாதை த
முடியுமானால் எனக்காக ஏழுவ
கள் காத்திரு.

சாந்: ஏழு வருஷங்களல்ல
தனை யுகங்கள் வேண்டுமா
காத்திருப்பேன். ஆனால் அ
யில்லாத இந்த நாட்கள்...

சேக: போ சாந்தா! உன
தல் சொல்லக் கூட நான் சக்தி
வன்...

சாந்: மாட்டேன். என்
விளக்கை இருட்டறையிலே
நான் மட்டுமே...

சேக: சந்திரா! நீதான
உண்மையான மனிதன். உன் ப
பட்ட மண்ணின் பெருமைகூட எ
கில்லை. கேடு கெட்ட இந்த ம
னிடம் நீ காட்டும் கருணை...

வார்டன்: ஸார்! டைம்!

சந்: எஸ்! கமிங்... எங்கள் வாழ
வில் இருள் சூழ்ந்திருக்கலாம்; ஆன
நீ திரும்பிவரும் அந்த நாளை எதி
பார்த்து நாங்கள் பொறுமையோட
ருப்போம்...

சேக: ஆம்... திரும்பி வருவேன்
ஒளி நிரம்பிய ஒருநாள்... புது சேகரா
புது மனிதனாக... நான் திரும்பி வரு
வேன்.

எதிர்கால இன்பத்தை நினை
துச் சிறைக்குள்ளே திரும்புகிற
மனம் மாறிய சேகர்.